# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 தை 17 திங்கட்கிழமை (31.01.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 066





3 யாழ். பல்கலையில் கதகளி





12 புதிய சிந்தனை தேவை





14 உயிர்கொல்லும் எயிட்ஸ் நோய்





24 திறமையை வெளிப்படுத்தினால் கிண்ணம் இந்தியாவுக்கு





25 கலைந்தது இங்கிலாந்தின் கனவு


# கூட்டமைப்புக்குள் குழப்பம் என்று கூறி அரசியல் லாபம் பெற சில சக்திகள் முயற்சி

## மாவை, சுரேஷ் தெரிவிப்பு





கொழும்பு, ஜனவரி 31

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் எந்தக் குழப்பமும் இல்லை. தலைமைத்துவப் போட்டியும் இல்லை. உள்ளூராட்சித் தேர்தல் சமயத்தில் கூட்டணிக்குள் குழப்பம் எனத் தெரிவித்து அரசியல் இலாபம் பெற சில சக்திகள் முனைகின்றன எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவிக்கின்றது.**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் குழப்பம் ஏற்பட்டுள்ளது என்றும் - தலைமைத்துவப் போட்டி உக்கிரமடைந்துள்ளது என்றும் - அரச ஊடகங்களில் செய்தி வெளியாகியிருப்பது குறித்து கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோரிடம் கேட்டபோதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

வடக்கு - (04 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய வெளியுறவுச் செயலர் இன்று ஜனாதிபதியுடன் சந்திப்பு



கொழும்பு, ஜன. 31

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் படுகொலை செய்யப்படும் விவகாரம் குறித்து இந்திய வெளியுறவுச் செயலர் நிருபமா ராவ் இன்று இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரைச் சந்தித்துப் பேச்சு நடத்துவார்.

வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸுடனான சந்திப்பு காலை 9.45 மணிக்கு வெளிவிவகார அமைச்சில் நடைபெறும்.

இந்திய வெளியுறவுச் செயலர் நிருபமா ராவ் நேற்று கொழும்பு வந்தடைந்தார். இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் படுகொலை (04 ஆம் பக்கம் பார்க்க)

# படையினரின் பலத்த பாதுகாப்புடன் கே.பி. நேற்று யாழ்ப்பாணம் வருகை

### 4 நாடுகளைச் சேர்ந்த 15 உறுப்பினர்களுடன் பல இடங்களுக்கு விஜயம்



யாழ்ப்பாணம், ஜன. 31

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் சர்வதேச விவகாரப் பொறுப்பாளரும், தற்பொழுது அரசுடன் சேர்ந்து இயங்குபவருமான கே.பி. எனப்படும் குமரன் பத்மநாதன் நேற்று இராணுவத்தின் பலத்த பாதுகாப்புடன் யாழ்ப்பாணம் வந்தார்.

கே.பியுடன் பிரிட்டன், அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கனடா ஆகிய நாடுகளைச் சேர்ந்த 15 பேர் யாழ்ப்பாணம் வந்திருந்தனர்.

இவர்கள் நேர்டோ (NERDO) எனப்படும் தொண்டு நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள். நேர்டோ நிறுவனத்தின் இலங்கைக் கிளைச் செயலாளராக கே.பி. செயற்படுகிறார் என்று தெரிவிக்கப்படுகிறது.

கே.பி. தலைமையிலான இக்குழுவினர் வெள்ளி, சனி ஆகிய இரு தினங்களும் வன்னிப் பகுதிக்குச் சென்று மக்களைச் சந்தித்தனர்.

இவர்கள் நேற்று யாழ்ப்பாணத்தில் யாழ். கட்டளைத் தளபதியைச் சந்தித்ததுடன் யாழ். ப.நோ.கூ. சங்கக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற யாழ். பல்கலைக்கழக (04 ஆம் பக்கம் பார்க்க)

## அரசுக்கு எதிராக கொழும்பில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜன. 31

அரசிற்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்வரும் 9 ஆம் திகதி கொழும்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை ஐக்கிய தேசிய கட்சி நடத்தவுள்ளது என்று அக்கட்சியின் தலைவருர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கம்பஹா மாவட்டத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு அறிவிப்பை விடுத்திருந்தார்.

அரசிற்கு (04 ஆம் பக்கம் பார்க்க)

## ஈழ அகதிகளின் உண்ணாவிரதம் தொடர்கிறது

கொழும்பு, ஜன. 31

தமிழகம், செங்கல்பட்டு திறந்த வெளி அகதிகள் முகாமில் தங்கியிருப்பதற்கு அனுமதி கோரி இலங்கைத் தமிழ் அகதிகள் 18 பேர் நேற்று 4 ஆவது நாளாகவும் தொடர் உண்ணாவிரதம் இருந்தனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுகுறித்து மேலும் தெரியவருபவை (04 ஆம் பக்கம் பார்க்க)

# குடாநாட்டில் நடந்த குற்றச் செயல்களின் சூத்திரதாரிகள் இனங்காணப்பட்டுள்ளனர்

### யாழ். படைகளின் தளபதி ஹத்துருசிங்க தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.31

கடந்த சில வாரங்களாகக் குடாநாட்டில் இடம்பெற்ற குற்றச் சம்பவங்களில் ஒரு சம்பவம் தவிர்ந்த ஏனைய சம்பவங்கள் குறித்த விசாரணைகள் பூர்த்தியாகியுள்ளன. சம்பவங்களின் சூத்திரதாரிகளும் இனங்காணப்பட்டுள்ளனர்.

யாழ். படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

'கே.பி.' என்றழைக்கப்படும் குமரன் பத்மநாதன் தலைமையிலான 'நேர்டோ' தொண்டு அமைப்பின் பிரதிநிதிகளுடன் நேற்று நடத்திய சந்திப்பில் இதனை தளபதி தெரிவித்துள்ளார்.

கே.பி தலைமையில் அந்த அமைப்பின் சர்வதேசக் கிளைகளின் 15 பிரதிநிதிகள் பலாலியில் தளபதியைச் சந்தித்து (04 ஆம் பக்கம் பார்க்க)

# அப்பாவி மக்களைக் கொன்ற குற்றச்சாட்டில் இராணுவ அதிகாரிகள் சிலர் கைதாகியிருந்தனர்

### இறுதிக் கட்ட யுத்தத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து சவேந்திர சில்வா

கொழும்பு, ஜன. 31

இறுதி யுத்தத்தின்போது அப்பாவி மக்களைக் கொலை செய்த குற்றச்சாட்டின் பேரில் இராணுவ அதிகாரிகள் சிலர் கைதாகியிருந்தனர். எனினும், இராணுவத்தைப் பொறுத்தளவில் யுத்தத்தில் சிக்கியிருந்த மக்களின் பாதுகாப்புக் கருதியே இராணுவம் முழு அளவில் செயற்பட்டது.

- இவ்வாறு ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான பிரதி நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில், பிரேமிங்ஹாம் தேவாலயத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து அவர் உரையாற்றினார்.

அவரது உரையிலிருந்து கேள்வி நேரத்தில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு சவேந்திர சில்வா தெரிவித்தார்.

''வெள்ளைக் கொடியுடன் வந்தவர்களைச் சுடுமாறு நீங்கள் (சவேந்திர சில்வா) உத்தரவிட் டீர்களா என்று அந்த நிகழ்வில் கலந்து கொண்ட வின்செஸ்டரைச் சேர்ந்த சுப சுந்தரலிங்கம் என்பவர் கேள்வி எழுப்பினார்.

''இப்படியான கேள்வி ஒன்றை எழுப்புவதற்கு உங்களுக்கு உள்ள துணிச்சல் குறித்து மகிழ்ச்சியடைகிறேன்'' என்று தெரிவித்த சவேந்திரசில்வா -

அப்பாவி மக்களைக் கொன்ற குற்றச்சாட்டின் பேரில் இராணுவ அதிகாரிகள் கைதானது குறித்து பிரஸ்தாபித்தார்.



இந்த நிகழ்வின் போது தம்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களையும், (04 ஆம்பக்கம்பார்க்க)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம்: 021 2229933
தொலைநகல்: 021 2229944
செய்தி/படங்கள்:
021 5679933
021 5679944
விளம்பரம்: 021 5671111
விநியோகம்: 021 5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் இடி மின்னலுடன் கூடிய காலநிலை நிலவுவதற்கான 30% சாத்தியம் உள்ளது.

# உறவுகளை இழந்த நிலையில் அவலங்களுடன் வாழ்நாளைக் கழித்துவரும் வன்னி மக்கள்

## அவர்களுக்கு உதவுவதே எனது இலட்சியம் என்கிறார் கே.பி.

யாழ்ப்பாணம், ஜன. 31

யுத்தத்தில் உறவுகளை இழந்த நிலையில் வன்னி மக்கள் தமது வாழ்வை அவலங்களுடனும், துன்பங்களுடனேயுமே கழித்து வருகின்றார்கள். இதை நான் நேரடியாகவே நேற்று (சனிக்கிழமை) அங்கு சென்று பார்வையிட்டேன். அவர்களுக்கு நிறைய உதவிகள் தேவைப்படுகின்றன. அவர்களுக்கு உதவுவதே என்து இலட்சியம்.

- இவ்வாறு கூறினார் கே.பி.

பல்கலைக்கழக மாணவர்களுக்கான உதவி வழங்கும் நிகழ்வை, கே.பியினால் நிர்வகிக்கப்படும் 'நேர்டோ' அமைப்பு யாழ். நகரில் யாழ். ப.நோ.கூ. சங்க மண்டப கேட்போர் கூடத்தில் நேற்று ஒழுங்கு செய்திருந்தது.

இந்த நிகழ்வில் முக்கிய விருந்தினராக விடுதலைப்புலிகளின் சர்வதேச விவகாரங்களுக்கான முன்னாள் பொறுப்பாளரும், தற்போது அரசுடன் சேர்ந்து இயங்குபவருமான கே.பி. என்றழைக்கப்படும் குமரன் பத்மநாதன் கலந்துகொண்டு உரையாற்றினார்.

அவர் உரையில் மேலும் தெரிவித்தவை வருமாறு:

யுத்தத்தினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டு துவண்டு போயிருக்கும் வன்னி மக்களுக்கு மறுவாழ்வளிப்பதே எனது இலட்சியம். வன்னி மக்களின் அவல நிலைகளை வார்த்தைகளால் சொல்லமுடியாது. அவற்றை போக்குவதற்காக எமது அமைப்பு பல்வேறுபட்ட உதவிகளை மேற்கொண்டு வருகின்றது.

30 வருட யுத்தத்தில் குடாநாட்டு மக்களும் பாதிப்படைந்துள்ளனர். சமூக ஆர்வலர்கள் என்னுடன் தொடர்பு கொண்டு உதவுமாறு கோரினார்கள். வடமராட்சியில் நாம் எமது கிளை நிறுவனத்தை நிறுவி அதன் மூலமாகத் தொண்டுகளை மேற்கொள்ள உள்ளோம்.

கல்வி மனிதனைப் பூரணமாக்கும். அதனால் தான் நான் இன்று இந்தப் பல்கலைக்கழக மாணவர்களுக்கு உதவி செய்ய முன்வந்தேன்.

வன்னி மக்கள் யுத்தத்தில் தமது உறவுகளை இழந்துள்ளனர். இழந்த உயிர்களை திருப்பிக்கொடுக்கமுடியாது. எனவே அவர்களுக்கு நான் தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க இருக்கிறேன். எனது நிறுவனத்தின் ஊடாக இவற்றை நான் மேற்கொள்ளத் திட்டமிட்டிருக்கினேற். - என்றார்.

(ஒ-15-313)

# முறுகல் நிலை காரணமாக தனியார் பஸ் சேவை பாதிப்பு


கொழும்பு, ஜன.31

சிலாபம் - கொழும்பு, நீர்கொழும்பு - சிலாபம் தனியார் பஸ் ஊழியர்களுக்கிடையே ஏற்பட்டுள்ள முறுகல் நிலையை பொலிஸார்தான் தலையிட்டுத் தீர்த்துவைக்கவேண்டும். இது தொடர்பாக பொலிஸாருக்கு அறிவித்துள்ளேன்.

- இப்படித் தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரட்ன நேற்றுத் தெரிவித்தார்.

கொழும்பு- நீர்கொழும்பு தனியார் பஸ் ஊழியர்களுக்கும் சிலாபம் - கொழும்பு ஊழியர்களுக்கும் இடையே மோதல் இடம்பெற்றுள்ளது.

இதனையடுத்து சிலாபம் - கொழும்பு 04ஆம் வழி இலக்க தனியார் பஸ் ஊழியர்கள் நேற்றுப் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். தனியார் பஸ் ஊழியர்களுக்கிடையே அண்மையில் ஏற்பட்ட மோதல் சம்பவத்தையடுத்து இதற்குத் தீர்வைப் பெற்றுத்தருமாறு கோரி சிலாபம் - கொழும்பு 04ஆம் வழி இலக்க பஸ் ஊழியர்கள் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.



சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்யும் முகமாக காலி கடற்படையில் சுற்றுலாப் பயணிகள் பெருங்கடலின் மீன்களின் சாகசத்தைக் கண்டு களிக்கும் வகையில் படகுச்சேவை ஒன்றை இலங்கைக் கடற்படை நேற்று ஆரம்பித்து வைத்தது. இதற்கான வைபவம் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் எஸ்.திஸாநாயக்க தலைமையில் இடம்பெற்றது.

# தமிழோசையை நிறுத்த அரசு தடைவிதிப்பு

பி.பி.சி. தமிழ்ச் சேவையை மூடுவது தொடர்பிலான பிரிட்டன் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் திட்டத்திற்கு பிரிட்டன் வெளிவிவகாரச் செயலாளர் தடை விதித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பி.பி.சி. தமிழ்ச் சேவை உள்ளிட்ட ஐந்து மொழி சேவைகளை நிறுத்துவதற்கு ஊடக சேவை திட்டமிட்டிருந்தது.

எனினும், இந்தச் சேவைகளை முடக்க வேண்டாம் என பிரிட்டன் வெளிவிவகாரச் செயலர் வில்லியம் ஹேக் தெரிவித்துள்ளார்.

# இராணுவத்திலிருந்து தப்பியோருக்கு கடவுச் சீட்டு வழங்கப்படமாட்டாது

கொழும்பு, ஜன. 31

இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்கள் வெளிநாடுகளுக்குத் தப்பிச் செல்வதை தடுக்கும் வகையில் அவர்களுக்கு இனிமேல் கடவுச்சீட்டு வழங்கப்படமாட்டாது.

இவ்வாறு குடியகல்வு மற்றும் குடிவரவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அரசின் இப்புதிய தீர்மானத்தின்படி வங்கிக் கடன்களைச் செலுத்தாதவர்களுக்கும் எதிர்காலத்தில் வெளிநாட்டு பயணங்களுக்கான கடவுச்சீட்டுகள் வழங்கப்படமாட்டா.

இவ்வாறானவர்களின் பெயர் விவரங்கள் சேகரிக்கப்பட்டு தற்போதைய கறுப்புப் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளன என்று குடியகல்வு மற்றும் குடிவரவுத் திணைக்கள தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும், அரசுக்கு எதிரானவர்கள், போர்க்குற்றங்கள் தொடர்பான சாட்சியங்களை வைத்திருக்கும் இராணுவத்தினர் ஆகியோர் வெளிநாடுகளுக்கு தப்பிச் செல்வதைத் தடுக்கும் நோக்கிலேயே அரசு இத்தீர்மானத்தை எடுத்துள்ளது என அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இராணுவத்திலிருந்து 50 ஆயிரம் பேர் தப்பிச்சென்றுள்ளனர் என்றும், அவர்களை கைது செய்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றோம் என்றும் இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் உபய மெதவல அண்மையில் தெரிவித்தமை அறிந்ததே.

(ஒ-சி)

# தேர்தல் வன்முறை 3 நாள்களில் ஆறு

உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் தொடர்பில் இதுவரையில் ஆறு முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என தேர்தலை கண்காணிக்கும் பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

இம் முறைப்பாடுகளில் நான்கு முறைப்பாடுகள் ஒரு கட்சி உறுப்பினர்களுக்குள் ஏற்பட்ட தகராறு என அந்த அமைப்பு கூறியுள்ளது.

எதிர்வரும் காலங்களில் இவ்வாறான தேர்தல் வன்முறைகளைக் குறைப்பதற்கு குறித்த கட்சிகள் நடவடிக்கைஎடுக்கவேண்டும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரசாந் ஜயக்கொடி தெரிவித்துள்ளார்.

# நிகழ்வுகள்

### சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜன.31

எழுதுமட்டுவாழ் வடக்கு கலியாணகுளம் பிள்ளையார் ஆலய மண்டலாபிஷேக நிறைவு விழா இன்று திங்கட்கிழமை காலை நடைபெறவுள்ளது.

ஆலயப் பிரதம குரு சோமஸ்கந்தக்குருக்கள் தலைமையில் நடைபெறும் கிரியைகளில் காலை 108 சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது. (ஒ-10-131)

### புதுமை மாதா ஆலயத் திருவிழா

யாழ்ப்பாணம், ஜன.31

கத்தோலிக்க மக்களின் யாத்திரைத் தலங்களில் ஒன்றான குருநகர் புதுமை மாதா ஆலயத் திருவிழா கடந்த 25 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நவநாள்கள் நடைபெற்று வருகின்றது.

நாளை மறுதினம் புதன்கிழமை காலை 6 மணிக்கு திருப்பலியும், மெழுகுவர்த்தி ஆசீர்வாதமும் மாலை 5 மணிக்கு நற்கருணைத் திருவிழாவும் நடைபெறும்.

அதனைத்தொடர்ந்து மறுநாள் வியாழக்கிழமை திருவிழாத்திருப்பலி அதிகாலை 5.15 மணிக்கும், கூட்டுத்திருப்பலி காலை 6.30 மணிக்கும் மாலை திருச்செரூப பவனியும் இடம்பெறும். வெளியிடங்களில் இருந்து திருவிழாத் திருப்பலிக்கு வருகை தரும் பக்தர்களுக்கு தங்குமிட வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. (ற)

### வருடாந்த ஒன்று கூடலும் பிரிவுபசாரமும்

யாழ்ப்பாணம், ஜன.31

நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையால் நடத்தப்படும் வருடாந்த ஒன்று கூடலும் பிரிவுபசாரமும் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு சிரேஷ்ட பொது சுகாதார பரிசோதகர் எல். ஜெபராசா தலைமையில் கொக்குவில் மேற்கு ஆரம்ப சுகாதார நிலையத்தில் நடைபெறவுள்ளது. (ற-313)

### உரை நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜன.31

புனர் வாழ்வும் வலுவூட்டலும் என்னும் தொனிப்பொருளில் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நாவலர் மண்டபத்தில் கலாநிதி ஷமா மேத்ராவின் உரை நடைபெறவுள்ளது. (ற)

### ஆலோசனை சபைக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன.31

சாவகச்சேரி நகரசபையின் நகர அபிவிருத்தி ஆலோசனை சபைக் கூட்டம் நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சபையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். (ற-207)

### முறைசாராக் கல்விப் பிரிவின் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜன.31

யாழ். வலயக் கல்வி அலுவலக முறைசாராக் கல்விப் பிரிவின் சமூகக் கற்கைகள் நிலையத்தின் கண்காட்சியும், புதிய வகுப்புக்கள் ஆரம்பிக்கும் நிகழ்வும் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறவுள்ளன.

ஊரெழு மேற்கிலுள்ள கலா சேஷத்திரா கல்வி நுண்கலை வளாகத்தில் நடைபெறும் நிகழ்வுகளில் ஏற்கனவே விண்ணப்பித்தவர்களும் புதிதாக இணைய விரும்புவர்களும் கலந்துகொண்டு பயிற்சி நெறியில் பங்கு கொள்ள முடியும் என்று அதன் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசுடன் நாம் பலமான நிலையில் பேசுவதற்கு உள்ளூராட்சி தேர்தலில் பெரு வெற்றி அவசியம்

## வேட்பாளர்களுக்கான கலந்துரையாடலில் மாவை

யாழ்ப்பாணம், ஜன.31

தற்போது அரசுடன் இடம் பெறும் பேச்சுக்களில் நாம் பலமான நிலையில் இருப்பதற்கு உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றி ஆதாரமாய் அமையும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் செயலாளரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமாகிய மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் யாழ்.மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களுக்கான கலந்துரையாடல் நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் நேற்று இடம்பெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

வடக்கு- கிழக்குப் பகுதி முழுவதும் தமிழ்த் தேசிய இன அபிலாஷைகளை மீண்டும் உறுதிப்படுத்தக் கூடிய உள்ளூராட்சிமன்றத் தேர்தலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்கொள்கிறது. இந்தத் தேர்தல் மூலம் சகல உள்ளூராட்சி சபைகளில் அதிகாரங்களையும் நாம் கைப்பற்றுவதன் மூலம் எமது மக்கள் மத்தியில் நின்று சேவையாற்றும் வாய்ப்பு எமக்குக் கிடைக்கும்.

அரசுடனான பேச்சுக்கான பேச்சுக்கள் தற்போது இடம் பெற்று வருகின்றது. இந்தப் பேச்சுகளில் நாம் பலமான நிலையில் இருப்பதற்கு உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றிபெறுவது ஆதாரமாய் அமையும். எனவே சகல வேட்பாளர்களும் ஒரே அணியாக நின்று சகல உள்ளூராட்சி மன்றங்களையும் கைப்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் மற்றொரு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான சுரேஷ் பிரேமச்சந்திரன்:

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் நாம் வெற்றிபெறுவது கட்டாயத் தேவையாக இருக்கின்றது. எமது வேட்பாளர்கள் சகல உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாகங்களையும் கைப்பற்றுவதன் மூலம் அந்தந்த பிரதேசங்களின் அபிவிருத்திகளை கட்டம் கட்டமாக மேற்கொள்ள முடியும். இவ்வாறான எமது பிரதேசத்தின் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு புலம்பெயர் தமிழர்கள் உதவத் தயாராக உள்ளனர். இந்த வாய்ப்பை நாம் பயன் படுத்திக் கொள்ள வேண்டும். அரசும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனே பேச வேண்டிய சூழ்நிலை இந்தியா, சர்வதேச சமூகம் போன்றவற்றின் தலையீடு காரணமாக எழுந்துள்ளது.

கருத்து வேற்றுமைகள் எவையாயினும் பேசித் தீர்த்துக் கொள்ளலாம். நாம் பலமான நிலையில் நின்று இந்தத் தேர்தலை வெற்றியடைவது கட்டாயமானது என்பதை உணர்ந்து வேட்பாளர்கள் ஆர்வத்துடன் செயற்பட வேண்டும் - என்றார்.

இந்த நிகழ்வில் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்களான சீ.வி.கே.சிவஞானம், கே.அருந்தவபாலன், பொ.ஐங்கரநேசன் ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

(ஓ-15)

## சைவ சமய அறிவுப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜன.31

வண்ணை-சந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோயிலின் சைவ சமய அறிவுக் கழகம் நடத்தும் 2011இற்கான சைவ சமய அறிவுப்பரீட்சைகள் இடம் பெறவுள்ளன.

தரம்-1தொடக்கம் தரம்-13 வரையிலான மாணவர்கள் மட்டத்திலும் கோலம்போடுதல், மாலைகட்டுதல், தோரணம் பின்னுதல் ஆகிய செயல்முறைப் போட்டிகள் வயது வேறுபாடின்றி சகலருக்கும் நடத்தப்படவுள்ளன.

அறிவுப்பரீட்சை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 27ஆம்திகதியும், மார்ச்மாதம் 6ஆம்திகதியும், செயல்முறைப்போட்டி எதிர்வரும் மார்ச் மாதம்14ஆம்திகதியும் இடம்பெறும்.

மேற்படி போட்டிகளில் பங்குபற்ற விரும்புவோர் சைவசமய அபிவிருத்திக்கழக அறிவகம், இல.82 நாவலர் வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம் எனும் முகவரியுடன் பெப்ரவரி 3 ஆம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொள்ளுமாறு பரீட்சை செயலாளர் சு.சிறிகாந்தன் கேட்டுள்ளார்.

(ற-313,311)

## தமிழகத்தில் ஈழ அகதி நேற்று தீக்குளிப்பு

சென்னை, ஜன.31

இந்தியாவில் உள்ள இலங்கை அகதி ஒருவர் தீக்குளித்து மரணமானதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மதுரை கூடல்புத்தூர் முகாமில் தங்கிருந்த செல்வராஜ் என்ற நபரே தீக்குளித்து மரணமடைந்துள்ளார்.

குறித்த நபர் குடும்பப் பிரச்சினை காரணமாகவே தீக்குளித்துள்ளதாகவும், சம்பவம் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தீக்குளிப்பதற்கான காரணத்தைக் கண்டறிய பொலிஸார் தீவிர விசாரணை மேற்கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

# யாழ்.பல்கலையில் நேற்றிரவு நடந்த கேரள கலைஞர்களின் கதகளி நடனம்

யாழ்ப்பாணம், ஜன.31

இந்தியாவின் 62 ஆவது குடியரசு தினத்தை ஒட்டி இந்திய தூதரகத்தின் ஏற்பாட்டில் கேரள மாநில கலைஞர்களின் கதகளி நடனம் யாழ்.பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நேற்று மாலை இடம்பெற்றது.

இலங்கை கலாசார அமைச்சின் அனுசரணையுடன் இந்திய கலாசார நிலையம் இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது.

இந்த நிகழ்வில் இந்திய துணைத் தூதரக கவுன்சிலர் வே.மகாலிங்கமும் கலாசார அமைச்சின் மேலதிக செயலர் பியதிலகவும் பிரதம அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.



ஒரு மணி நேரம் இடம்பெற்ற இக்கதகளி நடனத்தை அங்கு கூடியிருந்த புத்திஜீவிகள், நடனக் கலைஞர்கள், மாணவர்கள் கண்டுகளித்தனர். (ஐ-323)

## உயர்கல்வியின் உதயம் செயலமர்வு

யாழ்ப்பாணம், ஜன.31

21 ஆம் நூற்றாண்டில் உயர் கல்வியின் உதயம் என்னும் தொனிப்பொருளில் நாளைமறுதினம் புதன்கிழமை காலை 9.30 மணிக்கு கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஒருநாள் ஒன்று கூடல் நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு உயர்கல்வி எஸ். பி. திசநாயக்கவின் பல்கலைக் கழக மானியங்களின் ஆணைக் குழுத் தலைவர் மற்றும் இலங்கையில் உள்ள அனைத்து பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்கள், பீடாதிபதிகள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

(ற-319)

## அச்சுவேலியில் ஹைஏஸ் - மோ.சைக்கிள் விபத்தில் இளைஞன் நேற்று உயிரிழப்பு

### மற்றவர் படுகாயங்களுடன் ஆஸ்பத்திரியில்

அச்சுவேலி, ஜன.31

ஆவரங்கால் - வல்லை பிரதான வீதியில் அச்சுவேலி பெரிய மதவடியில் நேற்றிரவு 7.15 மணியளவில் நடைபெற்ற ஹைஏஸ் - மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் பலியானானார். மற்றொருவர் படுகாயமுற்ற நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்தில் உயிரிழந்தவர் சிறுப்பிட்டி மேற்கு ஜனசக்தியைச் சேர்ந்த இராசதுரை றஜீவன் (வயது 21) என்பவர் ஆவார். படுகாயமுற்றவர் நீர்வேலி கலை ஒளி கிராமத்தைச் சேர்ந்த இராசதுரை பயிந்தன் (வயது 20).

இவர்கள் இருவரும் வடமராட்சியில் உள்ள உறவினர்கள் இல்லத்துக்குச்சென்றுவிட்டு சிறுப்பிட்டிக்கு திரும்பிக்கொண்டிருக்கும் போது வடமராட்சியை நோக்கிச் சென்றுகொண்டிருந்த வான், மோ.சைக்கிளுடன் மோதியதாகத் தெரிவிக்கப்பட்டது.

றஜீவன் குற்றுயிரான நிலையில் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும்போது இடைவெளியில் உயிர் பிரிந்ததாகக் கூறப்பட்டது. இவரின் சடலம் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்தை நேரில் கண்டவர்களின் தகவல்கள் மூலம் அதிவேகமாக செலுத்திவந்த வான் மோட்டார் சைக்கிள் மீது பலமாக மோதியே இந்த அனர்த்தம் ஏற்பட்டது என்று தெரியவந்தது.

(ஓ-11)

## கைதடியில் முன்பள்ளி நேற்றுத் திறப்பு

கைதடி மேற்கில் வேள்ட்விஷன் நிறுவனத்தினால் அமைக்கப்பட்ட சரஸ்வதி முன்பள்ளியின் கட்டடத் திறப்பு விழா நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

சரஸ்வதி சனசமூக நிலையத் தலைவர் எஸ்.வசீகரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துகொண்டு கட்டடத்தை திறந்துவைத்தார்.

(ஓ-10-288)

# நிருபமாவின் இலங்கைப் பயணம் கண்துடைப்பு தமிழர் பிரச்சினையை ஐ.நாவில் முறையிடுவோம்!

## பா.ஜ.கவின் தலைவர் நிதின் கட்காரி தெரிவிப்பு

சென்னை, ஜன. 31

இலங்கைத் தமிழர்கள் பிரச்சினை குறித்து ஐ.நா. சபையில் முறையிடுவோம். இந்திய வெளிவிவகாரச் செயலாளர் நிருபமாராவின் இலங்கைப் பயணம் வெறும் கண்துடைப்பு. இலங்கைத் தமிழர் பிரச்சினை தமிழகத்தின் பிரச்சினை மட்டுமல்ல, அது இந்தியாவின் தேசியப் பிரச்சினை.

- இவ்வாறு பா.ஜ.க. தேசியத் தலைவர் நிதின் கட்காரி தெரிவித்துள்ளார்.

பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி பா.ஜ.கவின் தமிழ் மாநிலத் தலைவர் பொன். ராதாகிருஷ்ணன் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட தாமரை யாத்திரையின் நிறைவு நாள் நிகழ்ச்சி சென்னை மீனம்பாக்கத்தில் உள்ள இராணுவ மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

அதில் கலந்துகொண்டு [illegible] இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:

இலங்கைத் தமிழர் பிரச்சினை தமிழகத்தின் பிரச்சினை மட்டுமல்ல. அது இந்தியாவின் தேசியப் பிரச்சினை.

பா.ஜ.கவுக்கு 165 எம்.பிக்கள் உள்ளனர். அவர்கள் மூலம் இலங்கைத் தமிழர் பிரச்சினையை ஐ.நா. அமைப்பின் மனித உரிமை ஆணையத்துக்கு பா.ஜ.க. எடுத்துச் செல்லும்.

இலங்கையில் உள்ள தமிழர்களுக்கு மருத்துவ உதவி உள்ளிட்ட உதவிகள் அளிப்பதற்கு பா.ஜ.கவின் மத்திய அமைப்பில் இருந்து ரூபா 10 லட்சம் வழங்கப்படும். அந்த உதவி சேவா பாரதி அமைப்பு மூலம் அவர்களுக்கு வழங்கப்படும்.

2010 ஊழல் ஆண்டாக உள்ளது. 2ஜி ஸ்பெக்ட்ரம், கொமன் வெல்த் விளையாட்டு, ஆதர்ஷ் ஊழல் ஆகியவற்றில் மட்டும் ரூபா 2லட்சத்து 50 ஆயிரம் கோடி அளவுக்கு ஊழல் நடைபெற்றுள்ளது. தென்னிந்தியாவில் குறிப்பாக தமிழகத்தில் தண்ணீர்-பற்றாக்குறை உள்ளது. கோடைக் காலங்களில் மின் பற்றாக்குறை ஏற்பட்டு தினசரி 5 மணி நேரம் மின்சாரம் தடை செய்யப்படுகிறது. இவற்றையெல்லாம் கருத்திதான் இந்தியக் குடியரசின் முன்னாள் தலைவர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் நதிகள் இணைப்பை வலியுறுத்தினார்.

ஆனால், ராகுல் காந்தியோ நதிகள் இணைப்பு கூடாது என்கிறார்.

நாட்டில் இப்போது ஊழலும், பணவீக்கமும் முக்கியப் பிரச்சினைகளாக உள்ளன. இப்போதைய விலைவாசி உயர்வு உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு மத்திய அரசின் தவறான பொருளாதாரக் கொள்கையே காரணம்.

- இப்படி கட்காரி பேசினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசுக்கு ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்காலம் ஒன்று இல்லை என்றும், இந்த அரசைப் பதவியில் இருந்து நீக்குவதற்கு மக்கள் போராட்டங்கள் முன்னெடுக்கப் படவுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

டியூனிசியாவில் நடப்பது போன்று இலங்கையிலும் கலகம் ஏற்படக் கூடிய அபாயம் காணப்படுகின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஒரு கிலோ அரிசியின் விலை 125 ரூபாவாக உயர்வடையக் கூடிய சாத்தியம் காணப்படுகிறது எனவும் இவ்வாறு பொருள்கள் சேவைகளுக்கான விலை உயர்வடைந்தால் கிளர்ச்சி ஏற்படக் கூடும் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

இதேவேளை, சித்திரைப் புத்தாண்டு காலப்பகுதியில் அரிசி விலை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகிறது என ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன. (சி)

## இந்திய வெளியுறவுச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்படுவது தமிழகத்தில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது என்றும் தமிழக சட்ட சபைத் தேர்தல் நெருங்கி வரும் இச் சந்தர்ப்பத்தில் தமிழக அரசியல் கட்சிகள் மீனவர் கொலை செய்யப்படுவதை அரசியல் விவகாரமாக்கி அரசியல் லாபம் பெற முனைகின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இப்படியான நிலைமையிலே இந்திய வெளியுறவு அமைச்சர் எம்.எஸ். கிருஷ்ணா இந்த விவகாரத்தை முடிவுக்கு கொண்டு வரும் நோக்கில் வெளியுறவுச் செயலர் நிருபமா ராவை அவசர அவசரமாகக் கொழும்புக்கு அனுப்பி வைத்துள்ளார்.

## கூட்டமைப்புக்குள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்கில் மக்களின் ஆதரவை இழந்து வங்குரோத்து நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள சில அரசியல் சக்திகள் இம்மாதிரியான வதந்திகளை அரச ஊடகங்கள் மூலம் பரப்பி வருகின்றன. உள்ளூராட்சித் தேர்தல்கள் நடைபெறும் இச்சந்தர்ப்பத்தில் கூட்டமைப்புக்குள் குழப்பம் என மக்களைக் குழப்பி உள்ளூராட்சி சபைகளில் ஒருசில ஆசனங்களையாவது பெற இச்சக்திகள் முனைகின்றன என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

உள்ளூராட்சித் தேர்தல்களுக்காக கூட்டமைப்பு ஒற்றுமையுடன் பிரசாரப் பணிகளை மேற்கொண்டு வருகிறது எனவும் கூட்டமைப்பு தெரிவிக்கின்றது. (ஒ-சி)


### உத்தியோக பூர்வ முடிவுகள் — சுப்பிரி வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 586
திகதி 2011/01/29
சுப்பர் இலக்கம்: 08
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 27 36 40 68

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றிபெற்றவர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் நான்கு இலக்கங்கள் சரியாயின் | ரூ. 36,655,592.00 வீதம் | — |
| முதலாம் பரிசு | நான்கு இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 1,000,000.00 வீதம் | 02 |
| இரண்டாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏதேனும் 3 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 50,000.00 வீதம் | 14 |
| மூன்றாம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 2,000.00 வீதம் | 343 |
| நான்காம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏதேனும் 2 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 1,000.00 வீதம் | 684 |
| ஐந்தாம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 100.00 வீதம் | 17,405 |
| ஆறாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏதேனும் 1 இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 40.00 வீதம் | 9,991 |
| ஏழாம் பரிசு | 1 இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 20.00 வீதம் | 249,889 |
| [illegible] | சுப்பர் இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 20.00 வீதம் | 40,100 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள பரிசுத் தொகை ரூ. 12,009,920.00

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு ரூ. 36,805,574.40

தேசிய லொத்தர் சபை
www.nlb.lk



## ஓராண்டு நினைவலைகள்

திரு.சதாசிவம்.தில்லைநாதான

திதி:31.01.2011





மண்ணில்:12.10.1952
விண்ணில்:11.02.2010

ஓராண்டென்ன
ஒருயுகம் சென்றிடினும்
காயாது
எம் விழியோர நீர்
ஆறாத உம்
நினைவுகளுடன்
ஆத்மா சாந்தி அடைய
பிரார்த்திக்கின்றோம்.

கோண்டாவில் மேற்கு
கோண்டாவில்

குடும்பத்தினர்.


## குடாநாட்டில் நடந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துரையாடியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் தொடரும் கொலை, கொள்ளை, ஆள்கடத்தல் போன்ற சம்பவங்களால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அச்ச நிலையில் உள்ளனர் என்று அவர்கள் தளபதியிடம் சுட்டிக்காட்டினர்.

அதற்குப்பதிலளித்த தளபதி ஹத்துருசிங்க, உரும்பிராயில் கல்விப் பணிப்பாளர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தவிர்ந்த ஏனைய சம்பவங்கள் குறித்து விசாரணைகள் பூர்த்தியாகியுள்ளன. அந்தச் சம்பவங்களில் சம்பந்தப்பட்டவர்களையும் இனங்கண்டுள்ளோம். கல்விப் பணிப்பாளரின் கொலை தொடர்பாக தொடர்ந்து விசாரணை செய்து வருகிறோம் என்று தெரிவித்துள்ளார்.

தமது தொண்டு அமைப்பு குடா நாட்டிலும் வன்னியிலும் மேற்கொள்ளவுள்ள திட்டங்கள் குறித்து பிரதிநிதிகள் குழுவினர் தளபதிக்கு விளக்கமளித்தனர்.

நேற்று குடாநாட்டில் பல்வேறு நிகழ்வுகளில் பங்குகொண்டபின் கே.பி தலைமையிலான குழுவினர் பலாலி ஊடாக நேற்று மாலை கொழும்பு திரும்பினர். (ஒ-ஐ)

## அப்பாவி மக்களைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சவேந்திர சில்வா மறுத்தார்.

மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு

நான் போர்க்குற்றங்களில் ஈடுபடவில்லை. என் மீது சுமத்தப்படும் இது தொடர்பான குற்றச்சாட்டை நான் மறுக்கிறேன். நான் போர்க்குற்றம் புரிந்திருந்தால் அது ஒருநாள் நிச்சயம் வெளி உலகுக்குத் தெரியவரும். யுத்தக் குற்றம் புரிந்தவர்களுக்கு எதிராக இராணுவம் நடவடிக்கை எடுக்கும்.

புலிகளின் பிடியில் இருந்த அப்பாவி தமிழ் மக்களை மீட்கும் மனிதாபிமான நடவடிக்கையை நாம் ஆரம்பித்தோம். அப்பாவித் தமிழ் மக்களுக்கு எதிராக நாம் செயற்படவில்லை.

இறுதிக்கட்ட யுத்தத்தின்போது புலிகள் தங்களைப் பாதுகாத்துக்கொள்வதற்காக அப்பாவித் தமிழர்களைக் கேடயமாகப் பயன்படுத்தினர்.

அந்த அப்பாவித் தமிழர்களை மீட்பதற்காக எமது படையினர் தொடர்ந்து போராடினர். தமது பிடியில் இருந்து தப்பியோடிய தமிழர்களைப் புலிகள் சுட்டுக் கொன்றனர். ஆனால், நாம் அந்த மக்களைப் பாதுகாக்கவே போராடினோம்.

- இப்படி அவர் கூறினார். (சி)


### THE ROYAL COLLEGE OF JAFFNA

3 மாதங்களில் சுலபமாக ஆங்கிலத்தில் கதைக்கப்பயில முழுக்கட்டணம் 5000/- மேலதிக வகுப்புகள் இலவசம்.
BY: ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி,
426, K.K.S. வீதி, யாழ்ப்பாணம், தொ.பே.: 0776751649.

### கணக்காளர் தேவை

திருநெல்வேலியில் இயங்கும் விற்பனை முகவர் நிலையத்துக்கு (Distribution Company) கணக்காளர் தேவை.
தொடர்புகளுக்கு: 0778446465
(110159)

### சோதிடம்

கல்வியில் சித்தி கிட்டுமா?
உத்தியோகம் கிடைக்குமா?
வியாபாரம் விருத்தியாகுமா?
திருமணம் நிகழுமா?
வெளிநாடு போகலாமா?
நோய் நீங்குமா?
வீடு, வாகனம் சேருமா?
கேட்டுப் பாருங்கள்!
(யாழ்/இந்து மகளிர் கல்லூரி முன்பாக).
தொ.பே.: 0778996281.

ஜாதகம், கைரேகை, எண்விஞ்ஞானம் மூலமாக உங்கள் பலன்களை அறிந்திட நாடுங்கள்!!!
த.சிவானந்தன்,
பிரபலசோதிடர்,
100, அரசடி வீதி,
கந்தர்மடம்,

### கோழிக்குஞ்சு விநியோகம்

35 நாளில் 2kg க்கு மேல் வளர்ச்சியடையக் கூடிய No.1 பகிரா புறொயிலர் குஞ்சுகள் 02.02.2011 இல் விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்.
ராஜீவ்,
நாவலி வீதி, ஆனைக்கோட்டை.
தொ.பே.: 0776090926,
0212228867.
(110161)


## ஈழ அகதிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருமாறு -

உரிய கடவுச்சீட்டு, விசா இன்றி சுற்றித் திரிந்த இலங்கை அகதிகள் 27 பேர் செங்கல்பட்டு - காஞ்சிபுரம் நெடுஞ்சாலையில் உள்ள கிளைச் சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர்.

தஞ்சை, திருச்சி, மதுரை, இராமேஸ்வரம் போன்ற இடங்களில் திறந்தநிலை அகதிகள் முகாமுக்கு எங்களை அனுப்பிவையுங்கள், எங்கள் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்கிறோம் என்று கூறி கடந்த 4 நாள்களாக அவர்கள் உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர்.

திருவள்ளூர் - காஞ்சி டி.எஸ்.பி. இராமசுப்பிரமணியம் அகதிகளுடன் பேச்சு நடத்தினார். ஆனால் அகதிகள் உண்ணாவிரதத்தைக் கைவிடவில்லை.

உண்ணாவிரதம் இருந்த சந்திரகாந்தன், சகாயம், விக்கிரமசிங்கன் ஆகிய 3 பேர் அதிக சோர்வடைந்ததால் செங்கல்பட்டு அரச வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அகதிகளில் 27 பேரில் 9 பேர் உடல்நிலை சரியில்லாததால் மருத்துவ சிகிச்சை மேற்கொள்வதால் உண்ணாவிரதத்தில் கலந்து கொள்ள முடியவில்லை என்று தெரிவித்தனர். (சி)

## படையினரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாணவர்களுக்கு உதவி வழங்கும் திட்டம் ஒன்றிலும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் கே.பி. தனது பேச்சை ஆரம்பிப்பதற்கு முன் வன்னிப் பிராந்திய நேர்டோ அமைப்பின் உறுப்பினர் உரையாற்றினார். வன்னி மக்களின் துயரங்கள் குறித்து அவர் உரையாற்றுகையில், கே.பி. தேம்பித் தேம்பி அழுதார் என்று கூறப்படுகிறது.

இந்த நிகழ்வில் 'பத்மநாபனுடனான ஜெயராஜின் பிரத்தியேக செவ்வி - 2010' என்ற நூல் இலவசமாக விநியோகிக்கப்பட்டது.

இராணுவத்தின் பலத்த பாதுகாப்புடன் கே.பி. குழுவினர் நேற்று மாலை பருத்தித்துறை வியாபாரிமூலை சென்றனர். அங்கு விதவைகள் மேம்பாட்டுத் திட்டம் ஒன்றை ஆரம்பித்து வைத்தனர்.

இன்று கொழும்பு திரும்பும் கே.பி. குழுவினர் பாதுகாப்புச் செயலர் கோத்தபாயவைச் சந்திப்பர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-ஐ-15-313)





### வீடு விற்பனைக்கு

ஆத்திசூடிவீதி கந்தர்மடத்தில்
(யாழ் பல்கலைக்கழகம் அருகில்)
1/2 பரப்புக் காணியில் 3அறைகள், 2ஹோல், சமையலறை, குளியலறை, நீர்த்தாங்கி என்பவற்றுடன் அமைந்த வீடு விற்பனைக்கு உண்டு.




தொடர்பு: 0213734352
0772913008
email-sptrhomes@gmail.com
பார்வையிடும் நேரம் மாலை 4-6 pm

### அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி இலக்கங்கள்: 08 24 26 32
1264 சிகப்பு
மீனம்
28-01-2011

ஜக்பொட் பரிசு ரூபா. 3,134,900/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 249,427 | 20/- | 4,988,540/- |
| 2 இலக்கங்கள் | 22,876 | 40/- | 915,040/- |
| 1 இல. + லக்கினம் | 22,565 | 60/- | 1,353,900/- |
| 2 இல. + லக்கினம் | 2,110 | 200/- | 422,000/- |
| 3 இலக்கங்கள் | 611 | 1000/- | 611,000/- |
| 3 இல. + லக்கினம் | 63 | 10,000/- | 630,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 3,134,900/- | - |
| பிரதான சீட்டிழுப்பில் பரிசுகளின் மொத்தம் | | | 9,520,480/- |
| இரண்டாம் வாய்ப்புக்கான பரிசுகள் | 669 | | 1,233,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 298,324 | | 10,753,480/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 4,249,100/-

#### இரண்டாவது வாய்ப்பு

வெற்றி இலக்கங்கள்: 09 38 53 55
கும்பம்
ஜக்பொட் பரிசு ரூபா. 700,000/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 3 இலக்கங்கள் | 666 | 500/- | 333,000/- |
| 4 இலக்கங்கள் | 2 | 100,000/- | 200,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 700,000/- | 700,000/- |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 669 | | 1,233,000/- |

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான இரண்டாவது வாய்ப்பின் ஜக்பொட் ரூபா. 200,000/-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

# இந்திய நாடாளுமன்றத்தில் இலங்கைத் தமிழர் பிரச்சினை

இலங்கை இனப்பிரச்சினையை இந்திய நாடாளுமன்றத்தில் எழுப் பப்போவதாகவும் அதன் மூலம் இலங்கைத்தமிழர்களின் அடிப்படை உரிமைகளை உறுதிப்படுத்தப்போவதாகவும் பாரதிய ஜனதாக் கட்சியின் தலைவர் நிதின்கட்காரி கூறியிருப்பதாக இந்துஸ்தான் ரைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

இந்திய நாடாளுமன்றத்தில் இலங்கைத் தமிழர் பிரச்சினையை எழுப்புவதின் மூலம் இலங்கைத் தமிழர்களின் உரிமைகளை எவ்வாறு உறுதிப்படுத்த முடியும் என்பது எமக்குப் புரியவில்லை. ஆனால் இலங்கையில் ஆறு தசாப்தங்களுக்குமேலாக இழுத்தடிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இனப்பிரச்சினைய்யை இந்திய மக்கள் பிரதிநிதிகள் மத்தியில் விளக்கி - விவாதிப்பதற்கு ஒரு சந்தர்ப்பமாக அது அமைய முடியும் என்பதோடு இந்த விடயத்தில் இந்திய அரசு குறிப்பாக காங்கிரஸ் அரசு மேற்கொண்ட தகிடுதத்தங்கள் - நம்பியிருந்த தமிழர் சமுதாயத்துக்கு இழைத்துவிட்ட கெடுதிகள் போன்றவற்றை அம்பலப் படுத்துவதற்கு வாய்ப்பாகவும் அமையும்.

அதுமட்டுமல்ல, இலங்கைத் தமிழர் தொடர்பான அங்கலாய்ப்புக் களை தமிழ் நாட்டிலிருந்து நாடாளுமன்றம் சென்றுள்ள எதிர்த்தரப்பு பிரதிநிதிகள் வெளிப்படுத்தி மத்திய அரசைக் கண்டிக்கவும் இந்த விடயத்தில் தமிழ்நாடு அரசு கடைப்பிடித்த நடைமுறைகளின் பொட்டுக்கேடுகளை எடுத்து விளாசவும் சந்தர்ப்பம் கிடைக்கலாம்.

இலங்கையின் உள்நாட்டுப் போரின் போது உண்மையில் இந்திய அரசு கடைப்பிடித்த கொள்கைதான் என்ன, அதன் நடவடிக்கைகள் என்னவாக இருந்தன, அதன் மூலம் என்ன எதிர்பார்க்கப்பட்டது. அவ்வாறு எதிர்பார்க்கப்பட்ட விடயம் கைகூடியதா? இல்லையெனில் அதற்கான காரணம் யாது? இந்த விடயத்தில் இனிமேலும் இந்திய அரசு என்னத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. எதிர்பார்க்கப்படும் பிரதிபலனை அடைவதற்கு இந்திய அரசு என்ன செய்யப்போகிறது- இவ்வாறான கேள்விகளுக்கு இந்திய மத்திய அரசு நிச்சயமாக விடை தரவேண்டியிருக்கும் - ஏனென்றால் இறுதிப்போரின்போது இந்தியா மேற்கொண்ட நடைமுறை இலங்கை படைகள் வெற்றியடைய வேண்டும் என்பதை மட்டும் கருத்தில் கொண்டதாக இருந்திருக்க முடியாது. இது வெறும் மழுப்பலாக இருந்துவிட்டால் எதிர்க்கட்சிகள் அதனை வரப்போகின்ற தேர்தலில் பகடைக் காய்களாக பயன்படுத்திக் கொள்வார்கள்.

அதற்காகவே, வேறு மாநிலங்களில் இல்லாது போனாலும் தமிழ் நாட்டில் எதிர்க்கட்சிகள் காத்துக்கொண்டிருக்கின்றன. இலங்கைத் தமிழர் விடயம் உண்மையாகவே தமிழ் நாட்டில் ஓர் உணர்ச்சிபூர்வமான விடயமாக இருப்பின் காங்கிரஸ், தி.மு.க. முற்போக்கு கூட்டணி பெரும் எதிர்ப்பினை எதிர் கொள்வதாக அமையும்.

தமிழ் நாட்டில் எந்த விதத்தில் பிரதிபலிப்புகள் இருக்கும் என்று இப்போது சொல்ல முடியாது. மேலும் இலங்கைத்தமிழர் விடயம் மட்டுமே இந்தியாவில் தமிழ் நாட்டில் தேர்தல் பிரச்சினையாக இருக்கமாட்டாது.

இப்போது சூடுபிடித்திருப்பது தமிழக மீனவர்கள் இந்திய - இலங்கை கடற்பரப்பில் தாக்கப்பட்டு - இரு மீனவர்கள் கொல்லப் பட்டிருப்பதாகும்.

தமிழீழ விடுதலைப்புலிகள் இந்தியாவில் தடை செய்யப் பட்டிருப்பதை எதிர்த்து மறு மலர்ச்சித் திராவிட முன்னேற்றக்கழகத்தின் பொது செயலாளர் வைகோ சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடர்ந்திருந்த வழக்கில் மத்திய அரசின் மேற்குறித்த தீர்மானத்தின் மீது கேள்வி எழுப்புவதற்கு அவருக்கு உரிமையில்லை என்றும் இத்தீர்மானத்தினால் பாதிக்கப்பட்ட தரப்பாக அவர் இருக்கவில்லை யென்றும் மேல் நீதிமன்றம் கூறிவிட்டது. இதில் வைகோ வரப்போகும் தேர்தல் தொடர்பாக போதிய அளவு மக்கள் மத்தியில் பரப்புரை பெற்றுக்கொண்டாரா இல்லையா என்பது போக தமிழக மீனவர் மீதான தாக்குதல் தொடர்பாக அடுத்தகட்டமாக வரும் பெப்ரவரி மாதம் 6ஆம் திகதி நாகையில் அவர் உண்ணா விரதம் இருக்கப்போவதாக அறிவித்துள்ளார். இரண்டு தினங்களுக்கு முன் ஆழ்வார்ப் பேட்டையில் உள்ள இலங்கை தூதரகத்தை முற்றுகையிட முயன்று மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சித் தொண்டர்கள் பலர் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளார்கள். சைதாப் பேட்டையில் இடம்பெற்ற ஓர் ஆர்ப்பாட்டத்தில் அ.தி.மு.க.தலைவர் ஒருவர் பேசுகையில் தாங்கள் பதவிக்குவந்தால் கச்சதீவு மீளப்பெறப்படும் என்று அறிவித்துள்ளார்.

தேர்தல் நெருங்கிவருவதால் தமிழ் நாட்டில் இலங்கை பிரச்சினையே பூதாகாரமாக காட்டப்படப்போகின்றது. காங்கிரஸ் - தி.மு.க. கூட்டணிக்கு இது பெரும் தர்மசங்கடமாக விருக்கும்.

நிலைமையை சமாளிப்பதானால் மத்திய அரசுக்கு இந்த விடயத்தில் ஒரு வழியே இருக்கிறது.

இலங்கை இனப்பிரச்சினை மற்றும் தமிழக மீனவர் பிரச்சினை ஆகிய இரண்டிலும் ஆக்கப்பூர்வமான செயற்பாடுகளை வெளிப் படுத்தவேண்டும்.

இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு தமிழர் தரப்புடன் பேச்சுக்களை ஆரம்பித்துவிட்டதாக இலங்கை அரசு இந்திய மேலிடத்தை சமாளிக்க முயலக்கூடும் - அந்தப்பேச்சுக்கள் ஆக்கப் பூர்வமானதாக அமையும் என்பதற்கான உறுதிப்பாட்டை வழங்கி இந்திய அரசு இந்திய வாக்காளர்களை திருப்திப்படுத்தியாக வேண்டும் அதேபோல் தமிழக மீனவர் தொடர்பான பிரச்சினையிலும் தமிழ் நாட்டில் இந்திய மத்திய அரசின் செயற்பாடுகள் நம்பிக்கை அளிப்பதாக இருக்கவேண்டும். தொடர்ந்தும் மீனவர்கள் தாக்கப்படுவதற்கு ஒரு முற்றுப்புள்ளி ஏற்படுத்தவேண்டும்.

இல்லையெனில் தமிழ் நாட்டில் வரும் தேர்தலின்போது அதிக இழப்புக்களை ஆட்சியாளர்கள் சந்திக்க நேரும் என்று கூற[illegible] என்ன?

---

இலங்கைக் கடற்படை தாக்குதல் விவகாரம்

## மத்திய, மாநில அரசுகளுக்கு எதிராக தமிழக மீனவர்கள் இன்று முழு அடைப்பு

காரைக்கால், ஜன. 31

தமிழக மீனவர்களைத் தாக்கும் இலங் கைக் கடற்படையைக் கண்டிக்கத் தவறும் மத்திய, மாநில அரசுகளைக் கண்டித்து காரைக்கால் மாவட்டம் முழுவதும் இன்று திங்கட்கிழமை முழு அடைப்பு நடத்த மீன வர்கள் முடிவு செய்துள்ளனர்.

காரைக்கால் மாவட்ட அனைத்து மீனவக் கிராமங்களின் பஞ்சாயத்தார்கள் ஒருங் கிணைந்து எடுத்த இந்த முடிவு குறித்து வெள்ளிக்கிழமை மீனவர்கள் தெரிவித்தவை வருமாறு -

அண்மைக் காலமாக இலங்கைக் கடற் படையினரால் தமிழக, காரைக்கால் மீனவர் கள் கொல்லப்படுவதும், அடித்துத் துன்புறுத் துவதும், படகு, மீன் உள்ளிட்டவற்றை சேதப்படுத்துவதும் தொடர்ந்து நடைபெறு கின்றன.

இதுகுறித்து மீனவர்கள் பல்வேறு அற வழிப் போராட்டங்கள் நடத்தி, மத்திய, மாநில அரசுகளின் கவனத்தை ஈர்க்கும் நட வடிக்கையில் ஈடுபட்டும் பயனில்லை.

மத்திய, மாநில அரசுகளின் இந்த மெத் தனப் போக்கைக் கண்டிக்கும் வகையில், காரைக்கால் மாவட்டத்தில் உள்ள மீனவர்கள் இன்று வேலைநிறுத்தம் செய்கின்றனர்.

இன்று காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை காரைக்காலில் முழு கடையடைப் புப் போராட்டம் நடத்த அழைப்புவிடுக்கப் பட்டுள்ளது. மேலும், பல்வேறு இடங்களில் மீனவர்கள் வீதி மறியல் போராட்டத்திலும் ஈடுபடுவார்கள். - இப்படி அவர் கூறினார்.

## பொருள்களை இறக்குமதி செய்வதன் மூலம் விலை அதிகரிப்பைக் கட்டுப்படுத்த முடியாது

சிரேஷ்ட அமைச்சர் ரட்ணசிறி கூறுகிறார்

கொழும்பு, ஜன.31

வெளிநாட்டிலிருந்து பொருள்களை இறக்குமதி செய்வதன் மூலம் விலை அதி கரிப்பைக் கட்டுப்படுத்த முடியாது என சிரேஷ்ட அமைச்சர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க தெரிவித்துள்ளார்.

ஹொரணைப் பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

உள்நாட்டு உற்பத்திகளை உயர்த்துவதன் மூலம், பொருள்கள் சேவைகளின் விலை அதிகரிப்பை கட்டுப்படுத்த முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வெளிநாட்டிலிருந்து பொருள்களை இறக்குமதி செய்தால் எதிர்காலத்தில் வெளிநாடுகளைக் கையேந்த நேரிடும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

முக்கிய உணவுப் பொருள்களின் உற்பத்தி யில் தன்னிறைவை அடைவதே மிகவும் முக்கியமான இலக்காக அமைய வேண்டு மென அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தை விமர்சிக்கும் வகையிலான கருத்துக்களை வெளியிட்டதன் காரணமாக அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க அண்மை யில் பெரும் சர்ச்சைகளை எதிர்நோக்கியிருந் தமை குறிப்பிடத்தக்கது.

## முன்னாள் போராளிகளில் மேலும் பலர் சுதந்திர தினமன்று விடுவிக்கப்படுவர்

புனர்வாழ்வு ஆணையாளர் தகவல்

கொழும்பு, ஜன. 31

சுதந்திர தினத்தை முன்னிட்டுப் புனர்வாழ் வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் விடுதலை செய்யப்படவுள்ளதாகப் புனர் வாழ்வு ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் எஸ்.ரணசிங்க தெரிவித்துள்ளார்.

புனர்வாழ்வு நிலையங்களிலுள்ள முன் னாள் போராளிகளினால் ஆக்கப்பட்ட கை வினைப் பொருள்கள் புத்தளவில் நடைபெற வுள்ள கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட வுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலை மறு சீரமைப்பு அமைச்சின் கீழுள்ள பாதுகாப்பான தங்குமிடம் மற்றும் புனர்வாழ்வு நிலையங் களில் 4,500 முன்னாள் போராளிகள் உள்ள தாக அவர் குறிப்பிட்டார்.

இவர்களுக்கு மேசன் தொழில், தச்சு தொழில், வாழ்க்கைத்திறன் போன்ற பல பயிற்சிகள் வழங்கப்படுவதாகப் பிரிகேடியர் ரணசிங்க கூறினார்.

இதேவேளை, வவுனியா புனர்வாழ்வு நிலையத்தில் மேசன் தொழில் டிப்ளோமா பயிற்சியை நிறைவு செய்த முன்னாள் போராளிகள் 500 பேருக்கு இன்று திங்கட்கி ழமை சான்றிதழ் வழங்கவுள்ளதாக பிரிகேடி யர் ரணசிங்க மேலும் தெரிவித்தார்.

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலை மறு சீரமைப்பு அமைச்சின் கீழுள்ள பாதுகாப்பான தங்குமிடம் மற்றும் புனர்வாழ்வு நிலையம் யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் மட்டக் களப்பு ஆகிய இடங்களில் முன்னாள் போராளிகளுக்கு புனர்வாழ்வளிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

(ம)

## வெள்ளத்தால் பாதிப்புற்ற அரச ஊழியருக்கு கடன், முற்பணம் வழங்கும் புதிய திட்டம்

வெள்ளம், மண்சரிவு காரணமாக பாதிக் கப்பட்ட அரச ஊழியர்களுக்கு விசேட கடன், முற்பணம் வழங்கும் திட்டம் ஒன்றை பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு அறி வித்துள்ளது. இத்திட்டம் தொடர்பான சுற்ற றிக்கையை அமைச்சு வெளியிட்டுள்ளது.

அச்சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள் ளவை வருமாறு:-

இவ்விசேட முற்பண, கடன் திட்டத்தில் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, பொலநறுவை, அநுராதபுரம், கண்டி மாவட் டங்களில் நிரந்தரமாக வசித்து, இவ்வனர்த் தங்களால் பாதிக்கப்பட்டவர்கள் பெற்றுக் கொள்ளமுடியும். இவ்விசேட முற்பணம் மூன்று மாத படிகள் நீங்கலாகத் திரட்டிய சம்ப ளத்தின் தொகையை வழங்குவதன் ஊடாக வட்டியற்ற பத்து சம மாதத் தவணைகளில் [illegible] வேண்டும்.

[illegible] சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேத மதிப்பீடுகள் கடன் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட கிராம சேவையாளர் உறுதிப்படுத்தி பிரதேச செய லர் இதனை பரிந்துரை செய்யப்பட்டிருக்க வேண்டும்.

அத்துடன் பாதிக்கப்பட்டவர் குடியிருக் கும் உத்தியோகத்தரா அல்லது அவரது வாழ்க்கைத்துணைக்கு உரித்தானதாகவோ இருக்க வேண்டும். இக்கடன் முற்பணத்துக்கு பிணையாளியை நியமிக்கத் தேவையில்லை.

ஆயினும் அமைய / தற்காலிக உத்தி யோகத்தர்களுக்கு நிரந்தரமான அரச உத்தி யோகத்தர் ஒருவரை பிணையாளியாகக் காட்டவேண்டும்.

இக்கடன் வழங்கும் திட்டம் எதிர்வரும் மார்ச் 31 இக்குள் பூரணப்படுத்துவது மிகவும் முக்கியமானது என்று அந்த ச் சுற்றறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-501)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
31 ஜனவரி 2011 திங்கள்கிழமை

# சொந்த இடத்தில் சாவகச்சேரி நீதிமன்றம் மீள அமைக்கப்படுவது நன்மை பயக்கும்

தொன்மராட்சி, ஜன.31

25 வருடங்களின் பின்னர் சாவகச்சேரி நீதிமன்ற கட்டங்கள் தமது சொந்த இடத்தில் மீள அமைவது பிரதேச மக்களுக்கு மட்டுமல்ல அனைத்து தரப்பினருக்கும் நன்மை தரக்கூடியதாகும்.

இந்த இடத்தில் மாவட்ட நீதிமன்றம், நீதிவான் நீதிமன்றம் ஆகியவற்றுடன் மாவட்ட நீதிபதி, நீதிவான் ஆகியோருக்கான வாசஸ்தலங்களும் அமைக்கப்படவுள்ளன.

சாவகச்சேரி நீதிமன்றக் கட்டடத் தொகுதியின் ஆரம்பப் பணிகள் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றன

இந்த நிகழ்வில் உரையாற்றிய மாவட்ட நீதிபதி மா. கணேசராசா இவ்வாறு கூறினார். அவர் தொடர்ந்து உரையாற்

**சாவகச்சேரி நீதிமன்றக் கட்டடத்தொகுதியின் கட்டடப் பணிகள் ஆரம்ப நிகழ்வில் மாவட்ட நீதிபதி மா.கணேசராசா இவ்வாறு கூறினார்.**

றுகையில் இக்கட்டடத் தொகுதிகள் அமைக்க நீதிச்சேவைகள், ஆணைக்குழு, நீதி அமைச்சின் செயலாளர், பிரதம நீதியரசர், யாழ். மேல்நீதிமன்ற நீதிபதி ஆகியோர் ஆர்வங்காட்டி வருகின்றனர்.

எதிர்வரும் 2012ஆம் ஆண்டில் இந்த நீதிமன்ற வளாகத்தில் சகல வசதிகளுடன் கூடிய நீதிமன்றங்கள் இயங்குவதற்கு யாழ். சட்டத்தரணிகள் சங்கம் உட்பட அனைத்துத் தரப்பினரும் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

திருகோணமலை, மூதூர், வாழைச்சேனை, மட்டக் களப்பு, கல்முனை, வவுனியா ஆகிய நீதிமன்றங்களின் அடிக்கல் நடல் மற்றும் திறப்பு விழா போன்றவற்றில் அந்த இடங்களில் பணியாற்றும் வாய்ப்பு எனக்குக் கிட்டியிருந்தது வாழைச்சேனை நீதிமன்றத்தைப் பொறுத்தவரையில் சுற்றுலா நீதிமன்றமாக இயங்கிய கட்டடத்தினை இக்கட்டான காலகட்டத்திலும் அதனை மாவட்ட நீதிமன்றமாக மாற்றிக் கடமையாற்றியுள்ளேன்.

யாழ். நீதிமன்ற வளாகம் அமைக்கப்பட்டபோது சட்டத்தரணிகள் சங்கத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகள் அறிந்துள்ளேன். அதைப் போன்று இந்த நீதிமன்றினையும் விரைவில் இயக்குவதற்கு சங்கத்தினர் பாடுபடவேண்டும் - என்றார். (ம-207)

# காலபோக நெற்செய்கை அறுவடை ஆரம்பம்

தென்மராட்சி,ஜன.31

தென்மராட்சிப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட காலபோக நெற்செய்கையின் அறுவடைப் பணிகள் ஆரம்பமாகி உள்ளன.

கடந்த வருடம் போன்று இவ்வருட காலபோக நெற்செய்கையும் அமோக விளைச்சல் ஏற்பட்டுள்ளதாக நெற்செய்கையாளர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, சில வயல்களில் பயிரிடப்பட்ட 'ஆட்டக்காரி' ரக நெல் இனங்களில் நோய்களின் தாக்கம் ஏற்பட்டதால் விளைச்சல் குறைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம- 207)

# திருட்டு, கொள்ளைகளைத் தடுக்க வீட்டாரே வீதிக்கு மின் வெளிச்சம்

## இரவிலும் படையினர் சோதனை

நாவற்குழி,ஜன.31

இரவு நேரத்தில் திருட்டு மற்றும் கொள்ளைச் சம்பங்களைத் தொடர்ந்து பொது மக்கள் தமது வீட்டு மின்னிணைப்பில் இருந்து வீதிக்கு வெளிச்ச மூட்டி வருவதைக் காணமுடிகின்றது.

இதுவரை காலமும் மாநகர சபை, நகர சபை,பிரதேச சபைகள் வீதிகளுக்கு வெளிச்ச மூட்ட வேண்டும் எனப் பொது மக்கள் கோரி வந்தனர்.

கொள்ளைச் சம்பவங்களைத் தொடர்ந்து தமது சொந்த செலவிலேயே அதிசக்தி வாய்ந்த மின்குமிழ்களை ஒளிரவிட்டு வருகின்றனர்.

விழிப்புக்குழுக்கள் இயங்கும் பிரதேசங்களில் வீதிகள் இரவில் வெளிச்சமாக இருப்பது அவர்களது கடமையைச் செய்ய இலகுவாக இருக்கின்றது.

இதேவேளை, இராணுவத்தினர் விழிப்புக்குழுவில் கடமையாற்றும் உறுப்பினர்களுக்கு மும்மொழியில் அமைந்த அட்டை ஒன்றை சனசமூகத் நிலையத் தலைவர்கள் ஊடாக விநியோகித்துள்ளனர்.

விழிப்புக்குழு உறுப்பினர் என்ற போர்வையில் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டாது இருப்பதற்காகவே இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

பெரு வீதிகள்,உள் வீதிகள் யாவற்றிலும் இராணுவத்தினர், இராணுவப் பொலிஸார், பொலிஸார் பகல், இரவாக வீதிச் சோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பொதுமக்களுக்கு தமது அயலில் நடமாடும் நபர்கள் குறித்த விழிப்புணர்வு அவசியம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ம-121)

# கைதடியில் பாதீனியம் அதிகரிப்பு



கைதடி,ஜன.31

கைதடிப் பகுதியின் பல இடங்களிலும் பாதீனியச் செடிகளின் ஆதிக்கம் மிக அதிகரித்துக்காணப்படுகிறது.

விவசாய நிலங்களை அண்டிய பகுதிகளில் வகை தொகையின்றி இவை பெருமளவு காணப்படுவதன்ால் தமது பயிர்கள் விளைச்சலைப் பெற்றுத்தராத நிலையில் வளர்ச்சியின்றிக் காணப்படுவதாகவும் விவசாயிகளால் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

இவ்விடயத்தில் விவசாயத் திணைக்களமோ அன்றேல் கமநலச் சேவைகள் திணைக்களமோ கவனமெடுத்து இவற்றை முற்றாக அழிக்க நடவடிக்கை எடுத்து தமது வாழ்வாதாரம் உயர உதவி செய்ய வேண்டும் எனவும் பலராலும் வேண்டுகோள்விடுக்கப்பட்டுள்ளது. (ம-288)

# சர்வதேச நாடுகளின் நாணயங்களின் கண்காட்சி

கொடிகாமம்,ஜன.31

சர்வதேச நாடுகளின் நாணயங்களின் கண்காட்சி எதிர்வரும் 2 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் பி.ப. 2 மணி வரை சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இங்கு உலகின் 240 நாடுகளில் பாவனையில் இருந்த நாணயங்களும் நாணயத் தாள்களும் அதேசமயம் இலங்கையில் சங்க கால, அரசர்கள் கால மற்றும் காலனித்துவகால அரசுகளால் பாவிக்கப்பட்ட நாணயங்களும் நாணயத்தாள்களும் காட்சிக்கு வைக்கப்படும்.

இந்த நாணயங்கள் சார்பில் முழு விளக்கங்களும் இக் கண்காட்சியை நடத்தும் இந்தியாவில் சென்னை, பச்சையப்பன் கல்லூரி உட்பட்ட வேறு பல பல்கலைக்கழகங்களின் பேராசிரியர்களால் வழங்கப்படும்.

இதுவரை இக்கண்காட்சி வடக்கு, கிழக்கு மாகாணத்தில் பொத்துவிலில் இருந்து யாழ்ப்பாணம் வரை 542 பாடசாலைகளில் இடம்பெற்றுள்ளதாக பேராசிரியர் உதயன் தெரிவித்தார்.

இக் கண்காட்சி மாணவர், ஆசிரிய சமூகங்களின் பெரும் பாராட்டைப் பெற்றுள்ளது என்றும் தென்மராட்சி கல்வி வலயத்தில் வேறும் பல பாடசாலைகளிலும் நடத்த உள்ளதாகவும் பேராசிரியர் அந்தோனிசாமி தெரிவித்தார். (ம-122)

# வேகமாகப் 'பறக்கும்' வாகனங்கள் நாளாந்தம் விபத்துக்கள் அதிகரிப்பு

வாகனங்களின் வேகம் அதிகரிப்பதால் விபத்துக்களின் தொகையும் நாளாந்தம் அதிகரித்து வருகின்றன.

கொடிகாமப் பகுதியில் வேகமாக வந்த உழவு இயந்திரம் மிதிவண்டியில் சென்ற இளைவரை மோதித் தள்ளிக் காயப்படுத்தியது.

கொடிகாமம் தவசிகுளத்தைச் சேர்ந்த துரைசிங்கம் ரஜிந்தாஸ் (வயது 23) என்பவர் காயமடைந்தார்.

சாவகச்சேரி தபாலகம் முன்பாக வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் எதிரே வந்த மோட்டார் சைக்கிளை மோதியதில் அதில் பயணித்த பெண் தூக்கி வீசப்பட்டதில் நாரி எலும்பில் பாதிப்பு ஏற்பட்டது.

சாவகச்சேரி வடக்கைச் சேர்ந்த தங்கராசா கெங்காதேவி (வயது 50) என்பவர் காயமடைந்தார்.

இவ் விபத்துக்களில் காயமடைந்தவர்கள் சாவகச்சேரி ஆதாரவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ம-207)

# பால் வழங்குவோரின் நலன்கருதி சேமிப்புத் திட்டம் அறிமுகம்

கொடிகாமம், ஜன.31

வடமராட்சி கால் நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் பால் வழங்கும் அங்கத்தவர்களின் நலன் கருதி சேமிப்புத் திட்டம் அறிமுகப்படுத்தியுள்ளதாகச் சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் வழங்கப்படும் ஒவ்வொரு லீட்டர் பாலுக்கும் அங்கத்தவர்களிடம் ஒரு ரூபா அறவிடப்படும் அதே சமயம் ஒரு ரூபா 50 சதம் அவர்களின் சேமிப்பாக வங்கியில் இடப்படும்.

குறிப்பிட்ட தொகை சேர்ந்ததும் அப்பணம் அங்கத்தவர்களுக்கு மீள வழங்கப்படும் என வும் தெரிவித்துள்ளார்.

வழங்கப்படும் பால் கொள்வனவு செய்யும்போது பாலின் சுத்தம், பால் மானியின் வாசிப்பு கொழுப்பின் வீதம் என்பன கவனத்தில் எடுக்கப்படும் எனவும் பால் மானியின் வாசிப்பு நியம அளவு 24க்கு குறைவாக இருக்கக் கூடாது எனவும் தரமற்றபால் கொள்வனவு செய்யப்படமாட்டாது எனவும் கூறப்பட்டது. (ம-122)

# கைத்தொழில் வணிகர் மன்றத்தால் 35 பேருக்கு உதவிகள்

தென்மராட்சி,ஜன.31

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தினர் எதிர்வரும் 6ஆம் திகதி மாணவர்கள், விதவைகள், ஊனமுற்றோர் உட்பட 35 பேருக்கு உதவித் திட்டங்களை வழங்கவுள்ளனர்.

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் நடைபெறவுள்ள மன்றத்தின் 32 ஆவது வருட பொதுக் கூட்டத்தில் இவை வழங்கப்பட்டவுள்ளதாக மன்றத் தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ் தெரிவித்தார்.

மன்ற உறுப்பினர்களின் நிதி உதவியுடன் மன்றத்தினால் ஆரம்பிக்கப்பட்ட நிதியத்திலிருந்து உதவிகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

சாவகச்சேரி பரம்ஸ் மோட்டர்ஸ் நிறுவனத்தினால் கிளிநொச்சி மாவட்டத்தில் தந்தையை இழந்த வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த 10 மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகளும் சாவகச்சேரி அம்பிகா மருந்தக உரிமையாளர் ச. நமசிவாயம் நினைவு புலமைப் பரிசில் நிதியத்திலிருந்து 7 மாணவர்களுக்கு புலமைப் பரிசில் உதவிகளும் சாவகச்சேரி ரெலிகோணர் நிறுவன உரிமையாளர் கு.தவராசசிங்கம் நினைவு விதவை உதவு தொகை நிதியத்திலிருந்து இரண்டு விதவைகளுக்கு உதவி தொகைகளும் வழங்கப்படவுள்ளன.

சாவகச்சேரி எழுகதிர் நிறுவன உரிமையாளர் த.குகனேசனின் அனுசரணையுடன் ஊனமுற்றோருக்கான நிதியத்திலிருந்து இருவருக்கு உதவு தொகைகளும் சாவகச்சேரி வதனி ஜூவலர்ஸ் உரிமையாளர் ச.இரத்தினம் நினைவுப் புலமைப் பரிசில் நிதியத்திலிருந்து ஒரு மாணவருக்கு புலமைப் பரிசில் நிதியும் சங்க உறுப்பினர்களின் நிதி உதவியுடன் 13வறிய மாணவர்களுக்கு மாதாந்த ஊக்குவிப்பு உதவி தொகைகளும் இந்த நிகழ்வில் வழங்கப்படும் எனவும் தெரிவித்தார். (ம-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புற்றுநோய் விழிப்புணர்வு செயலமர்வு சனிக்கிழமை தோறும் மருதனார்மடத்தில்

யாழ்ப்பாணம், ஜன.31

மருதனார்மடத்தில் இயங்கும் "கேன்" நிறுவனத்தின் புற்றுநோயாளர் காப்பகத்தில் சனிக்கிழமைகளில் பாடசாலை மாணவர்கள் உட்பட ஏனையோரும் வருகை தந்து புற்றுநோய் பற்றிய விழிப்புணர்வுகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என காப்பகத்தின் பொது முகாமையாளர் எஸ்.நித்தியானந்தன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

புற்றுநோய் என்பது அனைவருக்கும் ஏற்படக்கூடிய நோயாகும். ஆனால் இது நாள்பட்ட நோய் என்பதால் பலர் அது பற்றிப் பூரண அறிவினைப் பெற்றிருப்பது இல்லை. இதனைக் கருத்தில் கொண்டு மருத்துவ பீட மாணவர்களின் உதவியுடன் சனிக்கிழமை தோறும் விழிப்புணர்வுக் கருத்துரைகள் வழங்கப்படுகின்றன.

இந்நிகழ்வில் பங்குபற்றி பயன்பெற விரும்புவோர் சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதியில் அமைந்துள்ள "கேன்" எனப்படும் யாழ்ப்பாணப் புற்று நோயாளர் காப்பகத்தில் தொடர்பு கொண்டு முன்கூட்டியே அனுமதிகளைப் பெற்று பயன்பெறலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

50 இற்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்கள் இதுவரை பயன்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

(ஐ-313)

# மீள்குடியமர்ந்த மக்களுக்கு சட்ட உதவித் திட்டம் அறிமுகம்

கொடிகாமம்,ஜன.31

யாழ்ப்பாணம் சட்ட உதவி திட்டமன்றம் வன்னியில் இருந்து மீள்குடியமர்ந்த மக்களுக்கு உதவும் திட்டம் ஒன்றை அறிமுகம் செய்துள்ளது. யாழ். குடாநாட்டில் இருந்து வன்னிக்கு இடம்பெயர்ந்து மீண்டும் திரும்பி வந்து மீளக்குடியமர்ந்த குடும்பத்தவர்களின் தொலைந்த காணி உறுதிகள் அத்துடன் பதியப்பட்ட உறுதிகள் பற்றிய காணிப்பதிவக பதிவேடுகளின் சுருக்கப் பிரதிகள் ஆகியவற்றைக் கட்டணமின்றி பெற்றுத்தர உள்ளதாக அறிவித்துள்ளது.

அத்துடன் பராமரிப்பு, விவாகரத்து போன்ற வழக்குகளும் மீளக்குடியேறிய மக்களுக்கு இலவசமாக செய்து கொடுக்கப்படும்.

இது தொடர்பில் வரணி பிரதேசத்தில் ஜே/ 334 தொடக்கம் ஜே/347 வரையான 14 கிராம அலுவலர் பிரிவில் வசிக்கும் மீளக்குடியமர்ந்த மக்களுடனான சந்திப்பு ஒன்று நேற்று முன்தினம் சனிக்கிழமை வரணி மகாவித்தியாலயத்தில் இடம் பெற்றது.

(ம-122)

# ஆங்கில மொழிபெயர்ப்பு

பருத்தித்துறை காணிப் பதிவகத்தில் பிறப்பு, இறப்பு,விவாக சான்றிதழ்களுக்கான ஆங்கில மொழி பெயர்ப்புப் பத்திரங்களை பெற்றுக் கொள்ளலாம் என மேலதிக மாவட்டப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

(ஐ-319)

# மாடிக் கட்டட பணி ஆரம்பம்

இசுறு பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வரணி மகா வித்தியாலயத்தில் 2 மாடிக் கட்டடம் அமைப்பதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தற்சமயம் இந்தக் கட்டடம் அமைப்பதற்கான அடித்தளம் அமைக்கும் வேலைகள் தென்பகுதி தொழிலாளர்களால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இப்பாடசாலைக்கு 2 மாடிக்கட்டடம் அமைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் இக்கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல்லை வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திரசிறி நட்டு வைத்தமை குறிப்பிடத்தக்கது.

(ம-122)

## சேவைக்கான மதிப்பு...



கௌரவிப்பு: வாழ்வக நிறுவுனரின் உதயநாளும் பரிசுத் தினமும் அண்மையில் இடம்பெற்றன. இந்த நிகழ்வில் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் கே.ராஜேந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். வாழ்வகத்தின் தலைவர் ஆ.ரவீந்திரன், உபதலைவர் திருமதி மோகனவதனி ரவீந்திரன் ஆகியோர் வாழ்வக நலன்விரும்பி பரமசிவத்தால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர். (ம)

# கட்டாக்காலி நாய்களால் கலங்கும் மாணவர்கள்

கைதடி, ஜன.31

கைதடி தென்கிழக்குப் பிரதேசத்தில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்திருப்பதாக பொதுமக்களால் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பிரதேசத்தின் வீதிகளில் இரவு, பகல் எனப்பாராது உலா வரும் கட்டாக்காலி நாய்கள் வீதியால் செல்லும் பாடசாலை மாணவர்களையும் பொதுமக்களையும் துரத்தித்துரத்திக் கடிக்கின்றன. இதனால் தாம் பயத்துடனேயே பாடசாலை சென்று வருவதாக மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.

கட்டாக்காலி நாய்கள் உலா வரும் வீதியிலேயே சாவகச்சேரி பிரதேச சபையின் உப அலுவலகம் உள்ளபோதும் அவர்களும் இவற்றைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்காதிருப்பது தமக்கு பெரும் கவலையளிப்பதாகவும், எனவே இனியாவது இவ்விடயத்தை கரிசனையாக எடுத்துக்கொண்டு கட்டாக்காலி நாய்களை கட்டுப்படுத்த பிரதேச உப அலுவலகம் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பொதுமக்களால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

(ம-288)

## மீளக் குடியமர்ந்த மக்கள்

# காணிப்பதிவகப் பதிவேடுகளை கட்டணமின்றிப் பெறலாம்

கொடிகாமம், ஜன.31

யாழ். குடாநாட்டில் இருந்து இடம்பெயர்ந்து வன்னிக்குச் சென்று தற்சமயம் மீளக் குடியமர்ந்துள்ள மக்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள தமது காணி உறுதிகளை தொலைத்திருந்தால் அவ்வுறுதிகளையும் அத்துடன் பதியப்பட்ட உறுதிகள் பற்றிய காணிப்பதிவக பதிவேடுகளின் சுருக்கப் பிரதிகளையும் கட்டணமின்றிப் பெற்றுத்தர யாழ்ப்பாண சட்ட உதவித்திட்ட அமைப்பு முன்வந்துள்ளது.

இது தொடர்பான திட்ட அமர்வுகள் இன்று திங்கள் கிழமை காலை 9 மணிதொடக்கம் நண்பகல் 12 மணிவரை வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மண்டைதீவு பொது மண்டபத்தில் நடைபெறும்.

இந்த அமர்வுகளுக்கு ஜே/7, ஜே/8, ஜே/9, ஜே/10ஆகிய கிராமசேவகர் பிரிவுகளைக் கொண்ட மக்கள் பங்குபற்றி பயன் பெறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அன்றையதினம் பிற்பகல் 3மணி தொடக்கம் 5 மணிவரை தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவின் மட்டுவில் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.இந்த நிறுவன அமைப்பின் அமர்வில் ஜே/308 தொடக்கம் ஜே/317 வரை இலக்கங்களைக் கொண்ட கிராம அலுவலர் பிரிவு மக்களை கலந்து கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(ற-122)

# வாழ்க்கை அத்தாட்சிப் பத்திரம் கோரல்

நெல்லியடி, ஜன.31

பருத்தித்துறை பிரதேச செயலகபிரிவுக்கு உட்பட்ட சகல ஓய்வூதியர்களுக்கும் தமது தை மாத ஓய்வுதியச் சீட்டுடன் வாழ்க்கை அத்தாட்சி பத்திரத்தையும் அனுப்பி வைக்க வேண்டும் என பருத்தித்துறைப் பிரதேச செயலர் ஆர். வரதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இதுவரை இவ்வாறு சமர்ப்பிக்கத் தவறியவர்கள் எதிர் வரும் 21 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும். தவறும் பட்சத்தில் ஓய்வூதியம் தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்படும் எனவும் அவர் அறிவித்துள்ளார்.

(319)

# உடற்சுட்டி குறைந்த மாணவிகளுக்கு பருத்தித்துறையில் சத்துணவு

## ஐம்பது பேர் பயன்பெற்றனர்

நெல்லியடி, ஜன.31

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட தரம் 10, 11 இல் கல்வி பயிலும் உடற்சுட்டி குறைவான மாணவிகளுக்கு சத்துணவுகள் வழங்கப்பட்டதாக சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் தெரிவித்தனர்.

இது தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட பாடசாலைகளில் தரம் 10- 11இல் கல்வி பயிலும் உடற்சுட்டி குறைவான மாணவிகளுக்கு போசாக்குணவுகள் வழங்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் 5 பாடசாலைகளிலும் ஒரு பாடசாலையில் 10 பேர் வீதம் தெரிவுசெய்யப்பட்டு 50 பேருக்குச் சத்துணவு வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வுகள் நேற்று முன்தினம் காலை 9 மணிக்கு பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையிலும் முற்பகல் 11.30 மணிக்கு பொலிகண்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையிலும் இடம்பெற்றன. இதன் போது கருத்தரங்குகளும் நடத்தப்பட்டன.

இந்நிகழ்வில் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி குடும்ப நல உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(ஐ-319)



# குமுதினியின் திருத்த வேலைகள் ஆரம்பம்

நெடுந்தீவு, ஜன.31

கடந்த நான்கு மாதங்களுக்கு மேலாக திருத்த வேலைகளுக்கென ஊர்காவற்றுறைக்குக் கொண்டு செல்லப்பட்ட அரச படகு குமுதினியின் திருத்த வேலைகள் தற்சமயம் இடம் பெறுகின்றன.

[illegible]றப்பட்ட பின் தற்சமயம் படகின் முன்பகுதி ஓட்டுநர் அறைகளுக்கான கூடாரங்கள் போடும் வேலைகள் இடம்பெறுகின்றன.

பின்பகுதிக்கான வேலைகள் இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை.படகின் இருக்கைகளும் மாற்றி அமைக்கப்பட[illegible]தாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

படகின் திருத்த வேலைகள் முழுமையாகப் பூர்த்தியடைய மேலும் சுமார் 45 தினங்கள் வரை எடுக்கலாம் எனவும் பெரும்பாலும் பங்குனி மாத நடுப்பகுதியிலேயே குமுதினி மீண்டும் சேவைக்கு வரலாம் என நம்பப்படுகின்றது. (ம-111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாகன அனுமதிப் பத்திரம் பெற வவுனியாவில் மக்கள் கூட்டம்

வவுனியா,ஜன.31

இந்த ஆண்டுக்கான வாகன வரியைச் செலுத்துவதற்காக வவுனியா பிரதேச செயலகத்தில் தினமும் பெரும் எண்ணிக்கையான மக்கள் கூடுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இடப்பெயர்வு காரணமாகப் மக்கள் தமது வாகனங்களுக்கு வவுனியாவில் முன்னர் பதிவுகளை மேற்கொண்டதால் இந்த நிலை காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. மக்கள் பெருமளவில் கூடுவதால் அவர்கள் வெய்யிலில் நீண்ட நேரம் வரிசையில் காத்திருப்பதையும் காண முடிகின்றது.

சில நாள்களில் அதிகாலை ஐந்து மணிக்கே மக்கள் பிரதேச செயலகத்துக்கு முன்னர் கூடியிருப்பதைக் காணமுடிகின்றது. மேலும் தினமும் மதியம் ஒரு மணிவரையுமே வாகன அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதாலும் வவுனியா நகரப் புறத்தில் போக்குவரத்துப் பொலிஸாரின் திடீர் பரிசோதனைகள் அதிகரித்துக் காணப் படுவதாலும் மக்கள் அதிகளவு ஆர்வத்துடன் பெருமளவில் கூடிநிற்பதைக் காணமுடிகின்றது.

இதனைவிட உரிய படிவத்தை நிரப்பிப் பணம் செலுத்திய பின்பு மூன்று நாள்களுக்குப் பின்னர் அனுமதிப் பத்திரத்தைப் பெறுவதற்கு வருமாறு மக்களிடம் கூறப்படுகின்றது. இந்தச் செயல் தமக்குப் பெரிய இடையூறாக இருப்பதாக அங்கு செல்லும் மக்கள் தெரிவிக்கின்றனர். குறிப்பாகப் பாடசாலை ஆசிரியர்கள் அரச அரச சார்பற்ற நிறுவனங்களில் பணிபுரிவோர் இந்த அறிவிப்பால் தாம் மிகுந்த சிரமங்களுக்கு முகம் கொடுப்பதாகத் தெரிவிக்கின்றனர். இவர்கள் தமது நாளாந்த கடமைகளுடன் அனுமதிப் பத்திரத்தைப் பெறுவதற்குப் பல தடவைகள் அலைந்து திரிவதைக்காண முடிகின்றது.

எனவே பிரதேச செயலக அதிகாரிகள் மக்களின் சிரமங்களைக் கருத்தில் கொண்டு வாகன அனுமதிப் பத்திரங்களை விரைவாகவும், கால தாமதமின்றியும் வழங்க வேண்டுமெனப் பலரும் தெரிவிக்கின்றனர்.(க-501)

### ஆசானுக்குக் கௌரவம்...



குவியும் மாலைகள் : கிளிநொச்சி அக்கராயன் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற ஆசிரியர் தின நிகழ்வில் மாணவர் ஒருவர் பாடசாலை அதிபருக்கு மாலை அணிவிக்கின்றார்.

# ஆயுதக் குழுக்களின் நடவடிக்கை

கிளிநொச்சி,ஜன.31

வடக்கில் அரசியல் பின்புலத்துடன் இயங்கும் ஆயுதக் குழுக்களின் நடவடிக்கைகளை நிறுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மன்னார் மறை மாவட்ட குரு முதல்வர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மன்னாரில் குருமடத்தைச் சேர்ந்த ஒருவரும் அவரது நண்பரும் ஆயுதக்குழுவொன்றினால் கடத்தப்பட்டுத் தாக்கப்பட்டதை அடுத்தே அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

மன்னார் புனித சேவியர் தேசிய பாடசாலையின் மாணவர்களான இவர்கள் கடந்த வாரம் சாதாரண உடையில் இருந்தவர்களால் கடத்தப்பட்டு இரண்டு நாள்களாகத் காணாமற் போயிருந்தனர்.

இவர்கள் இருவரும் விடுவிக்கப்படுவதற்கு முன்னர் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளுடன் தொடர்பு இருப்பதாகக் குற்றம் சுமத்தியே அவர்களிடம் விசாரணை செய்துள்ளனர்.

மன்னார் பிரதான வீதியில் அடைத்து வைக்கப்பட்டிருந்த அவர்கள் பின்னர் நகருக்கு வந்து சேர்ந்துள்ளனர்.

இந்த ஆள்கடத்தலுடன் தொடர்புடையவர்கள் யார் என்பது எமக்குத் தெரியாது.

ஆனால் அரசியல் நோக்கில் இயங்கும் ஆயுதக்குழுக்களே இதில் சம்பந்தப்பட்டுள்ளன.

கடத்தப்பட்ட மாணவர்களில் ஒருவரின் வீட்டுக்குச் சாதாரண உடையில் சென்றுள்ள இருவர் அவரது மூத்த சகோதரன் குறித்து விசாரணை செய்துள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க)

# இராணுவம் மேற்கொள்ளும் வீதிப் புனரமைப்பு வேலைகள்

கிளிநொச்சி,ஜன.31

பரந்தன், முல்லைத்தீவு இடையேயான ஏ-35 வீதி இராணுவத்தினரால் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இந்த வீதி தொடர்ந்து பெய்த மழை காரணமாக மோசமாகப் பாதிக்கப்பட்ட நிலையில் காணப்பட்டது. இதனால் பயணிகள் தமது பிரயாணத்தை மேற்கொள்வதில் பலத்த சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர்.

அத்துடன் வாகனங்களும் பெரும் சிரமத்துடன் நீண்ட நேரத்தைச் செலவிட்ட பின்னரே தமது பயண இடங்களுக்குச் செல்ல முடிந்தது. இவற்றில் பயணஞ்செய்த மக்கள் பல்வேறு உடல் உபாதைகளுக்கு ஆளாகி வந்தனர்.

தற்போது பொதுமக்களின் அவலங்களை நீக்கும் பொருட்டு இராணுவத்தினர் இதனைத் தற்காலிகமாகப் புனரமைப்புச் செய்து வருகின்றனர். இதனால் பொதுமக்களின் பிரயாணக் கஷ்டங்கள் ஓரளவாவது நிவர்த்தியாகுமென எதிர்பார்க்கப்படுகின்றது. (க-6)

# மன்னார் வீதிகள் புனரமைப்பு

மன்னார்,ஜன.31

மன்னார் நகர சபை எல்லைக்குள் உள்ள மூன்று வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடனுதவியுடன் இந்த வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன. சுமார் 1.65 கிலோ மீற்றர் நீளமான இந்த வீதிகளைப் புனரமைப்பதற்கு 1 கோடியே 78 லட்சம் ரூபா செலவிடப்படும். கொங்கிறீற் தடுப்புகளுடன் கூடியதாக இந்த வீதிகள் புனரமைக்கப்படவுள்ளமை விசேட அம்சமாகும்.

இந்த வீதி வேலைகளுக்கான கேள்விப் பத்திரங்களை வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் ஆ. சிவசுவாமி கோரிப் பெற்றுள்ளார்.

உள்ளூராட்சி உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் அரசின் திட்டத்தின் கீழ் இவ்வேலைகள் நடைபெறவுள்ளன. (க-131)

**காணி குத்தகைக்குத் தேவை**

களஞ்சியசாலை ஒன்று அமைக்கவும், வாகனம் நிறுத்தி வைப்பதற்கு ஏற்றவகையிலும் 3 பரப்புக்குக் குறையாத காணி யாழ். மாநகர சபைக்குட்பட்டதாகவோ அல்லது திருநெல்வேலிப் பகுதியிலோ குத்தகைக்குத் தேவை. கவர்ச்சிகரமான குத்தகைப் பணம் வழங்கப்படும்.

தொ. பே.: 0715942721, 0774083068 (110044)

**அபிவிருத்தி அதிர்ஷ்டம்**
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி இலக்கங்கள்
1264 சிகப்பு
மீனம்
08 24 26 32 28-01-2011
ஜக்பொட் பரிசு ரூபா. 3,134,900/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 249,427 | 20/- | 4,988,540/- |
| 2 இலக்கங்கள் | 22,876 | 40/- | 915,040/- |
| 1 இல. + லக்கினம் | 22,565 | 60/- | 1,353,900/- |
| 2 இல. + லக்கினம் | 2,110 | 200/- | 422,000/- |
| 3 இலக்கங்கள் | 611 | 1000/- | 611,000/- |
| 3 இல. + லக்கினம் | 63 | 10,000/- | 630,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 3,134,900/- | - |
| பிரதான சீட்டிழுப்பில் பரிசுகளின் மொத்தம் | | | 9,520,480/- |
| இரண்டாம் வாய்ப்புக்கான பரிசுகள் | 669 | | 1,233,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 298,324 | | 10,753,480/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 4,249,100/-

இரண்டாவது வாய்ப்பு
வெற்றி இலக்கங்கள்
கும்பம்
09 38 53 55 ஜக்பொட் பரிசு ரூபா. 700,000/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 3 இலக்கங்கள் | 666 | 500/- | 333,000/- |
| 4 இலக்கங்கள் | 2 | 100,000/- | 200,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 700,000/- | 700,000/- |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 669 | | 1,233,000/- |

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான இரண்டாவது வாய்ப்பின் ஜக்பொட் ரூபா. 200,000/-

**விற்பனைக்கு**

கட்டடம் அமைப்பதற்கு பொருள்கள் (சட்டறிங் செய்தல் - பலகை, தகரம், முட்டு பனைமரம்..) போன்றனவும் 36 Sri தொடர் இலக்கமுடைய ரக்ரரும் ரக்ரரின் பெட்டி, கலப்பை, டிஸ் போன்றனவும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.
தொ.பே: 0775084322 (109958)

**விற்பனைக்கு**

பாவனையில் இருந்த நல்ல தரமான வீட்டுக் கட்டுமானப் பொருள்கள் ஓடு, மரம், நிலை, கதவு, தீராந்தி, அத்திவாரகல், 5 இஞ்சி கொங்கிறீற்கல் முழு கட்டுமானப் பொருள்களும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0777302343,
218, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**German, Swiss மொழிகள்**

German, Swiss மொழி வகுப்புகள் தமிழ் மொழிபெயர்ப்புடன் German இல் இருந்து வந்த ஆசிரியரால் கற்பிக்கப்படுகின்றன.

(110001) T.P - 0771604823 10, Palaly Road, Jaffna.

சக்திமயம்



**ஏழாலை தெற்கு சூராவத்தை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான பாலஸ்தாபன விஞ்ஞாபனம்**

அம்பிகை அடியார்களே!

நிகழும் மங்களகரமான விகிர்திவருடம் தைமாதம் 21ஆம் நாள் (04.02.2011) வெள்ளிக்கிழமை அவிட்ட நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய காலை 9.00 மணிதொடக்கம் 9.45 மணிவரையுள்ள மீனலக்கின சுபமுகூர்த்த வேளையில் ஸ்ரீமுத்துமாரி அம்பாளுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது.

அடியார்கள் அன்றும் முதல்நாள் நடைபெறும் கிரியைகளைக் கண்டு தரிசித்து வெகுவிரைவில் மஹாகும்பாபிஷேகமும் நடைபெறப் பிரார்த்தனை செய்வீர்களாக.

**கிரியாகால விபரம்**

03.02.2011 தைமாதம் 20ஆம் நாள் வியாழக்கிழமை காலை 9.00 மணிமுதல் விநாயக வழிபாடு, கணபதி ஓமம், நவக்கிரக ஓமம், பிற்பகல் 4 மணிமுதல் வாஸ்து சாந்தி, யாகபூசை மூர்த்திகள் பாலாயத்திற்கு எழுந்தருளல்

04.02.2011 தைமாதம் 21ஆம் நாள் வெள்ளிக்கிழமை காலை 7 மணிமுதல் விநாயக வழிபாடு யாகபூசை ஓமம் காலை 9 மணி- 9.45 மணிக்குள் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் விஷேட பூசை

- **நண்பகல் அன்னதானம் வழங்கப்படும்**

அடியார்கள் பால், தயிர், இளநீர், பூமாலை கொடுத்துதவி அம்பாளின் இஷ்ட சித்திகளைப் பெற்று உய்வீர்களாக.

ஆலய தர்மகர்த்தா சபை

ஏழாலை தெற்கு,
சூராவத்தை.

இணையத்தளம்: www.soorawathaiamman.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவில் பெண்கள், சிறுவர்கள் தொடர்பான விழிப்பூட்டல் கருத்தரங்கு

வவுனியா,ஜன.31

வவுனியா மாவட்டத்தில் மாதம் ஒருமுறையேனும் பெண்கள் மற்றும் சிறுவர்கள் தொடர்பான விழிப்பூட்டல் கருத்தரங்கு நிகழ்வுகள் நடத்தப்பட வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டச் செயலகத்தில் கடந்த வாரம் பெண்கள் வலுவூட்டல், பால் நிலை வன்முறை தொடர்பான விசேட கருத்தரங்கொன்று நடைபெற்றது. இதில் பெண்கள் மற்றும் சிறுவர்களுடன் கடமையாற்றும் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இதில் பல்வேறு செயற்றிட்டங்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

வவுனியாப் பொலிஸ் நிலையப் பெண்கள் மற்றும் சிறுவர் பிரிவின் பொறுப்பதிகாரியும் இந்தக் கருத்தரங்கில் கலந்து கொண்டார். நடப்பு ஆண்டு ஜனவரி மாதத்தில் இதுவரை பெரும் குற்றச் செயல்கள் எதுவும் பதியப்படவில்லையெனக் கூறிய அவர் கடந்த வருட இறுதிப் பகுதியில் அநேக முறைப்பாடுகள் பதியப்பட்டதாகவும் தெரிவித்தார். மேலும் வன்முறைகள் அதிகம் காணப்படும் இடங்களைப் பொலிஸார் மூலம் கண்டறிந்து அந்த இடங்களில் விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை ஏற்பாடு செய்வதெனவும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. அத்துடன் கணவன்மார்களை இழந்த பெண்கள் தலைமை வகிக்கும் குடும்பங்களின் விவரங்களை வவுனியா மாவட்டத்தில் திரட்டுவதெனவும் இந்தக் கருத்தரங்கில் தீர்மானிக்கப்பட்டது. இதற்காகக் கிராமியத் தொண்டர்களின் உதவியைப் பெற்றுக் கொள்வதெனவும் முடிவு மேற்கொள்ளப்பட்டது.

மேலும் எதிர்வரும் மார்ச் மாதம் எட்டாம் திகதி சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்படவுள்ளது. வவுனியா அரச அதிபருடன் கலந்தாலோசித்துப் பல்வேறு முக்கிய செயற்பாடுகளை இத்தினத்திலே நடத்துவதற்குத் திட்டமிடுவது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இந்த விசேட கருத்தரங்கு பல்வேறு வகையிலும் பயனுள்ளதாக அமைந்ததாக இதில் கலந்து கொண்ட பலரும் தெரிவித்தனர். (க-501)

# புனரமைக்காத நிலையில் அக்கராயன் ஆசிரியர் விடுதி

கிளிநொச்சி,ஜன.31

கிளிநொச்சி அக்கராயன் மகாவித்தியாலயத்தின் ஆசிரியர் விடுதி புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றது.

போரின்போது இந்த விடுதி மோசமாகப் பாதிக்கப்பட்ட நிலையில் இருந்து. இன்னமும் புனரமைக்கப்படாதுள்ளது. போருக்கு முன்னர் இந்தப் பாடசாலையில் கற்பிக்கும் வெளியிலிருந்து வரும் ஆசிரியர்கள் இந்த விடுதியில் தங்கி நின்று இலகுவாகத் தங்களின் கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தனர். தற்போது ஆசிரியர் விடுதியில்லாததால் இன்னல்களுக்கும் பல்வேறு சிரமங்களுக்கும் இவர்கள் முகம் கொடுத்து வருகின்றனர்.

ஆகவே அழிவடைந்த நிலையில் காணப்படும் இந்த விடுதியைப் புனரமைத்துத் தர வேண்டுமெனப் பாடசாலைச் சமூகத்தின் வேண்டுகோள் விடுக்கின்றனர். (க)

# கால் நடைகளால் பயிர்கள் அழிவு

பூநகரி,ஜன.31

கிளிநொச்சி மாவட்டம், பூநகரி ஆலங்கேணிக் கிராமத்தின் நெற்பயிர்களைக் கட்டாக்காலியாக அலைந்து திரியும் கால்நடைகள் அழித்து வருவதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

நெற்பயிர்களின் கதிர்கள் முற்றிய நிலையில் அறுவடைக்குத் தயாராக உள்ளன. இந்த நிலையில் கால் நடைகள் பயிர்களை அழித்துச் சேதம் விளைவிப்பதால் தாம் பெரும் நட்டத்தை எதிர்கொள்ள நேரிடுமென விவசாயிகள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

கொடிய போர் ஒன்றுக்கு முகம் கொடுத்து சகலதையும் இழந்து இடப் பெயர்வுகளில் துன்பங்களை அனுபவித்து மீள்குடியமர்ந்தும் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்த நிலையில் இந்த விவசாயிகள் வாழ்ந்து வருகின்றார்கள். இந்த நிலையில் தமது வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்புவோமென்ற நம்பிக்கையில் விவசாயத்தை மேற்கொண்டனர். அதுவும் தொடர்மழை காரணமாகப் பொய்த்து விட்டது. வயல்களில் செலவழித்த பணம் திரும்பக் கிடைக்குமா என்ற ஐயமும் இவர்களின் மனங்களில் தோன்றியுள்ளது. இந்த நிலையில் மீதமுள்ள பயிர்களையும் கால் நடைகள் அழித்து வருவதால் செய்வதறியாது திகைத்து நிற்கின்றனர்.

எனவே உரிய தரப்பினர் இந்த விடயத்தில் தலையிட்டுத் தமக்கு உதவ வேண்டுமென்பதே இவர்களின் எதிர்பார்ப்பாகவுள்ளது. (க-406)

## வெள்ளமோ வெள்ளம்...



விதியின் வழி : அண்மையில் பெய்த தொடர்மழையினால் மாங்குளம் சந்திக்கு அண்மையில் வெள்ளம் தேங்கி நிற்கின்றது.

# பாடசாலை அபிவிருத்திச் சங்கத்துக்கு புதிய நிர்வாகம்

முல்லைத்தீவு,ஜன.31

கற்சிலைமடு அ.த.க. பாடசாலையின் அபிவிருத்திச் சங்கத்துக்குப் புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கான கூட்டம் பாடசாலை அதிபர் சி.நாகேந்திரராசா தலைமையில் நடைபெற்றது. இதில் பாடசாலை அதிபர் தலைவராகவும், வன்னியசிங்கம், ரங்கராஜ் ஆகியோர் முறையே செயலாளர், பொருளாளர் பதவிகளுக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அத்துடன் பாடசாலையின் பவள விழாவுக்கான குழுவும், பவளவிழா நூல் வெளியீட்டுக் குழுவும், விளையாட்டுக் குழுவும், உணவு பயன்பாட்டுக் குழுவும் இந்தக் கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ளன. துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட இந்தக் கூட்டத்தில் சுமார் 151 வரையிலான பெற்றோர் கலந்து கொண்டனர். (க-500)

# 'ஜெய்க்கா' நிதியுதவியுடன் அக்கராயன்குளம் புனரமைப்பு

கிளிநொச்சி,ஜன.31

கிளிநொச்சி, அக்கராயன் குளத்தின் புனரமைப்பு வேலைகள் ஜப்பான் நிறுவனமான ஜெய்க்காவின் நிதியுதவியுடன் நடைபெற்று வருகின்றன.

சுமார் 300 மில்லியன் ரூபா செலவில் மேற்கொள்ளப்படும் குளத்தின் வேலைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் மீதமாகும் நிதியின் மூலம் குளத்தின் வாய்க் கால்கள் சிமெந்தினால் அமைக்கப்படவுள்ளதாகவும் இந்தப் பணியில் ஈடுபட்டுள்ள அதிகாரியொருவர் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடுக் குளத்துக்கு அடுத்ததாகப் பெரிய குளமாக விளங்குவது அக்கராயன்குளம் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை துணுக்காய் அம்பலப் பெருமாள் குளத்தின் கீழ் நெற்செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளின் 80 ஏக்கர் வரையான நெற்பயிர்கள் தொடர் மழை காரணமாக அழிவடைந்துள்ளதாகப் பாதிக்கப்பட்ட விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். இந்தக் குளம் நீர் நிரம்பி நான்கு தடவைகள் வான் பாய்ந்தமையினாலேயே விவசாயிகளுக்கு இந்தப் பரிதாபகரமான நிலை தோன்றியுள்ளது.

இதைவிட வெள்ளத்தில் தப்பியுள்ள நெற்பயிர்கள் பல்வேறு நோய்களின் தாக்கத்துக்கு உள்ளாகிக் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (க)

# குறைபாடுகளுடன் பாடசாலை

கிளிநொச்சி,ஜன.31

கிளிநொச்சி கண்டாவளைக் கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட முரசுமோட்டை முருகானந்தா மகாவித்தியாலயம் அடிப்படை வசதிகள் எதுவும் இல்லாத நிலையில் இயங்கி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண்டாவளைக் கல்விக் கோட்டத்திலுள்ள 22 பாடசாலைகளில் இந்தப் பாடசாலையும் ஒன்றாகும். அத்துடன் இந்தக் கோட்டத்தில் 23 ஆவது பாடசாலையாக முருகானந்தா ஆரம்ப பாடசாலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் இப்பாடசாலைக்குரிய குடிதண்ணீர் வசதிகளில் குறைபாடு காணப்படுகின்றது.

அத்துடன் கட்டட வசதிகளும் போதுமானவையல்ல. இதனால் மாணவர்களும், ஆசிரியர்களும் சிரமங்களுக்கு முகம் கொடுக்கின்றனர். அத்துடன் இன்றைய முக்கிய தேவையான கணினி வசதிகளும் இல்லாத நிலை காணப்படுகின்றது.

மாணவர்களின் நன்மை கருதி இக்குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டுமெனப் பெற்றோர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (க-6)

# கூலித் தொழிலாளர்களாக மாறி வரும் மாணவர்கள்

முல்லை மாவட்டத்தில் அனேகமான பாடசாலைக்குச் செல்லும் 13 தொடக்கம் 15 வயது வரையுள்ள மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வதை நிறுத்தி விட்டுக் கூலி வேலைக்குச் செல்கிறார்கள்.

இதுதொடர்பாகப் பெற்றோரிடம் காரணம் கேட்டால் தமது குடும்ப வறுமை நிலையினைச் சுட்டிக்காட்டுகின்றனர்.

யுத்தத்தின் பிடியிலிருந்து மீண்ட போதிலும் அவர்களுக்கான வாழ்வாதாரத்துக்கான வருமானம் இல்லாமையும் அரசினால் அல்லது தொண்டு நிறுவனங்களால் வழங்கப்படுகின்ற நிவாரணங்கள் போதாமையுமே இதற்கான காரணங்களாக அறியமுடிகிறது.

குறிப்பாகக் கணவனை அல்லது மனைவியை இழந்த அல்லது பெற்றோர்கள் அங்கவீனம் அடைந்த நிலையிலுள்ள குடும்பத்தின் சுமையினை அந்தப் பிள்ளைகள் மூலமே ஈடுசெய்ய முடிகிறது.

இதனால் பாடசாலைக்குச் செல்லும் வயதினர் விரும்பியோ விரும்பாமலோ [illegible] வேலைகளைச் செய்யத்தான் வேண்டும். அனேகமான பெற்றோர்கள் நேரிலே கேட்டுத் தெரிந்து கொள்வதிலிருந்து குடும்ப வறுமையே காரணியாக இருக்கின்றது குடும்பத்தில் வயதுவந்த ஆணோ பெண்ணோ படித்துப் பட்டம் பெற்றிருந்தாலும் அதற்கான வேலைவாய்ப்பு விரைவில் கிடைப்பதில்லை. அவர்கள் ஏதாவது வேலைகள் கிடைக்கும் என விண்ணப்பித்தாலும் கிடைப்பது அரிது. இதனால் பெற்றோர்கள் தமது சிறுபிள்ளைகளை [illegible] வீட்டு வேலைக்கும் சிறிய உழவு இயந்திரங்களை இயக்கவும் நிவாரண வேலைகளில் பங்கு பெறவும் அனுப்புகின்றனர்.

இவ்விடயத்தில் கல்வி சார்ந்தவர்கள் பின்னணியை ஆராய்ந்து அவர்களுக்கான தீர்வினை பெற்றுக் கொடுத்து மாணவர்களின் கல்வியினை தொடர வழி செய்ய வேண்டும். இப்படியான நிலையில் மாணவர்கள் செயற்பட்டால் அவர்களின் எதிர்காலம் பாழ்பட்டுவிடும். என்னதான் வறுமை இருந்தாலும் கல்விதான் அவர்களுக்கு உரிய சொத்து. அதுவே அவர்களுடன் கூடப்போவது என்பதனை எவரும் மாற்றி விடக்கூடாது.

ஆயினும் யுத்தம் விளைவித்த கொடுமைகளின் காரணமாக அனேகமான வன்னிப் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் தமது கல்வியை இடைநடுவில் நிறுத்திவிட்டு கூலிவேலைகளுக்குச் சென்று தமது குடும்பங்களை காப்பாற்ற வேண்டிய அவலய நிலையில் உள்ளனர். இவர்களின் பொருளாதார நிலை ஏற்றம் காணப்படுமாயின் இத்தகைய நிலை ஏற்படாது என்பது திண்ணம்.

(இராஜ். தனபால்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடைபாதை வியாபாரத்துக்கு இரத்தினபுரியில் 3 மாத அவகாசம்

இரத்தினபுரி, ஜன.31

இரத்தினபுரி மாநகரசபை எல்லைக்குள் நடைபாதை வியாபாரம் செய்வதற்குத் தடைவிதிக்கப்பட்டிருந்த போதிலும் வியாபாரிகளுக்கு மாற்றிடங்களில் கொட்டில்கள் அமைக்கும்வரை நடைபாதைகளில் வியாபாரம் செய்ய மூன்று மாதகாலம் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது - என மாநகரசபை உறுப்பினர் கபில குணவர்தன தெரிவித்துள்ளார்.

கடந்தவாரம் திடீர் பயணத்தினை மேற்கொண்டு இரத்தினபுரி நகரின் நடவடிக்கைகளைப் பார்வையிட்ட உள்நாட்டு அலுவல்கள் அமைச்சரும் இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான டபிள்யூ.டி.ஜே. செனவிரத்னவின் வேண்டுகோளின் பேரிலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரி மாநகரசபை எல்லைக்குள் பொருத்தமான இடத்தில் நடைபாதை வியாபாரிகளுக்கான வர்த்தக மத்திய நிலையமொன்றை அமைப்பதற்கான செயற்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அந்த வர்த்தக மத்திய நிலையத்தின் கடைத் தொகுதிகள் நடைபாதை வியாபாரிகளுக்கு வழங்கப்படும் - என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# தொழிலாளரின் சேவைக்கால பணத்தின் ஒருபகுதி கையளிப்பு

நுவரெலியா, ஜன.31

நாவலப்பிட்டி, தொளஸ்பாகை பிரதேசத்திலுள்ள மொன்டிகிறிஷ்டோ தோட்டத்தில் ஓய்வு பெற்ற தொழிலாளர்களுக்கு வழங்கப்படவேண்டிய சேவைக் காலக் கொடுப்பனவுகளில் சுமார் ஒரு கோடி 10 லட்சம் கடந்த வாரம் வழங்கப்பட்டுள்ளது. மீதியான ஒரு கோடி 90 லட்சம் ரூபா விரைவில் வழங்கப்படும் - என ஸ்ரீலங்கா சுதந்திர தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் கே.எம்.கிருஷ்ண மூர்த்தி தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

ஐந்து தோட்டப்பிரிவுகளைக் கொண்ட மொன்டிகிறிஷ்டோ தோட்டத்தில் ஓய்வு பெற்ற 300 தோட்டத் தொழிலாளர்களுக்கு நீண்டகாலமாக சேவைக்காலக் கொடுப்பனவு வழங்கப்படவில்லை.

தோட்ட நிர்வாகத்தின் இந்த அசமந்தப் போக்குக் குறித்து நாவலப்பிட்டி உதவித் தொழில் ஆணையாளரின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது. இதைத் தொடர்ந்து குறிப்பிட்ட தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டியமூன்று கோடி ரூபாவில் தற்போது ஒரு கோடி 10 லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. மிகுதிப் பணத்தை விரைவில் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது- இவ்வாறு கிருஷ்ண மூர்த்தி தெரிவித்துள்ளார். (204)

# நுவரெலிய பிரதேச சபை வேட்பு மனு நிராகரிக்கப்பட்டமை மனவருத்தமே

## இப்படிக் கூறுகிறார் முத்து சிவலிங்கம்

நுவரெலியா, ஜன.31

நுவரெலிய பிரதேச சபைக்கான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வேட்பு மனு நிராகரிக்கப்பட்டதற்கு இளைஞர்களின் வயதை முறையாக குறிப்பிடாததும், ஒரு இளைஞரின் பெயரைக் குறிப்பிடாததுமே காரணம் எனத் தெரிவித்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் முத்துசிவலிங்கம் இதுதொடர்பில் தாமும் மனம் வருந்துகிறார் எனத் தெரிவித்துள்ளார்.

மேலும் ஏனைய மாவட்டங்கள் முழுதும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், அரசுடன் இணைந்து போட்டியிடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில், நுவரெலிய பிரதேச மக்கள் உள்ளூராட்சித் தேர்தலில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸை எதிர்பார்த்து இருந்தனர். வேட்புமனு நிராகரிக்கப்பட்டதால் மக்கள் கவலையடைந்துள்ளனர் என்றும் தெரிவித்துள்ளார். (ளி)

# பாடசாலையை ஆரம்பிக்க நடவடிக்கை

கண்டி,ஜன.31

மண்சரிவு அபாயம் காரணமாக மூன்று வாரகாலமாக மூடப்பட்டிருந்த கண்டி கோத்தமி மகளிர் கல்லூரியை இன்று திங்கட்கிழமை மீண்டும் ஆரம்பிக்குமாறு மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை காலை இந்தப் பாடசாலைக்கு நேரில் சென்று பார்வையிட்ட முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க, மாணவிகளின் கல்வி நிலையைக் கருத்திற்கொண்டு நாளை திங்கட்கிழமை மீண்டும் பாடசாலையை ஆரம்பிக்குமாறு தெரிவித்துள்ளார்.

மண்சரிவு காரணமாக உடைந்த கட்டடங்களிலும் மண்சரிவு ஏற்படும் அபாயமுள்ள பகுதிகளையும் தவிர ஏனைய கட்டிடங்களை பயன்படுத்துமாறும் அவர் பாடசாலை அதிபருக்கு தெரிவித்துள்ளார்.(204)

# மாகாணசபை உத்தியோகத்தர் மரணம்

சபரகமுவ மாகாணசபையில் பிரதி நிதி முகாமையாளராகப் பணிபுரிந்த பியதாஸ (வயது - 58) என்பவர் தனது வீட்டு தென்னை மரத்தில் இளநீர் பறிக்க முயன்றபோது ஏணி சறுக்கி கீழே விழுந்ததில் மரணமாகியுள்ளார் என இரத்தினபுரி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இரத்தினபுரி புதிய நகரத்தில் உள்ள அவரது உத்தியோக பூர்வ இல்லத்திலிருந்த தோட்டத்திலேயே இந்த விபரீதம் நிகழ்ந்துள்ளது.

கொழும்பு மாநகர திடீர் மரண விசாரணை அதிகாரி எட்வர்ட் அஹங்கம முன்னிலையில் மேற்கொண்ட சாட்சியங்களின் படி விபத்து மரணமெனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (ளி)

# வர்த்தக நிலையத்தில் திருட்டு

கண்டி, மஹிய்யாவை பகுதியில் அமைந்துள்ள சொகுசு வர்த்தகத் தொகுதியில் பல லட்ச ரூபாய் பெறுமதியான பொருள்கள் திருட்டுப் போயுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த திருட்டுச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது. குறித்த வர்த்தக மையத்திலிருந்து திருடப்பட்ட பொருள்களின் மொத்த பெறுமதி இன்னும் தெரியவரவில்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கட்டுகஸ்தோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (204)

31ஆம் நாள் நினைவஞ்சலி

திருமதி பொன்னுச்சாமி அன்னலட்சுமி



தோற்றம்
09.03.1934

மறைவு
01.01.2011

திதி: அபரபக்க துவாதசி

ஈரவிழிகள் இன்னமும் காயவில்லை
இதயத்தின் வேதனையும் குறையவில்லை
இருந்தும் இவ்வுலகைவிட்டு நீங்கள் அகன்று
இன்றுடன் மாதம் ஒன்று ஆனதுவோ!
வையகத்தில் நீங்கள் வாழ்ந்தபோது வாழ்வு
எமக்கு வசந்தமாய் ஆனது
வானுறையும் தெய்வத்துள் கலந்தபோது
வாழ்வே எமக்கு இல்லை என்றாகியது
தரணியில் உமக்கு இணையாருமில்லை
தவிக்கின்றோம் உம் வழிகாட்டல் ஏதுமின்றி.

என்றும் நாம் சிறக்கத் தந்தருள்வாய் ஆசீர்வாதம்
தாயே! நின் பாதம் சரண் அடைவோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

குமரகோட்டம்,
கோண்டாவில்.

தங்கள் பிரிவால் துயருறும்
கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# மது போதையிலிருந்த கான்ஸ்டபிள் கைது

பதுளை,ஜன.31

கடமை வேளையில் மதுபோதையுடன் காணப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். பதுளை பொது வைத்தியசாலைக்கு அருகில் தேர்தல் கடமையில் ஈடுபட்டிருந்தபோதே அவர் மதுபோதையுடன் காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொது மக்களிடமிருந்து கிடைத்த முறைப்பாட்டின் காரணமாக அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்தப் பொலிஸ் கான்ஸ்டபிள் சட்ட வைத்திய அதிகாரி முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டபோது அவர் மதுபோதையில் இருப்பது உறுதிப்படுத்தப்பட்ட தாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பதுளை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆனந்த விஜேசூரியவின் பணிப்பின் பேரில் பதுளைப் பொலிஸார் இது தொடர்பாக விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (204)

මහජන සම්පත
மஹஜன சம்பத
Mahajana Sampatha

2011.01.28

அலுவலக முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2350

B 8 0 5 0 4 0

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | B | 8 | 0 | 5 | 0 | 4 | 0 | ரூபா 16,691,485/= | பரிசு 01 |
| 1 பரிசுகள் | | 8 | 0 | 5 | 0 | 4 | 0 | ரூபா 2,000,000/= | பரிசுகள் |
| 2 பரிசுகள் | | | 0 | 5 | 0 | 4 | 0 | ரூபா 100,000/= | பரிசுகள் 11 |
| 3 பரிசுகள் | | | | 5 | 0 | 4 | 0 | ரூபா 10,000/= | பரிசுகள் 139 |
| 4 பரிசுகள் | | | | | 0 | 4 | 0 | ரூபா 1,000/= | பரிசுகள் 1357 |
| 5 பரிசுகள் | | | | | | 4 | 0 | ரூபா 100/= | பரிசுகள் 13735 |
| 6 பரிசுகள் | | | | | | | 0 | ரூபா 20/= | பரிசுகள் 135916 |
| 7 பரிசுகள் | | 8 | 0 | 5 | 0 | 4 | | ரூபா 10,000/= | பரிசுகள் 13 |
| 8 பரிசுகள் | | 8 | 0 | 5 | 0 | | | ரூபா 1,000/= | பரிசுகள் 144 |
| 9 பரிசுகள் | | 8 | 0 | 5 | | | | ரூபா 100/= | பரிசுகள் 1367 |
| 10 பரிசுகள் | | 8 | 0 | | | | | ரூபா 50/= | பரிசுகள் 13556 |
| 11 பரிசுகள் | B | | | | | | | ரூபா 20/= | பரிசுகள் 54476 |

Rs. 26,808,325.00

தேசிய லொத்தர் சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால நேரங்களுக்கு அப்பால் கடமைகளைச் செய்ய வேண்டும்

## மட்டு.பொலிஸ் அத்தியட்சகர் கருணாரட்ண தெரிவிப்பு

மட்டக்களப்பு,ஜன.31

கால நேரங்களுக்கு அப்பால் கடமைகளைச் செய்ய வேண்டும் என்ற படிப்பு ஒவ்வொரு பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் இருக்க வேண்டும்.

30 வருடங்களாக கொடுமைகளை அனுபவித்த மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற மிகுந்த விருப்பத்துடனேயே மட்டக்களப்பு மாவட்டத்துக்கு வந்துள்ளேன்.

இவ்வாறு தெரிவித்தார் மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஐ.எம். கருணாரட்ண. கடந்தவெள்ளிக்கிழமை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

அந்த மாவட்டத்திலுள்ள மக்களுடைய விருப்புகளை நிறைவேற்றும் வகையில் கடமையாற்றியதைப் பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன் .

மட்டக்களப்பு மாவட்டத்துக்கும் மக்களுக்கும் திருப்திகரமான சேவையைச் செய்ய வேண்டும் என்பதற்காகவே வந்தேன். அதற்கு அனைத்து பொலிஸ் பொறுப்பதிகாரிகள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், அரச உத்தியோகத்தர்கள், ஊடகவியலாளர்கள் ஆகியோர் பல்வேறு வகையிலும் உதவிகளைச் செய்திருக்கிறார்கள்.

நான் ஆறு, ஏழு மாதங்கள் கடமையாற்றிய நிலையில் கண்டி மாவட்டத்திற்குச் செல்ல வேண்டியுள்ளது. மட்டக்களப்புக்கு வந்தபோது சந்தோசமாக வந்தேன். அதேபோன்று கண்டி மாவட்டத்துக்கும் செல்கிறேன் - என்றார்.

இந்தநிகழ்வில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் பிரத்தியேகச் செயலாளர் ஏ.ஏ. வாஹிட், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயப் பொறுப்பதிகாரி திசநாயக்க, பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். (204)

# அரச அதிகாரிகளைத் தாக்குவது ஆரோக்கியமானதல்ல - அரியநேத்திரன்

மட்டக்களப்பு,ஜன.31

அரச அதிகாரிகளைப் பொது மக்கள் தாக்குவது என்பது ஆரோக்கியமானதோ, ஒழுக்கமானதான செயலோ அல்ல. அரச அதிகாரி தவறு செய்திருந்தால் உரிய முறையில் அணுகி அதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

மகிழடித்தீவு தெற்கு கிராம சேவை அலுவலரைத் வெள்ள நிவாரணப்பட்டியலில் தனது பெயர் இல்லை என்பதால் பொது மகன் ஒருவர் தாக்கியதினால் அந்த அதிகாரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளமை தொடர்பாகக் கருத்தினைத் தெரிவிக்கையிலேயே அவ்வாறு தெரிவித்துள்ளார்.வெள்ள நிவாரணத்திற்காக ஒரு கிராமசேவகரை தாக்குவதோ, பிரதேச செயலாளரை தாக்குவதோ ஒழுக்கம் அல்ல. உரிய அதிகாரி பிழை செய்தால் உரிய முறையில் அதற்குரிய நடவடிக்கையினை மேற்கொள்ளவேண்டும்.

வெள்ளத்தினால் அழிவடைந்த விவசாயிகளுக்கும் கால்நடைகளுக்கும் பயிர்ச்செய்கைக்கும் எவ்வாறு நஷ்டஈட்டைப் பெற்றுக்கொடுப்பது, அவற்றை மீள்கட்டியெழுப்புவது என அதிகாரிகள் முதல் அரசியல்வாதிகள் வரை நடவடிக்கை மேற்கொண்டுவரும் நிலையில் சாதாரண வெள்ள நிவாரணத்திற்கு எவரும் இந்த நடவடிக்கையில் ஈடுபடலாகாது.

எந்த அரச அதிகாரி பிழை செய்தாலும் அவரை சட்டப்படி அணுகவேண்டும். அதற்காக பொதுமக்கள் சட்டத்தை கையில் எடுப்பதும் அவர்களைத் தாக்குவதும் ஒழுக்கமான செயல் அல்ல என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (204)

# மாங்கேணியில் மினி சூறாவளி

மட்டக்களப்பு,ஜன.31

மட்டக்களப்பு வாகரை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள மாங்கேணியில் கடந்த வெள்ளிக்கிழமை முற்பகல் 10.45 மணியளவில் திடீரென சுழல் காற்று வீசியதால் 4 வீடுகள் கூரைப் பகுதியில் ஓடுகள், ஜன்னல்கள் உடைந்ததுடன் தென்னைமரங்களும் சேதமடைந்துள்ளன.

பிரப்பயடிமடு, மாங்கேணியில் மழையுடன் கூடிய சுழல் காற்று வீசியதால் மக்கள் பீதியடைந்து காணப்பட்டுள்ளனர். சுமார் 5 நிமிடம் வீசிய சுழல் காற்றினால் பாடசாலை மாணவர்களும் பொதுமக்களும் பீதியடைந்து காணப்பட்டனர்.இதனால் இயற்கை அனர்த்தம் ஏற்படும் என்ற பயத்தின் காரணமாக மாங்கேணி றோமன் கத்தோலிக்க பாடசாலை மூடப்பட்டு மாணவர்கள் பாதுகாப்பாக வீடுகளுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

சுழல் காற்றினால் பாதிக்கப்பட்ட வீடுகளை கிராம உத்தியோகத்தர் நேரில் சென்று பார்வையிட்டதுடன் இழப்புகளையும் பதிவுசெய்துகொண்டார். (204)

## சுத்தமாக வாழ...



சிரமதானம்: அண்மையில் தொடர்ந்து பெய்த மழையை அடுத்து தொற்று நோய்கள் பரவுவதைத் தடுப்பதற்காக ஓட்டமாவடி சுகாதார வைத்திய அலுவலகத்தின் வழிகாட்டலில் குப்பைகளை அகற்றும் பணி நேற்று முன்தினம் சனிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது. இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் ஓட்டமாவடி கிளையினர் கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபையுடன் இணைந்து குப்பைகளை அகற்றும் பணியில் ஈடுபட்டனர். (204)

# கிராமசேவை அலுவலர் தாக்கப்பட்டார்

மட்டக்களப்பு,ஜன.31

வெள்ள நிவாரணம் வழங்கும் பட்டியலில் தனது பெயர் இடம்பெறவில்லை என்றால் கிராம அலுவலர் தாக்கப்பட்ட சம்பவம் மகிழடித் தீவில் இடம்பெற்றுள்ளது.வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வெள்ள நிவாரணம் வழங்கும் பணி தற்போது இடம்பெற்று வருகின்றது.

மகிழடித்தீவு தெற்கு கிரமசேவை அலுவலர் பிரிவில் என்.ஆர்.சி. என்ற அர்ச சார்பற்ற நிறுவனம் ஒன்றினூடாக கடந்த வெள்ளிக்கிழமை நிவாரணம் வழங்கப்பட்டபோது நேர்ப் நிறுவனத்தினூடாக வீடு வழங்கப்பட்டவர்களுக்கு வெள்ள நிவாரணம் வழங்கப்படுவது இல்லை எனத் தெரிவித்து, குறித்த நபரின் பெயர் இல்லாததினால் குறித்த நபர் கிராமசேவை அலுவலரைத் தாக்கியுள்ளார்.

தாக்கப்பட்ட கிராமசேவை அலுவலகர் எம்.கருணாநிதி, மகிழடித்தீவு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் அம்புலன்ஸ் ஊடாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.தாக்கியவர் தலைமறைவாகிய நிலையில் பட்டிப்பளை பொலிஸார் அவரைத் தேடிவருகின்றனர்.(204)

# வெள்ளத்தால் வீடு இழந்தவர்களுக்கு தற்காலிக கூடாரங்கள் வழங்கவில்லை

மட்டக்களப்பு,ஜன.31

மட்டக்களப்பு, படுவான்கரை பிரதேசத்தில் வெள்ளத்தினால் வீடுகளை இழந்த குடும்பங்களில் ஒரு பகுதியினருக்கு இதுவரையில் தற்காலிக கூடாரங்களோ, இருப்பிடங்களோ வழங்கப்படவில்லையென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசாவிடம் அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பிரதேசத்திற்கு நேற்று முன்தினம் சனிக்கிழமை பயணம் மேற்கொண்ட பொன். செல்வராசா, பாதிப்புக்குள்ளான வேளாண்மை மற்றும் வீடுகளையும் பார்வையிட்டார்.

இதன் போது, தற்காலிக இருப்பிடங்களில் தங்கியுள்ள குடும்பங்களையும் சந்தித்தார்.

கொத்தியாபுலை பல்தேவை கட்டடத்தில் கிராம அபிவிருத்திச் சங்க தலைவர் பாலிப்போடி இளையதம்பி தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்ட மக்கள் சந்திப்பில், தமது கிராமத்தில் 45 குடும்பங்கள் வீடுகளை முற்றாக இழந்துள்ளபோதிலும், 05 குடும்பங்களுக்கு மாத்திரமே கூடாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஏனைய குடும்பங்கள் உறவினர்களின் வீடுகளில் தங்கியிருப்பதாக கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் பாலிப்போடி இளையதம்பி நாடாளுமன்ற உறுப்பினரின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார்.

நிவாரண முத்திரை உள்ள குடும்பங்களுக்கு மாத்திரம் உலருணவு வழங்கப்பட்டது. இந்த உலருணவு ஏனையவர்களுக்கும் வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் பாலிப்போடி இளையதம்பி கேட்டுக்கொண்டார்.

இந்தக் கலந்துரையாடலில் மீனவர் சங்கப் பிரதிநிதிகள், இளைஞர் கழக உறுப்பினர்கள் உட்பட பலரும் தமக்கு ஏற்பட்ட இழப்புக்கள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசாவின் கவனத்திற்குக் கொண்டுவந்தனர்.

இந்த விடயம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் வவுணதீவு பிரதேச செயலாளர் என். வில்வரெட்ணத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்தபோது, வீடுகளை இழந்த குடும்பங்களில் இதுவரை கூடாரங்களைப் பெறாத சகல குடும்பங்களுக்கும் கூடாரங்கள் வழங்கப்படும் என தெரிவித்துள்ளார்.கைவசமுள்ள கூடாரங்களில் 10 கூடாரங்களை உடனடியாக அனுப்பி வைக்கப் படும்.

ஏனைய குடும்பங்களுக்கு அடுத்த சில தினங்களில் கூடாரங்கள் வழங்குவதாகவும் தெரிவித்துள்ளார். அத்துடன் இதுவரை உலருணவு பெறாத குடும்பங்களுக்கும் நிவாரணம் உடனடியாக வழங்கப்படும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா தெரிவித்துள்ளார். (204)

# கோட்டைக்கல்லாறு மண்ணரிப்பைத் தடுக்க அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் இணக்கம்

அம்பாறை,ஜன.31

கல்முனை நெடுஞ்சாலையில் உள்ள கோட்டைக்கல்லாறு கடலேரியை அண்மித்த பகுதியில் ஏற்பட்டுள்ள மண்ணரிப்பினால் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகளில் இருந்து மக்களை மீட்பதற்கு மண்ணரிப்பை தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நிதி ஒதுக்கீடு செய்வதற்காக அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மகிந்த அமரவீர இணக்கம் தெரிவித்துள்ளதுடன் அதற்கான மதிப்பீட்டறிக்கையினை சமர்ப்பிக்குமாறும் நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசாவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அண்மையில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக வெள்ளநீரைக் கடலுக்குள் வடிந்தோடச் செய்வதற்காக வாவியும் கடலும் சங்கமிக்கும் பகுதியில் கால்வாய் வெட்டப்பட்டது. தற்போது வெள்ளம் வடிந்து கடல்நீர் கடலேரிக்குள் புகுந்துள்ளமையால் பெரிய அலைகள் ஏற்பட்டு மண்ணரிப்பு ஏற்படுவதாகவும் இதனால் அப்பகுதியில் உள்ள வீடுகள் உட்பட அப்பகுதியில் உள்ள நாகதம்பிரான் ஆலயம் என்பன நீரில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

மாவட்ட கடற்றொழில் உதவிப்பணிப்பாளர் எஸ்.ரி.ஜோர்ச், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் கே.மோகனதாஸ், களுவாஞ்சிகுடி பிரதேச செயலாளர் கே. அருள்ராசா சகிதம் நாடாளுமன்ற உறுப்பினர் பாதிக்கப்பட்ட பகுதிக்குச் சென்று பார்வையிட்டதுடன் மண்ணரிப்பை தடுப்பதற்கான நடவடிக்கைகள் குறித்தும் அதிகாரிகளுடன் ஆராய்ந்துள்ளார்.இதன்போது தொலைபேசியூடாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சருடன் தொடர்பு கொண்டு பாதிப்புகள் தொடர்பாக விளக்கமளித்ததுடன் மண்ணரிப்பை தடுக்க உதவுமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த வேண்டுகோளுக்கு அமையவே அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் நிதி ஒதுக்கீடு செய்வதற்கு இணக்கம் தெரிவித்துள்ளார். (204)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய சிந்தனை தேவை




ஆசிரியர் கருத்து

**பல** நாள் கள்ளன் ஒரு நாள் மாட்டுவான் என்பது போன்று, கூட்டமைப்புக்குள் நீண்டகாலமாகக் கனன்று வந்த பிரச்சினை வெடித்து வெளியே வந்து விட்டது. அமைப்புக்குள் இருக்கும் கட்சிகளின் ஒற்றுமை என்ன என்பது ஓரிரு தினங்களின் முன் இரு தரப்புக்களால் அறிக்கைகளாக மக்கள் முன் வைக்கப்பட்டன.

அதன் மூலம் கூட்டமைப்பு இரண்டு தரப்பாகப் பிரிந்து கிடக்கிறது என்பதை மக்கள் தெளிவாக அறிந்தனர். ஒரு தரப்பு முன்னாள் ஆயுதக் குழுக்கள். மற்றைய தரப்பு தமிழரசுக் கட்சி.

ஜனநாயக வழிக்குத் திரும்பிய முன்னாள் ஆயுதக் குழுக்களான ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆகியன தொடர்ந்தும் கூட்டமைப்பாகவே இயங்க வேண்டும் என்று நினைக்கின்றன. தமிழரசுக் கட்சியின் செயலாளர் மாவை சேனாதிராசாவும் அதில் உறுதியாக உள்ளார்.

ஆனால், தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணத்தில் உள்ள மூத்த உறுப்பினர்கள் சிலரே இப்போது பிரச்சினைகளைக் கிளப்புகின்றனர். பழைய சிந்தனைப் போக்கைக் கொண்ட இவர்கள், தொடர்ந்தும் தமது தோற்றுப் போன கொள்கைகளையும் தத்துவங்களையும் கட்சிக்குள் முன்னெடுத்துச் செல்ல முயற்சிக்கின்றனர்.

காலம் மாறிவிட்டது; கள யதார்த்தம் புதிய அரசியல் தேடல்களை நோக்கித் தமிழர்களை உந்தித் தள்ளுகிறது என்பதை இவர்கள் ஏனோ புரிந்து கொள்கிறார்கள் இல்லை.

புலிகளின் காலத்தில் தமது மொத்த அரசியல் செயல்பாடுகளுக்கும் முழு நேர ஓய்வைக் கொடுத்திருந்த இவர்கள், இப்போது கட்சிக்குள்ளும் அரசியலிலும் தம்மை முன்னிலைப்படுத்த முயற்சிப்பதன் விளைவே கூட்டமைப்புக்குள் தோன்றும் வெடிப்புக்களும் உரசல்களும்.

சிவாஜிலிங்கத்தின் தெரிவு தொடர்பிலும் இதுவே நடந்தது. தமிழரசுக் கட்சியில் உள்ள மூத்தவர்கள் சிலர் தன்னிச்சையாக மேற்கொண்ட முடிவுகளே இரு தரப்புக்களும் அறிக்கைப் போரில் கட்சிகள் ஈடுபடக் காரணமானது.

கூட்டமைப்புக்குள் மேலும் கட்சிகள் சேர்ந்து வரும் சூழலில், தமிழ் மக்கள் நீண்ட காலமாக எதிர்பார்த்திருந்த தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமை கைகூடி வரும் போல் தெரியும் ஒரு சந்தர்ப்பத்தில் இத்தகைய அறிக்கைப் போர்களும் வெடிப்புகளும் தேவையற்றவை.

கெடுகுடி சொற்கோளா என்பது போல் தொடர்ந்தும் இத்தகைய நிலையை வளர்த்துச் செல்வது நல்லதல்ல என்பதை அறிக்கை விவாதத்தில் ஈடுபட்ட இருதரப்புத் தலைவர்களும் புரிந்து வைத்திருக்கிறார்கள். அது வரைக்கும் மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டுக் கொள்ளலாம்.

நேற்று நடைபெற்ற கூட்டம் ஒன்றில், உள் கருத்து மோதல்களைப் பேசித் தீர்த்துக் கொள்ளலாம் என்று இரு தரப்புத் தலைவர்களும் கூறி இருக்கின்றனர். ஆனால், பிரச்சினைக்குரியவர்களை, பிரச்சினைகளை ஏற்படுத்துபவர்களை என்ன செய்வது? புதிய முயற்சிகளுக்கு முட்டுக்கட்டையாகவும் இளைஞர்களுக்குத் தடையாகவும் இருப்பவர்களை என்ன செய்வது? மக்கள் நலனா கட்சி நலனா முக்கியம் என்பதையும் தலைவர்கள் தீர்மானிக்க வேண்டும். தமிழரசுக் கட்சியில் மட்டுமல்ல மறு தரப்பில் இருந்தும்கூட இது பற்றிச் சிந்திப்பது மிக அவசியம்.

# வாசகர் திருமுகம்

## இப்படியும் ஏமாற்றுவதா?

நாட்டில் ஏதேதோ விதமாக எல்லோரும் ஏமாற்றப்பட்டு வருகிறார்கள். ஏமாறுபவர்கள் உள்ள வரையிலும் இது நடைபெறத்தான் செய்கிறது. ஆனால் இங்கு குறிப்பிட்ட ஏமாற்றமானது ஒரு வித்தியாசமானது. தென்மராட்சியில் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் ஒன்றில் சீவல்தொழிலில் ஈடுபடும் அங்கத்தவர்களுக்கு 2011 ஆம் ஆண்டு உற்பத்தி தொடர்பான ஒன்றுக்கு அழைப்பு அனுப்பப்பட்டு 09.01.2011 ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெற்றது.

அக்கூட்டம் அரசியல் சார்ந்த கூட்டமாக ஒரு கட்சிப் பிரமுகரை அழைத்து கூட்டம் நடத்தியபின்பு அங்கத்தவர் சம்பந்தமாக ஒரு சில வார்த்தைகளுடன் கூட்டம் முடிவடைந்தது.

இவற்றைப் பார்க்கும்போது சம்பந்தப்பட்டவர்கள் அரசியலில் ஈடுபட சங்கத்தைப் பயன்படுத்தி அங்கத்தவரை ஏமாற்றியது மிகவும் வேதனைக்குரிய ஒரு விடயமாக அமைந்தது.

ஏன் கூட்டத்திற்கு வந்தோம் என முணுமுணுத்தபடி கூட்டம் நிறைவடையாமலேயே சென்றவர்களையும் அவதானிக்க முடிந்தது.

கூட்டுறவுச் சங்கமானது அரசியல் கலக்காத, தலையீடு இல்லாமல் சுயமாக இயங்க வேண்டிய ஒன்றாகும். இவ்வாறான விடயங்களில் சிலர் தமது கல்வி அறிவு குறைந்த ஏழைத் தொழிலாளர்களை ஏமாற்றுவது மிகவும் கொடுமையானது.

எல்லா வழிகளிலும் பாதிக்கப்பட்டிருக்கும் இவர்களின் உள்ளத்தில் அரசியல் சாக்கடையை ஏமாற்றி விதைக்க நினைப்பதுதான் வேதனை. எந்த ஒருவரினதும் அனுமதியும் இல்லாது இவ்வாறான செயற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அரசியல் கூட்டம் நடத்தி விட்டு அங்கத்தவர் கூட்டம் என சங்கப் பணத்தைச் செலவு செய்வது சரியா. அங்கத்தவர் பணத்திலா அரசியல்?. யாதுமறியா அப்பாவிகள் கேள்வி எழுப்புகிறார்கள்.

அங்கத்தவர்கள்.

## டெங்கு மரணங்களைத் தடுக்க முடியாதா?

யாழ்.மருத்துபீடத்தின் சமுதாய மருத்துவத்துறை மாணவர்களாகிய நாம் சில பேர் சேர்ந்து நோய்கள் தொடர்பாக ஆய்வு செய்தபோது 2010 இன் இறுதியில் அதிகளவான டெங்கு மரணங்கள் யாழ்ப்பாணத்தில் பல பகுதிகளில் நடந்துள்ளன.

இப்போது நுளம்புப்பெருக்கம் என்பதால் 2011 ஆகிய இவ்வருட ஆரம்பத்தில் மேலும் டெங்கு மரணங்கள் நிகழ வாய்ப்புள்ளது. யாழ்.போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர்களின் கருத்துகள் இதனை உறுதிப்படுத்துகின்றன.

அதிகளவான டெங்கு நோயாளர்கள் டெங்குக் காய்ச்சலில் ஆபத்தான நிலை வந்த பிறகே வைத்தியசாலைக்கு வருவதால் இரத்தக் குழாய்கள் வெடித்துக் குருதிப் பெருக்கம் ஏற்படும் நிலையில் காப்பாற்ற முடியாமல் மரணமடைகின்றனர்.

பொதுமக்களுக்கு இது தொடர்பாகப் போதிய விழிப்புணர்வு இல்லை. டெங்கு நோய்க் கட்டுப்பாட்டில் சுகாதாரத் திணைக்களத்தின் செயற்பாடுகள் திருப்திகரமாக நடைபெறுவதாகக் காணவில்லை. ஒழுங்கான திட்டமிடலுடன் எந்த நடவடிக்கையும் நடப்பதாகத் தெரியவில்லை.

யாழ்.மாநகரப் பகுதியில் பெருமளவாக [illegible] நோயால் பாதிக்கப்பட்டோர் [illegible] மரணமடையும் நிலையும் காணப்படுகிறது.

ஒருவரையொருவர் கூட்டங்களில் குற்றம்சாட்டி பிழை பிடிப்பதையே வேலையாக இருக்கிறதேதவிர உரிய நடவடிக்கை எடுப்பார் எவரும் இல்லை. யாரும் ஒற்றுமையாகச் செயற்படுவதாக இல்லை.

டெங்குக் கட்டுப்பாட்டில் ஒவ்வொரு வருடமும் காணப்படும் குறைகள், நிறைகள் விமர்சிக்கப்பட வேண்டும். இதன் மூலம் மக்களிடமும் விழிப்புணர்வு ஏற்படும். இதுபோல் குறைபாடுகள் இனங்காணப்பட்டு சரியாக ஒழுங்கு முறையில் டெங்குக் கட்டுப்பாட்டு வேலைகள் யாழில் நடைபெறும். இதற்குப் பத்திரிகைகள்களம் அமைத்துக் கொடுக்க வேண்டியது அவசியம்.

ஏனெனில் பொதுமக்களுக்கு நல்லவை நடப்பதற்கு ஊடகங்களின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது.

மருத்துவ மாணவர்கள்.

## திணைக்களத் தலைவர்களுக்கு எடுத்துக்காட்டு

07.01.2011 ஆம் திகதி பிற்பகல் 2 மணியளவில் 750 வழியாக இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்து யாழ்.மத்திய பேருந்துத் தரிப்பிடத்திலிருந்து புறப்பட்டது.

அப்போது ஒருவர் பேருந்தில் வந்து ஏறினார். பேருந்தில் ஏறியவரை கண்டவுடன் சாரதி பின்பக்கம் திரும்பி ஒருவரை எழும்பி ஆசனத்தை கொடுக்கும்படி கூறினார். உடனே ஒரு இளம் பையன் ஆசனத்தை விட்டு எழுந்தான்.

அப்போது அங்கு நின்ற வயது வந்த பெண்மணியை அந்த ஆசனத்தில் இருக்கும்படி கூறினார் அங்கு நின்ற மற்றொருவர்.

அதுமட்டுமன்றி அங்கு நின்ற பயணிகளில் சிலரும் அவரை ஆசனத்தில் இருக்குமாறு தெரிவித்தனர்.

அதற்கு அவர், பயணிகளுக்காகவே எமது சொத்து. அவர்ளுக்காகவே சேவை செய்கின்றோம். பயணிகள் சௌகரியமாகப் பயணம் செய்தால் போதும். நான் நிற்கின்றேன் எனக்கூறினார். பருத்தித்துறைச் சாலைவரை அவர் நின்று கொண்டே பயணித்தார். பருத்தித்துறை இலங்கை போக்குவரத்துச் சாலையில் அவர் இறங்கினார். அதன் பின்னர்தான் நான் கேட்டேன் இவர் யார் என்று. இவர் தான் பருத்தித்துறைச் சாலை முகாமையாளர் எனக் கூறினார் நடத்துநர். நான் உடனே மனம் நெகிழ்ந்து உடனடியாகத் தொலைபேசி மூலம் அவரைப் பாராட்டினேன்.

எத்தனையோ திணைக்களத் தலைவர்கள் மத்தியில் இப்படியும் ஒருவர் இருக்கிறார் என்று நான் மிகவும் மகிழ்வடைந்தேன். மற்றைய திணைக்களத்தினரும் இவரைப்போல மக்களை மதித்து சேவை செய்தால் மகிந்த சிந்தனை மகிமையான சிந்தனையாக மாறும்.


ம.சூரியகுமார்

## இந்த வீதிகள் மட்டும்...

இப்போது எங்கும் எந்த வீதியும் குழியும் பள்ளமுகமாகக் காட்சியளிக்கின்றன. மழைக் காலத்தில் இது தவிர்க்க முடியாதது எனக் கூறலாம். ஆனால் குறிகாட்டுவான் வீதியில் வேலணை பாலம் கழிந்தபின் பிள்ளையார் கோயிலுக்கு அப்பால் உள்ள வீதியும் கண்ணகை அம்மன் கோயில் வீதி மீண்டும் குறிகட்டுவான் வீதியில் சந்திக்கு வரையான பகுதியும் குழியோ, பள்ளமோ இல்லாது வாகனம் இலகுவாகப் போகக்கூடியதாக உள்ளன. (வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வீதிகள்) இது மகிழ்வானது, அதிசயமானது ஆகும். இவ்வீதி 2000ஆம் ஆண்டில் புனரமைக்கப்பட்டு 10 வருட காலம் ஆகியும் சேதமடையாதுள்ளமையைப் பாராட்டத்தான் வேண்டும். இதேபோல் அனைத்து ஒப்பந்தகாரரும் வேலை செய்தால் வீதிப் பிரச்சினை எழமாட்டாது. குறைந்த கூறுவிலையைக் குறிப்பிடும் தரமற்ற ஒப்பந்தகாரருக்கு வேலை கொடுப்பதை அரச அதிகாரிகள் சிந்திக்க வேண்டும் என்பது எமது தாழ்மையான வேண்டுகோளாகும்.

கா.முரளிதரன்,புங்குடுதீவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலைக்கு நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி அவர்களால் போட்டோ பிரதி இயந்திரம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

# மாணவரின் கல்விக்கு அனைவரது ஒத்துழைப்பும் அவசியம்

யாழ்ப்பாணம், ஜன.31

மாணவர்களின் கல்வித் தரம் தற்போது உயர்ந்து வருகிறது. இதற்கு அனைவரது ஒத்துழைப்பும் தேவை. எமது மாணவர்கள் நல்ல நிலையை அடைய வேண்டுமாயின் அவர்களுக்கு எல்லா வகையிலும் கற்றலுக்குத் தேவையான உதவிகள் வழங்கப்பட வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாலய முதல்வர் செல்வி க.கமலநாயகி.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலைக்கு போட்டோ பிரதி இயந்திரம் 'புறஜெக்டர்' ஆகியவற்றை பாடசாலை நூலக மண்டபத்தில் வைத்து பாடசாலை அதிபரிடம் கையளித்தார்.

இந்நிகழ்வில் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதியும் வழங்கப்பட்டது. பாடசாலையில் உள்ள ஸ்தாபகர் கட்டடத் தொகுதி வர்ணம் பூசுவதற்காக இந்த நிதி வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் உரையாற்றும் போதே பாடசாலை அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

நாடாளுமன்ற உறுப்பினர் இந்த உதவிகளை வழங்கியமை வரவேற்கத்தக்கது. எனினும் எமது பாடசாலைக்குரிய வளங்கள் மிகவும் பற்றாக்குறையுடனேயே உள்ளன. அவற்றையும் நிவர்த்தி செய்ய உதவ முன்வர வேண்டும். - என்றார்.

இதனைத் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர் உரையாற்றுகையில்:

மாணவர்கள் கல்வி அறிவிலும் பண்பு சார் விருத்தியிலும் உயர்வடைந்து பாடசாலையைக் கல்லூரித் தரத்துக்குக் கொண்டுவர வேண்டும் என்பதே எங்களது அவா.

இதற்கான அனைத்து ஒத்துழைப்பையும் நாம் வழங்கத் தயாராகவுள்ளோம்.

மாணவர்கள் கல்விச் செயற்பாட்டுக்காக பிரத்தியேக வகுப்புக்களை நாடுவதற்கு இடமளிக்கக் கூடாது.

அவர்களது கல்விக்குரிய முழுத்தேவைகளும் பாடசாலைகளில் நிறைவேற்றக் கூடியதாக ஆசிரியர்கள் முழு மனதுடன் செயற்பட வேண்டும். - எனவும் கேட்டுக் கொண்டார்.

(ம)

# பொது நிறுவனங்கள் அபிவிருத்திக்கு நிதியுதவி

யாழ்ப்பாணம், ஜன.31

யாழ். நகரில் இயங்கி வரும் திருவள்ளுவர் சனசமூக நிலையத்துக்கு யாழ் மாநகரசபை உறுப்பினர் எஸ். விஜயகாந் நிதியுதவி செய்துள்ளார்.

திருவள்ளுவர் சனசமூக நிலையமும் அதன் கீழ் இயங்கும் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம், விளையாட்டுக் கழகம், இளைஞர் கழகம், சிறுவர் கழகம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கடந்த 21 ஆம் திகதி யாழ். மாநகர சபை உறுப்பினர் எஸ். விஜயகாந்தைச் சந்தித்து கிராம வளர்ச்சி பற்றியும், சனசமூக நிலையத்தின் நிலைமை பற்றியும் கலந்துரையாடினர்.

இதில் தமக்கு நிதியுதவி வழங்குமாறும் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதனையடுத்து சனசமூக நிலையத்தின் வளர்ச்சிக்காக ஒருதொகைப்பணத்தினை திருவள்ளுவர் சனசமூக நிலையத்தின் தலைவர் சி.கௌரிதரன், பொருளாளர் இ.ரகு ஆகியோரிடம் மாநகர சபை உறுப்பினர் எஸ். விஜயகாந் கையளித்தார்.

(ற)

# சஞ்சிகை வெயியீடுகள் மாணவர் ஆற்றலை மேம்படுத்தும்

யாழ்ப்பாணம், ஜன. 31

சஞ்சிகை வெளியீடானது மாணவர்களின் ஆற்றலை மேம்படுத்திக் கூடியது என யாழ். பல்கலைக்கழக பதில் துணை வேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் தெரிவித்தார்.

யாழ்.பல்கலைக்கழக வணிக மன்ற ஒன்றியத்தினால் வருடாந்தம் வெளியிடப்படும் ''விருட்சம்'' சஞ்சிகையின் 11 ஆவது மலர் வெளியீட்டு நிகழ்வில் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

மாணவர்களின் ஆக்கங்களை ஒன்றிணைத்து சமூகத்துக்கு நன்மை தரக் கூடிய கருத்துக்களைத் தாங்கிய சஞ்சிகைகளை இவ்வாறு தொகுத்து வழங்குவது மாணவர்களின் ஆற்றலை மேன்மேலும் வளர்க்கக்கூடியது.

பல்கலைக்கழகக் காலத்தில் மாணவர்கள் தமது ஆக்கங்கங்களை சஞ்சிகை மூலம் வெளிப்படுத்தும் போது பல்கலைக்கழகம் முடிவுற்று வெளியேறும் காலத்திலும் அவர்களது பெயரும் ஆக்கமும் அழியாமல் தக்க வைக்கப்பட்டிருக்கும். இதனை மீளப்பார்க்கும் போது மனதுக்கு சந்தோசத்தைக் கொடுக்கும். அத்துடன் பாடசாலை மாணவர்களுக்கும் பயனுள்ளதாக அமையும்.

இவ்வாறு சஞ்சிகையை வெளியிடுவதற்கு முயற்சிகளை எடுத்தமைக்கு பாராட்டுகின்றேன்.

வணிகத்துறையின் முக்கியத்துவம் அதன் மகத்துவம் பற்றி வங்கிகளில் பணியாற்றும் சேவையாளர்களின் எண்ணிக்கையைப் பார்த்து தெரிந்து கொள்ள முடிகிறது.

வணிக்கல்வி தொழிலுடன் பிரதான பங்கு வகிப்பதால் இத்துறையில் கற்கும் மாணவர்களின் ஆற்றலுக்கு மேலும் ஆசிரியர்கள் உதவியாக இருக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

அத்துடன் மிகக் குறைவான மாணவர்களே வணிகத்துறையில் கல்வி கற்பதால் இவர்களின் துறைசார்ந்த அறிவு சமுதாயத்துக்கு பயனுள்ளதாக சென்றடைய வேண்டும்.

யாழ். மாவட்டத்தில் வங்கிகளில் பணிபுரியும் உத்தியோகத்தர்கள் அதிகமானோர் வணிகத்துறையில் இருந்து வெளியேறிய மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இதுபோன்று சிறந்த கல்விமான்களை உருவாக்க ஆசிரியர்களின் உந்துதலில் சஞ்சிகைகளை வருடாவருடம் வெளியிட்ட வணிகத்துறை சார்ந்தோர் இன்று 11 ஆவது இதழான விருட்சம் சஞ்சிகையில் ஆங்கில மொழியுடன் கூடிய பயன்தரும் ஆக்கங்களை இன்றைய சூழலுக்கு ஏற்றாற்போல் தொகுத்து இருக்கின்றார்கள். இச் சஞ்சிகை சமுதாயத்துக்கு சிறந்த முறையில் சென்றடைந்து அனைவரும் பயன் பெற வேண்டும் இது ஆக்கங்களை எழுதியவர்களுக்கு மேலும் உற்சாகத்தைக் கொடுக்கும் எனவும் தெரிவித்தார்.

(ம-313)

# ஆயுர்வேத 2-நாள்சேவை நிறுத்தம்

வரணி,ஜன.31

சாவகச்சேரி பிரதேச சபையின் வரணி உப அலுவலகத்தில் இயங்கும் இலவச ஆயுர்வேத வைத்திய நிலையத்தில் கடந்த 24ஆம் திகதி முதல் மறு அறிவித்தல் வரை திங்கள் மற்றும் புதன்கிழமை வைத்திய சேவை இடம்பெறமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நாள்களில் மிருசுவில் அலுவலகக் கடமைக்கு வைத்தியர் செல்வதன் காரண மாகவே வைத்தியசேவை இடம்பெறமாட்டாது எனத் தெரிவிக்கப்பட்டது.

மிருசுவில் ஆயுர்வேத வைத்தியசாலை வைத்தியர் லீவில் சென்றுள்ளதால் இந்த நிலைமை ஏற்பட்டதாகக் கூறப்பட்டது.

(ஒ-122)

# மாற்று வலுவுடையோருக்கு மறுவாழ்வுப் பணி

நாட்டின் போர்ச்சூழல், நோய்க்காரணிகள், விபத்து போன்றவற்றால் வலுவிழந்து வாழ்வுப்பாதை தடைப்பட்டு பரிதவித்த எம்மினிய சகோதரரை சமூகத்தில் வாழ்வாங்கு வாழவைக்கும் நோக்குடன் 1987 இல் யாழ்ப்பாணத்தில் கால்பதித்தது ஜெய்ப்பூர் நிறுவனம். இந்த நிறுவனம் ஆரம்பத்தில் இருந்தது போல் அவயவம் பொருத்துதலில் மட்டும் நில்லாது சிறந்த தொழில்நுட்பத்திலான செயற்கைக் கால்கள், கரங்கள் பொருத் துதல், தரமான குறைபாட்டு நிவர்த்தி உறுப்புகள் பொருத்துதல் (கழுத்துப் பட்டி, முள்ளந்தண்டு ஆதார உறுப்பு, கால்களுக்கான கலிப்பர்கள், விசேட காலணிகள் என்பன) நவீன முறையிலான நடமாடும் உப கரணங்கள் தயாரித்து வழங் குதல் (ஊன்று கோல்கள், வெவ் வேறு விதமான நடை தாங்கி கள், சக்கரநாற்காலிகள், (முச்சக் கர வண்டிகள்) இயன்மருத்துவ சிகிச்சை, வைத்தியசாலை தரிசிப்பு, விசேட வைத்திய ஆலோசனை, கல்வி ஊக்குவிப்புக்கொடுப்பனவு, சுழற்சி முறைக் கடனுதவி, சமூக புனர்வாழ்வு சேவை, உளவளத் துணை போன்ற சேவைகளையும்வழங்கிவருகின்றது.

எனினும் எம்மை அச்சுறுத்துகின்ற பல்வேறு விதமான வலுவிழப்பு, பெருகி வரும் மாற்றுவலுவுடையோர் தொகை என்பவற்றால் எமது புனர்வாழ்வுச் சேவை களை நாம் மேலும் விரிவாக்க வேண்டிய கட்டாயத்துள் உள்ளோம். எனவே இல. -5, பழைய பூங்கா வீதி, சுண்டிக்குளியில் ஒரே கூரையின்கீழ் மேற்குறிப்பிட்ட சேவைகளை வழங்கி வந்த ஜெய்ப்பூர் நிறுவனம் 19/3, கொழும்புத் துறை வீதி, சுண்டிக்குளியில் இன்னுமொரு கட்டடத்தை தனது சேவைகளை விரிவாக்குவதற்காக தனக்கென அமைத்துக் கொண்டுள்ளது. இக்கட்டடத்தில் மாற்று வலுவுடையோருக்கு தேவையான நடமாடும் உபகரணங்களை நவீன முறையில் தயாரித்து வழங்குவதோடு மட்டுமல்லாது பயிற்சிப்பட்டறைகள், தொழில்பயிற்சி என்பவற்றையும்மாற்றுவலுவுடையோருக்கு வழங்கப் பல நிறுவனங்களுடன் பல் வேறு நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகின்றது. தனது நிறுவனத்தில் தேவைக்கேற்ப மாற்று வலுவுடையோருக்கு தொழில் வாய்ப்பு வழங்கியுள் ளமையும், மாற்றுவலுடையோர் திறமைகளை வெளிக்கொணர விளையாட்டுப் போட்டிகள், துவிச்சக்கர, முச்சக்கரவண்டி ஓட்டப் போட்டிகள், கலை நிகழ்வுகள், கவிதை, கட்டுரைப் போட்டிகள் என்பன நிகழ்த்திவருவது குறிப்பிடத்தக்கவையாகும். இவ்வாறு மாற்றுவலுடையோர் உடல், உளரீதியாக மட்டு மல்லாது சமூக, பொருளாதாரத்திலும் பிறரை எதிர்நோக்காது சுயசார்புடன் சுபீட்சமடைய, சமூகத்தில் வலுப்பெற்றவர்களாய் மிளிர, பல்வேறு சேவைகளுடன் தேவைக்கேற்ப பல அவசியத் திட்டங்களை செயலில் விரிவாக்கி தனது பணியை முன்னெடுத்துச் செல்லும் என்பது நிச்சயம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தருவது வித்தியா — இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடர்:**
பலர் பங்கேற்கும் நிகழ்ச்சி ஒன்றில் நீங்களும் கலந்து கொள்ளலாம். சிலர் கேட்ட உதவியைச் செய்ய மனம் இல்லாமல் கையை விரிப்பீர்கள். செய்ய நினைத்த வேலை ஒன்றை சோம்பலால் மாற்றி அமைப் பீர்கள். சில விடயங்கள் பற்றிப் பெரிய அளவில் மனக்கோட்டை கட்டுவீர்கள்.

**இடபர்:**
வீண் பிடிவாதம் தவிர்த்து விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டிய நாள். மனைவி தொடர்பான விடயங்களில் அனுசரித்துச் செல்ல வேண்டும். மாற்று மத நண்பர்களை நம்பி எந்தக் காரியத்திலும் இறங்க வேண்டாம். பிள்ளைகள் வழியில் திடீர்ச் செலவுகள் ஏற்படலாம். ஆதாய மில்லாத அலைச்சல்கள் அதிகரிக்கும்.

**மிதுனர்:**
மதிப்பு, கௌரவம் அதிகரிக்கும் நாள். உங்கள் முன்னேற்றத்தில் அக்கறை கொண்ட சிலரைச் சந்தித்துப் பேசுவீர்கள். திட்டமிட்ட அளவில் நின்றிருந்த காரியம் ஒன்று செயற்பாட்டிற்கு வரும். விருப்பமான உணவு வகைகளைச் சாப்பிடக் கணிசமான பணத்தைச் செலவு செய்வீர்கள்.

**கடகர்:**
உறவினர்கள் சந்திப்பால் சந்தோஷம் அடைவீர்கள். சிலர் உங்களைப் பாராட்டிப் பேசித் தங்களுக்கு வேண்டியதைப் பெறலாம். நண்பர்கள் சிலருடன் வெளியிடங்களுக்குச் செல்லலாம். உங்களின் அனுபவம் ஒன்றை மற்றவர்களுக்கு அறிவுரையாகச் சொல்வீர்கள். தம்பதியர் இடையே அன்னியோன்யம் அதிகரிக்கும்.

**சிங்கர்:**
குடும்பத்தில் கலகலப்பு அதிகரிக்கும் நாள். நடக்குமோ நடக்காதோ என நினைத்த காரியம் இன்று திடீரென நடக்கலாம். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைத்து மகிழ்ச்சி அடைவீர்கள். வீட்டில் வசதி, வாய்ப்புகளை அதிகரிக்க முற்படுவீர்கள். ஒருவரை நம்பி ஒப்படைத்த வேலை முடியாமல் அதை நீங்களே செய்ய நேரிடலாம்.

**கன்னி:**
திட்டமிட்ட பயணங்களை மாற்றி அமைக்கலாம். மாமன் மைத்துனர்கள் மத்தியில் உங்களின் மதிப்பு, செல்வாக்கு அதிகரிக்கும். சேமித்த பணம் ஒன்றில் திடீரெனக் கைவைக்கலாம். நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசலாம். சில விடயங்களில் தவறான முடிவெடுத்து விட்டு வருத்தப்படுவீர்கள்.

**துலாமர்:**
மலைபோல் வந்த பிரச்சினை ஒன்று பனிபோல விலகி விடும். புதிய பணவரவுகளால் வீட்டுச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள். நண்பர்கள் உங்களிடம் கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவர். மற்றவர்களின் பேச்சைக் கேட்காமல் எதிலும் தன்னிச்சையாக செயற்பட நினைப்பீர்கள். கைமாத்தாகக் கொடுத்த பணம் வரலாம்.

**விருச்சிகர்:**
ஏதாவது வேலைகளை இழுத்துப் போட்டுக் கொண்டு செய்வீர்கள். வழக்கமாகச் செய்யும் காரியம் ஒன்றை இன்று செய்ய முடியாமல் போகலாம். கணவன் மனைவி இடையே சிறு சச்சரவுகள், வாக்குவாதங்கள் ஏற்படலாம். வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்கிக் கொடுப்பீர்கள். பழைய பிரச்சினை ஒன்றை நினைத்து வருந்துவீர்கள்.

**தனுசு:**
புதிய முயற்சிகளில் வெற்றி உண்டு. நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த நபர் உங்களைத் தேடி வரலாம். உறவினர்கள் சிலரின் வீடுகளுக்குச் செல்லலாம். எதிர்பாராத சிறு பணவரவுகளுக்கு வாய்ப்பு உண்டு. சில விடயங்களில் மற்றவர்களை முந்திக் கொண்டு செயற்பட முற்படுவீர்கள்.

**மகரர்:**
கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாமல் போகலாம். விரும்பிய ஒரு பொருளை அதிக விலை கொடுத்து வாங்கி விட்டு வருத்தம் அடைவீர்கள். உடல் ரீதியாகச் சில பிரச்சினைகள் உருவாகலாம். பிரியமான சிலர் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து எரிச்சல் உண்டாக்கலாம். பெண்கள் கணவரின் அன்பைப் பெறுவர்.

**கும்பர்:**
தெம்பு, உற்சாகமாகச் செயற்படுவீர்கள். சொத்து விவகாரங்களில் நினைப்பது நடப்பது கடினம். உறவினர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். பிரியமான சிலருடன் பயணங்கள் செல்லலாம். மற்றவர்களிடம் உங்களின் சொந்த விடயங்களைப் பகிர்ந்து கொள்வீர்கள்.

**மீனர்:**
வேலையாள்களால் ஏற்பட்ட தொல்லைகள் குறையலாம். பெண்கள் வழியில் மனதிற்கு இனிய உதவிகள் கிடைக்கலாம். உறவினர்கள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். கடன் பிரச்சினைகள் தீர்க்க முற்படுவீர்கள். சிலரிடம் கோபம், வேகமாக நடந்து கொள்ளலாம்.

# உறங்கும் விழிப்புணர்வும் உயிர் கொல்லும் எய்ட்ஸ் நோயும்

எமது சமூகம் ஓர் பாதாளத்துள் நகர்கின்ற நிலையில்தான் உள்ளது. இந்த விடயத்தைப் பேச, எழுதத் துணியாத ஒரு மனநிலை எம் சமூகத்தில் பலரில் உண்டு. எதிலும் நழுவல் போக்கு, அதுமட்டும்தான் என்றில்லை. சிந்தனைத் திறனற்ற தலைமைத்துவத்தின் பிடியில் சிக்கி விட்ட அறிவுச் சமூகம், அதனால் அழிவுறும் நிலையை நெருங்கிக் கொண்டே செல்கிறது. எமது சமூகத்தின் விருத்தியின்மைக்கு இதுவே காரணமாகிறது. இந்த விடயம் தொடர்பாக நாம் சுருக்கமாகக் கூறினால் அறிவுச் சமூகம் மிகப் பெரும் பொறுப்புத் தன்னிடம் உள்ளதை மறந்து விட்டதோ என்றுதான் கூறவேண்டும். இப்படியே உறங்கினால் எதிர்வரும் காலங்களில் எமது அறிவுச் சமூகம் தன்னை இனம்காட்டிவிடும் எமது சமூகத்தின் அழிவுக்குப் பொறுப்பானவர்கள் யாரென்று.

சட்டங்களோ, தண்டனைகளோ தீர்வல்ல. மக்கள் சிந்தனைத்திறன் கொண்டவர்களாக மாறுவதால் ஏற்படும் விளைவுக்கு அவை ஒப்பானவையுமல்ல. சட்டமும், தண்டனையும் தொடரும். எப்போது? குற்றமுள்ளவரை எனவே மக்கள் சமூகம் சார்ந்த ரீதியில் செயற்பட விளைவதே நன்று.

எமது சமூகத்தில் இப்போது எய்ட்ஸ் நோய் இளம் வயதினரை மிக மோசமாகவே தாக்கியழித்துவருகின்றது. இதற்கு மெருகூட்டும் வண்ணமாகத் திறந்த கலாசாரப் பின்னணி அதனு டன் தொடர்பில் கவனக் கலைப்பான்கள். இது எல்லாம் போக வேலியே பயிரை மேய்கிறது என்ற விதத்தில் கற்றறிந்த மேதைகள் காமனின் முகவர்களாகவும் கடை கெட்டவர்களாகவும் நிலைகொண்டதால் சமூகம் நாளை... உலகத்தில் மோசமான உதாரணங்களைக் கற்ற நாம் எமது நாட்டிலே உதாரணத்தைச் சொல்லக் கூடியவகையில் அமையும்.

காலில் விழுந்து கதிரை வாங்கும் உலகில் கஜானாக்களை பெருச்சாளிகள் அரித்துவிட்டால் மக்கள் நிலை என்ன? உயர் பதவி மனிதர்களிடம் கேள்வி மட்டுமல்ல விடையையும் கொண்டு சென்றுதான் கேள்வியைக் கேட்க முடிகிறது... கல்விமான்கள் குற்றிழந்து கல்விமான்களாகிவிட்டதால் சில்லறையாக நடக்கும் பாலியல் சீரழிவுகளைவிட மொத்தமாகவே விண்ணைத் தாண்டிப் பறக்கும் நிலையில் விபச்சாரம் தலையெடுக்கும் என்பதில் ஐயமில்லை.

இதை நாம் இப்போது கூறினால் நாம் முட்டாள் என்று வரையறுக்கப்படும். ஆனால், இதனை அறிந்தும் கூறாது விட்டால் நாமும் நம் சமூகத்தின் அழிவுக்கான துரோகி என்பது நியமாகும்.

தற்போதைய சூழலில் இனம் காணப்பட்ட எய்ட்ஸ் நோயாளிகள் எவரும் உயிர்த்துடிப்பான இனம் காணலால் இனம் காணப்பட்டவர்கள் அல்லர். தவறுதலாகவே இனம் காணப்பட்டவர்கள் அதாவது வேறு நோய் நிலைகளுக்குச் சகிச்சை பெற வந்தபோது இனம் காணலின் இறுதிக் கட்டத்தில் இனம் காணப்பட்டவர்கள் என்பதே குறிப்பிடத்தக்க விடயமாகும். இந்த நிலையில் மக்கள் எய்ட்ஸ் நோய் பற்றி மறந்து விட்டார்கள். முனபிருந்த சூழலில் அவ்வாறு எய்ட்ஸ் பற்றிப் பயம் கொள்ள வேண்டிய தேவை இம்மியளவும் இருக்கவில்லை. இறுக்கமான கலாசாரப் பின்னணியே காணப்பட்டது.

ஆனால் இப்போது திறந்த கலாசாரப் பின்னணியில் கற்றவர், 'மற்றவர்' என்றில்லாமல் புத்தியற்றவர்களாகவும் அற்பத்தனமானவர்களாகவும் பாலியல் முகவர்களாக மாறிவிட்ட காலத்தின் கையறு நிலையில் மக்கள் கண்டிப்பாக விழிப்புற வேண்டும். அன்றேல் சமூகத்தின் அழிவு தவிர்க்க முடியாததாகவே அமையும்.

மக்களின் மனநிலையில் எய்ட்ஸ் பற்றி எதுவுமில்லை. முன்பு புற்றுநோய் அதன்பின் நீரிழிவு, உயர்குருதி அமுக்கம் இவைபற்றியும் மிச்சமாகச் சொன்னால் அன்றைய சீரியல் தொடரில் சின்னத்திரையில் என்ன நடக்கிறது என்பதுதான் உள்ளது. எய்ட்ஸ் தொடர்பாக வருடா வருடம்




சிரார்த்ததினம் கொண்டாடப்படுவதே மக்கள் அறிந்தது. அது சிரார்த்த தினம் கொண்டாடுவது வழமைதானே என்றுதான் நினைக்கின்றனர். ஆனால் நமது சமூகத்தில் தற்போதுள்ள உண்மை நிலை நாள்தோறும் மரணவீடு நிகழ்வதுபோல் எய்ட்ஸ் விசுவரூபம் எடுத்துவிட்ட நிலையில் ஒவ்வொருநாளும் சிரார்த்ததினம் கொண்டாட வேண்டும். அதாவது நாளும் விழிப்புணர்வு வேண்டி நிற்கின்றது.


மருத்துவம் வியாபார நோக்கில் நகர்வதாலும் தொண்டுடன் தொடர்புடையவை எல்லாம் மக்களின் வறுமையைக் காட்டிப் பிழைப்பு நடத்துவதாக உள்ளது. ஊனமுற்றவர்கள் மேலும் ஊனமுற்றுப் போகும் நிலைதான். உதவும் மகாத்மாக்களின் கைங்கரியம் என்றாகிவிட்டது. வறுமை அதன் பின்னணியில் அதிகரித்துவிட்ட சிறுவர், தொழிலாளர் மற்றும் பிச்சை எடுக்கும் சிறுவர் இப்படி ஒரு பெரிய கனதியான பக்கம் உருவாகிவிட்டது.

வறுமையை மையமாகக் கொண்டு பாலியல் ரீதியில் பதம் பார்க்க வெளிக்கிட்டுவிட்ட மாமாக்கள் எண்ணிக்கை நீண்டு கொண்டுதான் செல்கிறது. இதனிடையே தொழில் வாய்ப்பு என்ற பெயரில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ம்

யும்



பாலியல் முகவர்கள் கண்கொத்திப் பாம்புகளாக வெளிக்கிட்டுவிட்ட காலத்தின் கொடுமையான மாற்றம்.

உதவிகள் கூட உருப்படியாகக் கிடைக்காத நிலையில் மானம் விற்றுவேட்டி வாங்கவேண்டிய கொடுமை. புலம்பெயர் சமூகம் நேரில்வந்து உதவினால்தான் அவை கிடைக்கும் மக்கள் வாழ்வில் விடிவு.

இவ்வாறான சூழ்நிலையில் வறுமை மட்டுமல்லாது ஊனமுற்றோர் தங்கிவாழ்வோர், கணவனை இழந்ததால் கணவனின் உழைப்பில் தங்கி வாழ்ந்த குடும்பப் பெண்கள் தொழில் தேடி வெளியில் அலையும் நிலை இதில் உண்டு. பாலியல் பண்டத்தைத்தான் விற்கும் பரிதாபமான நிலை. இதைவிட உணர்வு என்னும் ஒரு விடயமும் இளம்விதவைகள் எண்ணிக்கையோ 50 ஆயிரத்தை நெருங்கிவிட்டதால் சமூகம் சிந்திக்க தவறிவிட்டது. அதுபோக எய்ட்ஸ் நோய்க்கான விழிப்புணர்வும் இல்லை என்றுதான் சொல்லும் நிலை. எய்ட்ஸ் விழிப்புணர்வுப் பதாகை கள் மங்கி விட்டதுடன் மறைக்கப்பட்டுவிட்டன. இவை பல வருடங்களின் முன் உருவாக்கப்பட்டவை. இவை அறுந்து தொங்கும் நிலையில்தான் உள்ளன.

இளம் யுவதிகள் பாலியல் ரீதியாகக் காதல் வலையினூடு ஈர்க்கப்பட்டு எய்ட்ஸ் நோயாளியாக்கப்பட்டுவிட்ட துன்பநிலை. இவை தாண்டி நகரின் கேந்திர முக்கியம் மிக்க பகுதிகளில் பல்லினப் பெண்களின் பாலியல் விபசாரம் கொடி கட்டிப் பறக்கும் நிலை. இவற்றை எல்லாம் ஏன் எம் அறிவுச் சமூகம் கண்டு கொள்ளவில்லையோ தெரியவில்லை. இதுபோக, போதை மருந்துப் பாவனையும் அதிகரித்துவிட்டது. அங்கு ஒரே ஊசிகளைப் பயன்படுத்தலில் குருதி மூலமான தொற்று உருவாகும் வாய்ப்பு உள்ளதென்பதைக் கூட உணராத நிலையில் இளம் சமூகம் உள்ளது.

இதைவிட எய்ட்ஸ் தொற்றுக்கு ஆளாகியவர்களின் எண்ணிக்கை அதிகரித்துவிட்ட நிலையில் மருத்துவத்துறையினர் ஆய்வுகூட மற்றும் தாதியர், சத்திர சிகிச்சை நிபுணர்கள், இன்னும் பலர் குருதி மூலம் தொற்றைப் பெற வசதிகள் வாய்ப்புக்கள் அதிகரித்து விட்டதென்றால் தவ றில்லை.

இன்னும் தெளிவாகக் கூறினால் சத்திர சிகிச்சையின் போதோ அல்லது மருந்தேற்றும் போதோ ஊசி அல்லது சவர அலகு மருத்துவத் துறை சார்ந்தவர்களைக் குத்திப் பதம் பார்த்து விட்டால் போதும் அவர் மனநிலையில் பெரும் இடி விழும் என்பதுதான் யதார்த்தம். நோயாளிக்கு எய்ட்ஸ் இருக்குமோ என்ற பயத்தில் மனம் பதைபதைக்கும் நிலையை மருத்துவத் துறை வெகுவிரைவில் சந்திக்கும்.

இவ்வாறு எய்ட்ஸ் நோய்த் தொற்று ஓர் ஆர் முடுகல் இயந்திரத்தில் நகர்வதால் மருத்துவத் துறையில் தாதியர் மற்றும் சேவையாளர் பலர் இந்த ஆபத்தை தினமும் சந்திக்கும் நிலையில் உள்ளனர் என்பது அறிந்தும் அறியாததேயாகும்.

இதுமட்டுமல்லாது இரத்த சிதறல் சத்திர, சிகிச்சை நிபுணரின் கண்ணில்படும் சந்தர்ப்பம் நடைபெற சாத்தியக்கூறுகள் அதிகம். அவ்வாறு நிகழும் போது, எய்ட்ஸ் பற்றிய உணர்வு மட்டுமல்லாது உண்மையில் எய்ட்ஸ் நோயாளியின் குருதியாயின் மருத்துவர் பாதிக்கப்படுவது நிஜம் என்றுதான் சொல்லவேண்டும்.

இவை இவ்வாறிருக்க சமூகத்தைப் பொறுத்தவரை ஒருமுறை தவறிழைத்தவரைக் கூடத் தொடர்ந்தும் தவறினுள் மூழ்கச் செய்வதே இறுதி விளை வினைக் கொண்டதாக அமைகிறது. அவ்வாறு அமைவது வேதனைக்குரியதேயாகும். இங்கே பாதிப்புறும் பெண் வாழ்வில் மீள வழியமைத்தல் வேண்டும். போரின் பின் இவ்வாறான சூழ் நிலையை மக்கள் உணர வேண்டும். போரின் பின் கலாசார சீரழிவு நிகழ்ந்து நொந்துபோன சமூகத்தை மேலும் வெந்துபோகச் செய்வதே உலக நடை முறை. அது ஈராக், ஆப்கானிஸ்தான் என்ன இங்கும்தான். போரியல் வரலாறு அதை சொல்லத் தவறவில்லை. விழிப்புணர்வு என்பது இவ்வாறே உறங்கும் நிலையில் தொடருமாயின் சமூகம் உயிர்பெறாது. அழிந்து போகும் நிலை தொடரும் என்பதே உண்மை. அதை நேரில் தரிசிப்பதே நம் எதிர்காலம் என்றாகும்.

இந்த வீச்சில் நகரும்போது இங்கு தொற்றுக்கு உள்ளாகும் நோயாளர் பாலியல் ரீதியாக உயிர்த் துடிப்புள்ள வயதுடையவர்களாக இவர்கள் பாதிக்கப்பட்டு நோயாளியாகும்போது தொழில் இழப்புத் தொடங்கி தொழில் செய்யும் வயதினர் பாதிப்புக்குள்ளாகுவதால் பொருளாதார ரீதியிலும் மோசமான பாதிப்பை உணரவேண்டியே அமையும்.

இவ்வாறான நிலையில் பெற்றோர் தமது பிள்ளைகள் நலனில் அக்கறை கொள்வதும் அவர்கள் தனிமையில் திரிவதைத் தவிர்ப்பதும் வேண்டும். பெற்றோரின் கண்காணிப்பே முக்கியம் பெறுகின்றது. காதல் வலையில் வீழ்வதாலும் பாலியல் ரீதியாக உணர்விழக்கப்பட்டும் பாழாவதும் கவனத்தில் எடுக்கப்பட வேண்டும். இவ் வயதுப் பருவத்தினரே யுவதிகள் பாலியல் ரீதியாகவும் இளைஞர்கள் போதைப் பாவனையினுள்ளும் வீழ்த்தப்பட்டு எய்ட்ஸ் நோயின் விசமத்தனமான பரவலில் மாட்டிக் கொள்வதே வழமையாகின்றது.

போர்ப் புயலில் சிக்கிய பூவினம் கதி தவறி காற்றின் திசையில் சேற்றிலும் சகதியிலும் வீழ்வதா? அதை மீட்டெடுப்பது யாவரினதும் கடமையேயாகும். எமது அறிவுச் சமூகம் இவ் விழிப்புணர்வில் தன்னை முற்று முழுதாக ஈடுபடுத்திக் கொள்வதே நன்று. அவ்வாறு நழுவல் போக்குடன் எமது சமூகத்தினர் நகர்வதால் சமூகத்தின் அழிவைத் தடுக்க முடியாதே போகும்... இன்னும் சுருக்கமாகக் கூறின் எமது சமூகத்தின் அறிவுச் சமூகம் தன் பொறுப்பை மறக்க முடியாத நிலையில் உள்ளதையே உணர்த்துகின்றது. பொறுப்புக்களி லிருந்து நாம் விலகி ஓடலாம் ஆனால் விளைவுகள் நம்மை நோக்கியே தேடி வரும்.

**டாக்டர் வெ.நாகநாதன்**

# மனித மனமா? யுத்த களமா?



தேவ உலகம்? அசுர உலகம் என்று இரு வேறு உலகங்கள் தனித்தனியாக இருந்ததாக நமது பழைய புராணங்கள் பேசுகின்றன. இந்திர உலகம், அமராபுரி, சொர்க்கம் என்பதாகப் பல பெயர்களில் தேவர்கள் உலகம் புராணங்களில் வர்ணிக்கப்படுகிறது. புராண காலம் முடிந்து இதிகாச காலம் தொடங்கிய போது நல்லவர்களும், கெட்டவர்களும், தேவர்களும் அசுரர்களும் ஒரே உலகத்தில் வாழ வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அதனால் போரும் பூசலும், போட்டியும் பகையும் அதிகமாகி விட்டன! எப்படி?

இராவணனை அசுரன் என்கிறோம். இராமனைத் தேவன் என்கிறோம். புராண காலத்தில் பேசப்பட்ட அசுரர்களையும் தேவர்களையும் போல இராவணனும் இராமனும் வெவ்வேறு பகுதிகளில் இருந்ததாக வரலாறு கூறுகிறது. தேவர்கள் அயோத்தியிலும், கிட்கிந்தையிலும் வாழ்ந்தார்கள். அசுரர்கள் இலங்கையில் வாழ்ந்தவர்கள். தேவர்களும், அசுரர்களும் வெவ்வேறு உலகில் வாழ்ந்த புராணகாலம் முடிந்து ஒரே உலகின் வெவ்வேறு பகுதிகளில் வாழ்ந்த கதை இராமாயணம். இதில் கூட அடிக்கடி சண்டை நடக்க வாய்ப்பு இருந்தது. மகாபாரதம் என்ற அடுத்த இதிகாசத்தில் அதைவிட வேடிக்கை நடந்துவிட்டது. தேவர்களும் அசுரர்களும் உலகத்தின் வெவ்வேறு பகுதிகளில் வாழ்ந்து முடிந்து, ஒரே ஊரிலே ஒரே குடும்பத்தில் வெவ்வேறு மனிதர்களாக வாழ ஆரம்பித்தனர். ஆம், கௌரவர் குடும்பத்தில் அஸ்தினாபுரத்தில் தோன்றிய பாண்டுவும் திருதிராஷ்டிரனும் சகோதரர்கள். இதில் பாண்டுவின் புத்திரர்கள் தேவ அம்சம் பொருந்திய தருமன், பீமன், அர்ச்சுனன் நகுலன் சகாதேவன் ஆகிய ஐவர். அசுர அம்சம் பொருந்திய துரியோதனன். துச்சாதனன் முதலிய நூறு பேர் திருதிராஷ்டிரன் பிள்ளைகள். அதாவது ஒரே குடும்பத்தின் வெவ்வேறு கிளைகளாகத் தேவர்களும் அசுரர்களும் விளங்கினார்கள். ஆனால் இந்தக் கலியுகம்தான் மிகமிகக் கொடுமையானது. ஏனெனில் இப்போது தேவர்களும் அசுரர்களும் வெவ்வேறு உலகத்தில் இல்லை. ஒரே மனிதனின் வெவ்வேறு நிலைகளாக இருந்து போராடுகிறார்கள். எனவே.தேவ, அசுர யுத்தம் முன் எப்போதையும் விட மிகக் கடுமையாக ஒவ்வொருவருக்குள்ளும், நடக்கிறது! காலையில் நல்லவனாகப் பேசுகிறவர்கள் மாலையில் மோசமானவனாக நடந்துகொள்கிறார்கள். காலையில் பட்டையாக விபூதி பூசிக்கொண்டு 'சிவ சிவா' என்று சாமி கும்பிடுகிற சில பேர் சாயங்காலம் பட்டைச் சாராயத்தைக் குடித்துவிட்டுப் பட்டையைக் கிளப்புகிற அலங்கோலம்... இந்தக் கலியுகம்.

வீட்டில் ஏகபத்தினி விரதன் போல வேஷம் போடும் சிலர் அலுவலகத்தில் எல்லாப் பெண்களையும் வளைத்துப்போட விடாமுயற்சி செய்கிறார்கள். இந்த மனிதன் நல்லவனா? கெட்டவனா? என்று இப்போதெல்லாம் யாரையும் நாம் தரம் பிரிக்க முடிவதில்லை. எப்போது கெட்டவனாய் இருப்பான்? எப்போது நல்லவனாய் இருப்பான்? என்று தீர்மானமாகச் சொல்ல முடிவதில்லை. நாற்பது நாள் கடும் விரதம் இருந்து சபரிமலைக்குச் செல்லும் என் நண்பர் ஒருவர் திரும்பி வந்ததும் கெட்டுப் போவதற்கு வசதியாக மது, மாது இவற்றை ஏற்பாடு செய்ய வேறொரு நபரிடம் முன்பாக மாகப் பணம் கொடுத்துவிட்டுத்தான் மலைக்கே புறப்படுவார். இன்னொரு நண்பர் கார்த்திகை ஒன்றில் மாலை போட வேண்டி இருப்பதால் ஐப்பசி கடைசி அன்றே அளவற்ற அக்கிரமங்கள் செய்வார்கள். இவர்கள் தேவரா? அசுரரா? சில நேரங்களில் தேவனாகவும் சில கணங்களில் அசுரனாகவும் இருக்கும் இவர்களை 'தேவாசுரர்' என்று அழைக்கலாமா? இவ்வளவு ஏன்? நாம் சில நேரங்களில் கோபத்தில் கத்துகிறோம். பலரை அடிக்கிறோம். துடிதுடிக்கத் துடிக்கக் குழந்தைகளைக்கூட அடிக்கிறோம். அப்போது நாம் யார்? நமது குழந்தையை முத்தமிட்ட போது நாம் தேவர். முதுகுத் தோல் உரிய அடிக்கிறபோது அசுரன். மகளிடம் தாயாக அன்பைப் பொழியும் சில பெண்கள் மருமகளிடம் ராட்சசியாக நடக்கிறார்களே ஏன்? காலையில் கலகலப்பாகக் கையசைத்தபடி பள்ளிக்கூடம் போன நம் தேவக்குழந்தை மாலையில் வீடு திரும்பியதும் ஏதோ துயரத்தை மனத்தில் வைத்துக் கொண்டு அலறி ஆர்ப்பாட்டம் செய்து தாயின் கையைக் கூடக் கடிக்கிறதே ஏன்? இந்தத் தேவனை அசுரனாக்கியது யார்?

க்ருதயுகம், த்ரேதாயுகம், த்வாபரயுகம், கலியுகம் என்று உலகின் கால அளவைச் சதுர்யுகம் என்று நான்கு யுகங்களாக வகுத்தார்கள். முதல் யுகத்தில் தேவர்கள், அசுரர்கள் வேறு வேறு உலகத்தில் வாழ்ந்து சண்டையிட்டார்கள். இரண்டாம் யுகத்தில் ஒரே உலகத்தின் வேறு வேறு பகுதிகளில் இருந்து சண்டையிட்டார்கள். மூன்றாம் யுகத்தில் ஒரே குடும்பத்தில் வேறு வேறு மனிதர்களாக இருந்து சண்டையிட்டார்கள். கலியுகத்தில் ஒரே மனிதனின் வெவ்வேறு எண்ணங்களாக இருந்து சண்டையிடுகிறார்கள். அதனால்தான் மனிதர்கள் மன அமைதி இழந்து தவிக்கிறார்கள். சண்டை நடக்கிற இடம் எங்காவது நன்றாக இருக்குமா? மனிதன் மனங்களுக்குள்ளேயே தேவ, அசுர யுத்தம் நடக்கிறது. இந்த யுத்தத்தை நிறுத்தாமல், ஓயாது நடக்க நீங்கள் அனுமதித்தால் உங்கள் வாழ்வு அமைதி இழந்து நாசமாகும். எனவே அசுர எண்ணங்களை அழித்து நாம் தேவனே என்கிற வெற்றிச் செய்தியை உலகிற்கு அறிவிக்க வேண்டும். நமக்குள் நடக்கும் தேவாசுர யுத்தத்தை மேலும் நீடிக்க நாம் அனுமதிக்கக் கூடாது. ஒவ்வொரு தேவ, அசுர யுத்தத்திலும் கடவுள் தேவர்கள் பக்கமே இருந்து வெற்றி தந்துள்ளார். இறைவழிபாடு, இறை நம்பிக்கை மூலம் நாமும் நமது தேவ சக்திகளை வலுப்படுத்த வேண்டும். தேவ எண்ணங்களைப் பெருக்கி அசுர எண்ணங்களை அழித்தால் கண்டிப்பாக மனிதனும் தெய்வமாகலாம். அப்படி ஆனவர்களே நாயன்மார்கள். ஏகநாதர் என்ற பாண்டுரங்க பக்தர் கங்கையில் குளித்து விட்டுக் கரையேறினார். ஒரு மூர்க்கன் அவர் மீது வெற்றிலை பாக்கு எச்சிலை உமிழ்ந்தான். அவர் அவனோடு சண்டையிடாது மறுபடி கங்கையில் நீராடிக்கரையேறினார். மறுபடி அவர்மீது எச்சிலை உமிழ்ந்தான். இப்படி நூற்று எட்டு முறை நடந்தது. நூற்று எட்டாம் முறை மூர்க்கன் மனம் வருந்தி ஏகநாதர் பொறுமையைக் கண்டு காலில் விழப்போனான். தடுத்து முரடன் காலில் விழுந்தார் ஏகநாதர். தவறு இழைத்து விட்டோமே என்று மூர்க்கன் வருந்தினான். அவரோ "அப்பா... எவ்வளவு புனிதமான நதி கங்கை ஒரு முறை குளித்தாலே மிகப் புண்ணியம். இன்று உன்னுடைய தயவால் அல்லவா 108 முறை குளித்தேன். உன் கருணை இல்லை என்றால் ஒரு தடவை தானே குளித்திருப்பேன்" என்றார். ஏகநாதர் தேவன் ஆனதோடு ஒரு முரடனையும் தேவன் ஆக்கினார்! இது வல்லவா முக்கியம்.

சக்தி சிவா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோழிப் பண்ணையாளர்கள் எதிர்நோக்கும் சவால்கள்



யாழ்.குடாநாட்டில் கோழிப் பண்ணையில் ஈடுபடுகின்ற விவசாயிகள் இன்று எதிர்நோக்கும் முக்கிய சவால்கள் கோழிகளைத் தாக்கும் பல்வேறு வகையான நோய்கள். நோய்த்தாக்கமும் அதன் தீவிர பரம்பலும் கோழிகளையும் கோழிப் பண்ணைகளையும் முற்றாகச் சேதப்படுத்தும் ஆற்றல் கொண்டவை. இதனால் பண்ணையாளர்கள் பெரும் நஷ்டத்தினை எதிர்கொள்ள வேண்டியும் ஏற்படலாம். எனவே நாம் கோழிப் பண்ணை வளர்ப்பில் அல்லது கொல்லைப் புறக் கோழி வளர்ப்பில் கோழிகளில் ஏற்படுகின்ற இவ்வாறான அபாய நோய்கள், நோய்க்கான அறிகுறிகள், அவற்றை எவ்வாறு கட்டுப்படுத்தல் என்பன பற்றித் தெளிவாக அறிந்து வைத்திருத்தல் இன்றியமையாததும் நஷ்டத்தில் இருந்து பண்ணையாளர்களைப் பாதுகாக்கவும் உதவுகின்றது.

இக்கட்டுரையிலே கோழிகளைச் சேதப்படுத்தும் ஆபத்தான நோய்கள், அவற்றைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள் என்பன பற்றி ஆராயமுன்பு கோழி வளர்ப்பின் தோற்றம் பற்றி நாம் சற்றுச் சிந்தித்துப் பார்த்தால் அவை இற்றைக்கு 8000 ஆண்டுகளுக்கு முன்னர் மனிதர்களால் வளர்க்கப்பட்டதாக ஆய்வுகள் காட்டுகின்றன. இக்கோழிவளர்ப்பு முதன்முதலாக தெற்காசியாவில் சிந்து வெளிநாகரிகம் தொடங்கிய காலத்திலேயே தோற்றம் பெற்றதாக ஆதாரச் சின்னங்கள் காட்டுகின்றன.

இலங்கையைப் பொறுத்தவரை 1985 ஆம் ஆண்டுக்கு முன்னைய காலங்களில் மொத்தக் கோழி உற்பத்தியில் 30% உற்பத்தி யாழ்.மாவட்டத்துக்கே உரித்தானதாகப் பதிவாகியுள்ளது. இது அடுத்துவந்த சகாப்தங்களில் ஏற்பட்ட போர்ச் சூழல்களினால் பாதிப்படைந்து மிகவும் குறுகிய ஒரு நிலையில் உள்ளது. எது எவ்வாறாயினும் தற்போதைய சூழல் மீண்டும் எமது பிரதேசம் புதுப்பொலிவு பெறவும், விவசாய உற்பத்தியை புத்துயிர் ஊட்டவும் ஏற்ற சந்தர்ப்பம் எனலாம். கிடைத்த சந்தர்ப்பங்களைச் சரியாகப் பயன்படுத்தல் ''காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ள வேண்டும்'' என்ற ஆன்றோர் கருத்துக்கு ஒவ்வானது எனலாம்.

இந்த வகையில் இனி நாம் கோழிப் பண்ணைகளைச் சேதப்படுத்தும் பிரதான நோய்களைப்பற்றிக் கவனிப்போம். ''வருமுன் காப்பது வந்த பின் விலகுவதிலும் சிறந்தது'' என்ற சான்றோர் வாக்கியம் கோழி வளர்ப்பிலும் மிக முக்கியமானதாகும்.

பின்வரும் காரணிகள் கோழிகளில் நோயை ஏற்படுத்திச் சேதம் விளைவிக்கின்றன.

*1.வைரஸ்*
*2.பக்றீரியா*
*3.ஒட்டுண்ணிகள்*
*4. போசணைக் குறைபாடுகள்*

1.வைரஸினால் ஏற்படும் நோய்களை நாம் பார்த்தால், வைரஸ் நோய்கள் சிகிச்சை அளித்துக் கட்டுப்படுத்த முடியாதவை. ஆகையால் பண்ணையில் நோய் ஏற்படாமல் சுகாதார வழிமுறைகளைக் கையாளவேண்டும். அத்துடன் தடுப்பூசி கொடுக்கவேண்டிய நோய்களுக்கு எதிராக உடனடியாகத் தடுப்பூசி கொடுக்கவேண்டும். எனவே நாம் பண்ணைகளில் ஏற்படும் வைரஸ் நோய், இதற்கான அறிகுறிகள் மற்றும் கட்டுப்படுத்தும் அல்லது தடுக்கும் வழி முறைகள்பற்றிப் பார்ப்போம்.


**ஆ.சிவானந்தன்**
*மாவட்ட அலுவலர்,*
*ஐக்கிய நாடுகள் உணவு*
*விவசாய நிறுவனம்,*
*யாழ்ப்பாணம்.*


**வைரஸ் நோய்கள்**

(i) ரனிக்கெற் நோய்/ கொள்ளைநோய்

நோய்த் தாக்கத்தால் கோழிகளில் ஏற்படும் நோய் அறிகுறிகள்

* அதிகளவில் வெள்ளை,பச்சை கலந்த கழிச்சல்
* இருமல், மூச்சுவிடக் கஷ்டப்படுத்தல், கால்கள் முடங்குதல்.
* எல்லா வயதுக் கோழிகளுக்கும் தொற்றக் கூடியது.
* தடுப்புச் செய்யாதுவிடின் இதன் இறப்பு வீதம் 90%-100 % காணப்படும்.
* மிக வேகமாகப் பரவி 5-6 நாள்களில் எல்லாக் கோழிகளும் இறந்துவிடும்.
* நோய் ஏற்பட்டபின் சிகிச்சை பலன் அளிக்காது.

*இதற்கான நோய்தடுப்பு முறைகள்:*

* எல்லாக் கோழிகளுக்கும் உரிய காலத்தில் தடுப்பு மருந்து ஏற்றி இந்த நோய் ஏற்படாது பாதுகாத்தல்.
* அருகில் உள்ள மிருக வைத்தியரைச் சந்தித்து முதல் தடுப்பு 3ஆம் கிழமையின்போது குடிதண்ணீரில் கலந்து கொடுக்கவும்.
* 2ஆம் தடுப்பு 3-4 ஆம் மாதத்தின் போது ஊசி மூலம் ஏற்றவும்.
* தடுப்பு மருந்துகள் பொதுவாக வெளி நாடுகளிலேயே உற்பத்தி செய்யப்படுவதனால் உற்பத்தி ஆலோசனை அல்லது கால்நடை வைத்தியரின் ஆலோசனையைப் பெறுதல் நன்று.
* பண்ணையைச் சுகாதாரமாகப் பேணுதலும் நோய்ப் பரம்பலைக் கட்டுப்படுத்த உதவும்.
* பண்ணையில் குறுகிய காலத்தில் அதிக இறப்புகள் காணப்படின் உடனடியாக அருகில் உள்ள கால்நடை வைத்தியரை நாடவும்.

**(ii) மரெக்ஸ் நோய்**

*இந்த நோய் ஏற்படுத்தும் அறிகுறிகள்:*

* 2-8 மாத கோழிகளுக்கு அதிகமாக ஏற்படுத்தும்.
* திடீரென நோய் அறிகுறி காணப்படும்.
* உணவில் நாட்டமின்மை, நிறை குறைதல்.
* கால்கள் பலவீனமடைதல், இறக்கைகள் மடிந்து தொங்குதல், வெளிறல், இறத்தல்.
* இறப்பு வீதம் 5% - 60% வரை காணப்படும்.

*இதற்கான நோய்த்தடுப்பு முறைகள்:*

* தடுப்பு மருந்து அரிதானது.
* ஒருநாள் வயதுடைய கோழிக்குஞ்சுகள் இலங்கையில் பாவிக்கப்படும் பொருத்தமான மருந்தை இந்நோய்க்குத் தடுப்பு மருந்தாகப் பாவித்தல்.
* குஞ்சுகளை 4 கிழமைவரை மரெக்ஸ் நோயற்ற இடத்தில் வளர்க்க வேண்டும்.
* ஒருநாள் குஞ்சுகள் வாங்கமுன் மரெக்ஸ் நோய்க்குத் தடுப்பு ஏற்றப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்தி வாங்கவும்.

**(iii) கம்போரோ நோய்**

* நோய் அறிகுறிகளை 4-5 நாள்களுக்குள் முழுமையாக வெளிப்படுத்திவிடும்.
* 3-15 கிழமைகள் வயதுடைய குஞ்சுகள்- நோய் அறிகுறிகளைக்காட்டும்.
* திடீரெனக் குஞ்சுகள் நலிந்து சோர்வடைந்து காணப்படும்.
* குஞ்சுகள் தன்னுடைய பின்பக்கத்தைக் கொத்தும் சுபாவத்தைக் கொண்டிருக்கும்.

(தொடரும்)

# வாழைச் செய்கையில் பாரம்பரிய, நவீன தொழில்நுட்பங்களின் விரிவாக்கம்

(தொடர்ச்சி)

**9. இழைய வளர்ப்பு வாழைக்குட்டிகள் உற்பத்தியும் அவற்றினை நடுகைக்குப் பயன்படுத்தலும்**

யு.என்.டி.பீ நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் விவசாயத் திணைக்களம் விரிவாக்கம், விவசாயத் திணைக்களம் (ஆராய்ச்சி), யாழ்.பல்கலைக்கழக விவசாயபீடம் ஆகிய நிறுவனங்கள் இணைந்து இழைய வளர்ப்பு ஆய்வு கூடமொன்றை திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் ஸ்தாபித்து வருகின்றன. இதற்குரிய கட்டட வேலைகள், உபகரணங்கள் மற்றும் இரசாயனங்கள் கொள்வனவு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. 2011 ஆம் ஆண்டின் முற்பகுதியில் இதனது உற்பத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்நிலையில் இழைய வளர்ப்பு வாழைக் குட்டிகளிலிருந்தான செய்கையை மிகைப்படுத்தும் நோக்குடன் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் வெலிகந்த எனும் இடத்தில் அமைந்துள்ள விவசாய தொழில் நுட்பம் மற்றும் கிராமிய விஞ்ஞானத்துக்கான நிறுவனத்தில் இழைய வளர்ப்பு முறைமூலம் பெறப்பட்ட வாழைக் குட்டிகளின் செய்கைமுறை பற்றிய பயிற்சிநெறி நடத்தப்பட்டது. இப்பயிற்சிநெயியில் யாழ். மாவட்ட வாழைச் செய்கையாளர்கள் 30 பேரும் விவசாய திணைக்கள உத்தியோகத்தர்கள் 12 பேரும் பங்குபற்றினர். இந்தப் பயிற்சி நெறியானது இழைய வளர்ப்பு முறையில் உற்பத்தி செய்யப்பட்ட வாழைத் தோட்டங்களுக்கான கள விஜயத்தினையும் இச்செய்கை முறையில் அனுபவம் பெற்ற விவசாயிகளுடனான கலந்துரையாடலையும் உள்ளடக்கியிருந்தது. கள விஜயத்தில் கொழும்பு பல்கலைக்கழகத்தின் உபவேந்தரும் கலந்துகொண்டமை இப்பயிற்சி நெறியின் சிறப்பம்சமாகும்.


**சி.சிவகுமார்**
*பிரதி விவசாயப் பணிப்பாளர் (விரி)*
*யாழ்ப்பாணம்.*


**இப்பயிற்சி நெறியில் கற்றுக்கொண்ட விடயங்கள்**

* இழைய வளர்ப்புக் குட்டிகளை 10 அடி × 5 அடி இடைவெளியில் நடுகை செய்தல்.
* பக்கோ இயந்திரத்தினை பயன்படுத்தி 2' நீளம்× 2' அகலம் × 2' ஆழமான குழிகள் அமைத்தல்
* 10 கிலோ மாட்டெரு/ கூட்டெருவையும் மேல் மண்ணையும் கலந்து குழியை நிரப்புதலும், நிரப்பி 2 கிழமைகள் ஆறவிடலும்
* குட்டிகளை நடுகை செய்தல்
* நடுகை செய்யப்பட்ட குட்டிகளுக்கு முதல் 2 கிழமைகளுக்கும் வேம்பு/ பூவரசு போன்ற குழைகளால் நிழற்படுத்தப்படல்
* நடப்பட்டதிலிருந்து ஒரு மாதம் வரை ஒவ்வொரு நாளும் நீர்ப்பாசனம் செய்து ஈரத்தினை பேணல்
* பின்னர் 4 நாள்களுக்கு ஒருமுறை நீர்ப்பாசனம் செய்தல்
* காற்று வேகமாக வீசும் காலத்தில் ஏற்படும் குருத்தடைப்பினைக் கட்டுப்படுத்த ரொப்சின் எனும் பங்கசு நாசினியை வாழைக்குருத்துப் பகுதிக்கு விசிறல்
* நடப்பட்டு 7 - 8 மாதங்களில் பொத்தி வெளிவரும்.
* வாழைகுலைத் தாரில் பூஞ்சீப்பிலிருந்து 4 அங்குலத்திற்கப்பால் பொத்தியினை வெட்டி அகற்றுதல்
* குலை உருவாகும் போது ஒரு காயினை விட்டு பூஞ்சீப்பை அகற்றுல்
* பொத்தி அகற்றப்பட்டதிலிருந்து 2 வாரங்களின் பின்னர் வெள்ளை அல்லது நீல நிற பொலித்தீனால் உறையிடல்
* துளையிடப்பட்ட பொலித்தீன் குலைக்கு வெளியே நீண்டிருக்க வேண்டும்.

இளைய வளர்ப்புக் குட்டிகளிலிருந்து சராசரியாக 30 கிலோ நிறையை உடைய சந்தைமானம் கூடிய வாழைக் குலைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை

(சென்றவாரத்தொடர்ச்சி.....)

மக்களின் அழியாச் சொத்தாகிய கல்வியை வளப்படுத்துகின்ற அடிப்படைப் பணியை ஆரம்ப நிலைப் பாடசாலைகளே ஆற்றுகின்றன. அந்தவகையில் யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை தனக்குரித்தான பணியை செவ்வனே மேற்கொண்டு வருகின்றது.

1995 ஆம் ஆண்டு இடம்பெயர்வின் போது பல இடர்களையும் சந்தித்து அதன் கட்டமைப்பும் சீர்குலைய வேண் டிய நிலை ஏற்பட்டது.

1983 ஆம் ஆண்டு பாடசாலை மாணவர்களில் தலைவர்களுக்குக் கழுத்துப்பட்டி அணிவிக்கப்பட்டது.

நவாலியூரைச் சேர்ந்த குழந்தைக் கவிஞர் பா.சத்தியசீலன் அவர்களால் பாடசாலைக் கீதம் இயற்றப்பட்டது. 1994 ஆம் ஆண்டு பாடசாலைக் குரிய இலட்சனை உருவாக்கப்பட்டது.

1979 ஆம் ஆண்டு தொடக்கம் 1982 ஆம் ஆண்டு வரை இந்து மகளிர் கல்லூரி நுழைவாயில் போக்குவரத்துக்குப் பயன்படுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து புதிய பாதை அமைக்கப்பட்டதுடன் 1992 ஆம் ஆண்டு அரசடி வீதியில் நுழைவாயில் கொண்ட பாதை திறக்கப்பட்டது. பாடசாலை சிறிய கட்டடத் தொகுதி காணப்பட்டாலும் மாணவர் வளத்தால் பாடசாலை தனிச்சிறப்புப் பெறுகின்றது.

சைவநெறிச் செயற்பாடுகள், விளையாட்டுச் செயற்பாடுகள், ஆங்கில தின, தமிழ்த்தினச் செயற்பாடுகள், சுகநலச்செயற்பாடுகள், போன்றவை பாடசாலையின் ஆரம்பக்காலம் முதல் இன்றுவரை சிறந்த முறையில் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இதனால் மாணவர்களின் ஒழுக்கமும் கட்டுப்பாடும் திறைமைகளும் மேலோங்கிக் காணப்படுகின்றது.

தமிழ்த்தினப் போட்டிகளில் கோட்டம், வலயம், மாவட்டம், மாகாணம் மற்றும் தேசிய மட்டப் பரிசில்கள் ஆங்கில தினப்போட்டிகளில், மாகாண மட்டப் பரிசில்கள் சைவபரிபாலன சபை பரீட்சைகளிலும் பண்ணிசைப் போட்டிகளிலும் பங்குபற்றித் தங்கப் பதக்கங்கள் ஆகியவை பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்ந்த சிறுவர்கள் அதிகம்.



''மனிதர்களைத் திருத்துவதை விட சிறுவர்களைக் கட்டி எழுப்புவது மேல்'' என்ற வாசகத்துக்கு அமைவாக சிறுமியரின் பண்புசார் விருத்தி, தனிநபர் சுகாதாரம், சுகவாழ்வு, நல்லொழுக்க நெறிகள் சிறப்புற முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன.

இந்தப் பாடசாலையில் ஆறு வயது தொடக்கம் பத்து வயது வரையிலான மாணவர்கள் கல்வி பயில்வதால் பாடசாலையில் நடைபெறும் வைபவங்களுக்கு நலன் விரும்பிகள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் உதவிகள் புரிந்து வருகின்றனர்.

இந்த வகையில் பாடசாலையில் அபிவிருத்திச் சங்கமானது பாடசாலையின் உட்கட்டமைப்பை விருத்தி செய்வதிலும் பேணுவதிலும்-செயற்பட்டமை பாடசாலையின் பௌதிக வள மற்றும் வசதிகளைச் சீர்திருத்துவதிலும் விரிவாக்குவதிலும் உதவியமை,பாடசாலையின் சமூகத்தின் தனித்துவத்தையும் பாரம்பரியத்தையும் பேணும் கருத்துடன் அதன் நலன்புரி செயற்பாடுகளை ஆதரித்து வலுப்பெறச்செய்தமை கல்வித்திணைக்களத்தின் ஒதுக்கீடுகள் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவித்தொகைகள் ஆகியவற்றை கூடியளவு ஊக்கமாகச் செய்வதற்கு பாடசாலைகளுக்கு உதவிய பெருமை இவர்களையே சாரும்.

பாடசாலையின் வளர்ச்சிக்கு மற்றொரு வடிவமாக உதவிவரும் அமைப்பாகப் பழைய மாணவர் சங்கம் விளங்குகின்றது. இச் சங்கத்தின் மூலம் மாணவர்களின் வாசிப்புத் திறனை ஊக்குவிப்பதற்காக நூல்கள் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் நவீன தொழில்நுட்பச் சாதனங்கள் போன்றவற்றையும் வழங்கியுள்ளது.

ஆசிரியர் நலன்புரி சங்கமானது 1981 ஆம் ஆண்டு செயற்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டதையடுத்துப் பாடசாலை ஆசிரியர்களின் நலன் கருதி பல சேவைகளை வழங்கி வருகின்றது. புதிதாக உள்நுழையும் ஆசிரியர்களையும் இடம்மாற்றம் பெற்றுச் செல்லும் ஆசிரியர்களையும் ஓய்வுபெற்றுச் செல்லும் ஆசிரியர்களையும் தகுந்த முறையில் கௌரவிப்புச் செய்து அவர்களைப் பாராட்டி வருகிறார்கள்.

இந்தப் பாடசாலையின் கலாசார, இலக்கிய நிகழ்வுகள், விளையாட்டு மெய்வன்மைப் போட்டிகள் போன்றவற்றால் மாணவர்கள் திறமையுடன் செயற்படுவதற்குக் காரணம் அதிபர், ஆசிரியர்களினதும் திறமைமிக்க செயற்பாடுகளே எனலாம்.

''ஊக்கம் ஆக்கம் தரும்'' என்பார்கள். அதுபோல் இவர்களது ஊக்கத்தால் 'மாணவர் மன்றம்' இயங்கிவருவது குறிப்பிடத்தக்கது. இங்கு கல்வி கற்கும் பெண்பிள்ளைகள் நல்ல குடிமக்களாகவும் தமது ஊரையும் நாட்டையும் மேம்படுத்தக்கூடிய நோக்கங்கள் கொண்டவர்களாகவும் வளர்வதற்கு இந்த மாணவர் மன்றம் வழிசமைத்துக் கொடுக்கின்றது. ஒவ்வொரு வாரமும் புதன்கிழமைகளில் துறைசார்ந்த நிபுணர்களால் மாணவர் சுகநலவாழ்வுக்கான பத்து நிமிடப் பேச்சு இடம் பெறும். அத்துடன் பண்புசார் விருத்தியை ஊக்குவித்து மனிதநேயத்தை வளர்ப்பதற்காக ஒவ்வொரு வியாழக் கிழமைகளிலும் குட்டிக் கதைகள் சொல்லப்படுகின்றன. இவ்வாறு மாணவர்களின் திறமைகளை விருத்தி செய்வதற்கு பல்வேறு செயற்றிட்டங்கள் வழங்கப்படுகின்றன.

இந்தப் பாடசாலையின் இரண்டாவது அதிபராக, பிரதி அதிபராக இருந்த துளசிகாமூர்த்தி பொறுப்பேற்றுக் கொண்டார். பாடசாலையில் மாணவர்களின் தொகை அதிகரிப்பும் பாடசாலையின் வளச்செயற்பாடுகளும் இவரது பணியின் வலிமையை எடுத்துக்காட்டுகின்றது.

இப்பாடசாலையின் புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளைப் பார்க்கும் போது 2010 ஆம் ஆண்டு 102 உயர் புள்ளிகளைப் பெற்று 75 புள்ளிகளுக்கு மேல் மாணவர்கள் உயர் நிலையை அடைந்தமை குறிப்பிடத்தக்கது. 70 புள்ளிகளைத்தான் குறைவான புள்ளிகளைப் பெற்ற மாணவர்களின் கல்வி ஆற்றலை வெளிப்படுத்துகின்றது.

மாணவர்கள் கல்வி நடவடிக்கைகள் மட்டுமல்லாமல் பாடசாலை சூழலை ஆரோக்கியமாக வைத்திருப்பதில் இப்பாடசாலை முன்னணியில் திகழ்கின்றது. 2005 ஆம் ஆண்டு மாவட்ட மட்டத்தில் மூன்றாம் இடத்தையும் 2007, 2008 ஆம் ஆண்டுகளில் 2ஆம் இடத்தையும் பெற்று 'தூய சூழலுக்கான ஆரோக்கியமான பாடசாலையாக' இப்பாடசாலை தெரிவுசெய்யப்பட்டது.

அத்துடன் பிள்ளைநேயப் பாடசாலை ஒழுக்கமான மிஷன் பாடசாலையாகவும் இந்தப் பாடசாலை கருதப்படுகின்றது.

(தொடரும்)

நிஸா,வாணி

# கத்தோலிக்க மக்களின் ஆன்மீகத்தை வளர்க்கும் சுண்டுக்குளி புனித அருளப்பர் ஆலயம்

பேசுதாஸ்

(சென்றவாரத்தொடர்ச்சி.....)

யாழ்ப்பாணம், கச்சேரியை அண்மித்த வரலாற்றுப் பழைமை வாய்ந்த சுண்டுக்குளி கிராமத்தில் சுண்டுக்குளி புனித திருமுழுக்கு அருளப்பர் ஆலயம் அழகுற காட்சியளிக்கின்றது.

நாட்டுக்கூத்துக்கலையை அழியாது பாதுகாக்கப் பல படைப்புக்களை உருவாக்கிய புலவர்கள் வாழ்ந்த கலைப் பூமியாக விளங்குகிறது. புலவர்களான பொன்னையா, யாக்கோப்பு, ஏபிரகாம்,யோண்நீக்ளஸ் மரியாம்பிள்ளை, சந்தியாப்பிள்ளை எம்.வி.ஆசிர்வாதம் ஆகியோர் எழுதிய சஞ்சுவாம், மத்தேசு மவுறம்மா, கிறிஸ்தோப்பர், மெஞ்ஞான வர்த்தகன், தானியேல் சத்தியவான் சாவித்திரி, தாவீது கோலியாத்து, மரியதாசன், விசய மனோகரன், மார்க்கப்பர், மனம் போல் மாங்கல்யம் போன்ற கூத்து வடிவங்கள் இன்று வரை மேடையேற்றப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும்.



நாட்டுக் கூத்துச் சக்கரவர்த்தி 'பூந்தரன்' ம.யோசேப்பு, மெல்லிசைக் கலைஞரான இலங்கை வானொலி புகழ் வி.அன்ரன் டேவிற் இக்கிராமத்தைச் சேர்ந்த புகழ் பெற்ற கலைஞர்களாவர். 1974 ஆம் ஆண்டில் பங்குகுருவாக இங்கு பணிபுரிந்த தற்போதைய யாழ். ஆயர் அவர்களின் நெறிப்படுத்தலின் 'முன்னாதிமன்னன்' என்னும் வடமோடி நாட்டுக்கூத்து மேடையேற்றப்பட்டு பாராட்டைப்பெற்றது.

நூற்றாண்டு விழாவுக்கும் பின்னர் அருட்தந்தையர்களான செல்வராசா, நேசநாயகம், ரி.யேசுதாசன் ஆகியோரைத் தொடர்ந்து தற்போது எஸ்.ஜே.கியூ. ஜெயநிரஞ்சன் பங்குத் தந்தையர்களாக பணிகளை மேற்கொண்டனர்.

இக்காலப் பகுதியில் கனடாவில் வசிக்கும் அ.பீற்றர் யேசுதாசனின் அன்பளிப்பில் முகப்பு மண்டபம். சின்னையா றொகானின் அன்பளிப்பாக வரவேற்பு சொரூபம் என்பன அமைக்கப்பட்டதோடு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.சிறிவின் நிதி ஒதுக்கீட்டில் 4 லட்சம் ரூபா செலவில் தளபாடங்கள்,ஒலி பெருக்கி, பாதை அமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

'உன்னைப்போல் உன் அயலானையும் நேசி'

என்பதற்கிணங்க வன்னியில் பாதிக்கப்பட்ட பங்குகளில் ஒன்றான வட்டக்கச்சி பங்கைப் பொறுப்பேற்று அவர்களுக்கு வேண்டிய வாழ்வாதார, ஆன்மீக தேவைகளைச் சுண்டுக்குளி அருளப்பர் ஆலய மக்கள் நிறைவேற்றி வருகின்றனர்

திருச்சபையின் பணிக்கென இந்த ஆலயத்திலிருந்து 17 குருக்களும், 10 கன்னியார்களும் தம்மை அர்ப்பணித்துள்ளனர். பீடப்பணியாளர் சபை, மரியாயின் சேனை, வின்சன்றடிபோல் சபை, மறைக்கல்வி வகுப்புகள் என்பனவும் இயங்கி வருகின்றது.

சுண்டுக்குளி அருளப்பர் ஆலய செயற்பாடுகள் கத்தோலிக்க மக்களின் ஆன்மீகத்தையும் உறவையும் வளர்ப்பதில் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றது.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
31 ஜனவரி 2011 திங்கள்கிழமை

# தெமட்டகொட வீடுகளை ஏற்க கொம்பனித்தெரு மக்கள் மறுப்பு

கொழும்பு, ஜன.31

கொழும்பு கொம்பனித் தெருவில் வீடுகள் உடைக்கப்பட்டு அங்கிருந்து வெளியேற்றப்பட்ட குடியிருப்பாளர்கள் நகர அபிவிருத்தி அதிகார சபையால் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ள மாற்று வீடுகளை பொறுப்பேற்கவில்லை என சட்டமா அதிபர் உயர்நீதிமன்றிற்கு அறிவித்துள்ளார். 17 வீடுகள் உடைக்கப்பட்டன என வீட்டு உரிமையாளர்கள் தாக்கல் செய்திருந்த மனு கடந்த வியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது அரச பிரதி வழக்கறிஞர் சவிந்திர பெர்னாண்டோ சட்டமா அதிபரின் கூற்றைத் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் தெமட்டகொட பகுதியில் வீடுகள் கட்டித்தருவதாக நகர அபிவிருத்தி அதிகாரசபையால் கூறப்பட்ட போதும் வீட்டு உரிமையாளர்கள் அதனை மறுத்தனர் என்றும் அரச பிரதி வழக்கறிஞர் குறிப்பிட்டுள்ளார்.

அதனை ஏற்றுக்கொள்ள முடியாதென அறிவித்த நீதியரசர் ஷிரானி திலகவர்த்தன, வீடுகள் அமைந்திருக்கும் இடத்திற்குச் சென்று அதனைப் பார்வையிட்டு சரியான தீர்மானத்தை எடுக்குமாறு மனுதாரர்களுக்கு அறிவித்துள்ளார்.

இதன்படி வழக்கை எதிர்வரும் 7ஆம் திகதிக்கு ஒத்திவைத்த உயர்நீதிமன்றம் அன்றைய தினம் உறுதியான முடிவொன்றைக் கூறுமாறு மனுதாரர்களைப் பணித்துள்ளார்.

இதேவேளை, குறித்த வீடுகளைப் பார்வையிட வீட்டு உரிமையாளர்களுக்கு ஒத்து ழைப்பு வழங்குமாறு நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் நீதிமன்றம் கேட்டுக் கொண்டது. (சி)

# லண்டனில் நிதி மோசடியில் ஈடுபட்ட இலங்கையருக்கு நீதிமன்று தண்டனை

கொழும்பு, ஜன. 31

லண்டனில் பெருந்தொகைப் பணத்தை மோசடி செய்த இலங்கையர் ஒருவருக்கு அந்நாட்டு நீதிமன்றம் தண்டனை விதித்துள்ளது.

லண்டன் வாழ் இலங்கையர்களிடம் குறித்த நபர் உள்ளிட்ட கும்பல் நிதி மோசடி செய்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஐந்து ஆண்டு காலப் பகுதியில் மிகவும் தந்திரமான முறையில் ஒரு கோடி ஸ்ரெலிங் பவுண்ட் நிதி மோசடி மேற்கொள்ளப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மோசடியில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் ஏமாற்றப்பட்டுள்ளனர் எனக் கூறப்படுகிறது.

குறுகிய காலத்தில் அதிகளவான வட்டி வழங்கும் வைப்புத் திட்டமொன்றை அறிமுகப்படுத்துவதாகத் தெரிவித்து இந்த நிதி மோசடி இடம்பெற்றுள்ளது.

இலங்கையைச் சேர்ந்த பிரபல குடும்பமொன்றைச் சேர்ந்த நபரே இந்தக் குற்றச் செயல்களில் ஈடுபட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த இலங்கையருக்கு எட்டு ஆண்டு கால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (சி)

# பிரதேச சபைகளை த.தே. கூட்டமைப்பு கைப்பற்றும்

மன்னார், ஜன.31

உள்ளூராட்சிசபைத் தேர்தலில் மன்னார் மாவட்டத்தின் ஐந்து பிரதேச சபைகளையும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு முழுமை யாகக் கைப்பற்றும் - என அக்கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் மார்ச் 17 ஆம்திகதி நடைபெறவிருக்கும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் எமது வெற்றிக்கு தமிழ்பேசும் மக்கள் தமது பூரண ஒத்துழைப்பை வழங்கவேண்டும் என்றும் செல்வம் எம்.பி. கேட்டுக்கொண்டார்.

மன்னார் நகரசபையில் போட்டியிடுவதற்கான வேட்பாளர்களைத் தெரிவு செய்யும்போது வெற்றிபெறக் கூடிய சிலரது பெயர்கள் நீக்கப்பட்டதையிட்டு தாம் மனம் வருந்துகிறார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (சி)

## போராடுவோம்... போராடுவோம்....



அரச வங்கி ஊழியர்களின் ஓய்வூதியக் கோரிக்கையை வலியுறுத்தி இலங்கை அரச வங்கி ஊழியர்கள் சங்கத்தினர் கடந்த வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# தொலைக்காட்சி தொடருக்குத் தடைவிதிப்பு

'டான்' தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் "மைதிலி" தொலைக்காட்சித் தொடரை ஒளிப்பரப்புவதற்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது. சுயாதீன தொலைக் காட்சி வலையமைப்பின் தமிழ் அலை வரிசையான 'வசந்தம்' தொலைக்காட்சி யில் திங்கள் முதல்வெள்ளி வரை இரவு 8.30 மணிக்கு 'மைதிலி' என்னும் தமிழக தொலைக் காட்சி தொடர் ஒளிபரப்பாகி வந்தது.

இந்தத் தொடரின் இலங்கைக்கான ஒளிபரப்பு உரிமையை வசந்தம் தொலைக் காட்சி பெற்று அதை ஒளிபரப்பி வந்த அதே வேளை, 'டான்' தொலைக் காட்சியும் அதே நேரத்தில் 'மைதிலி' தொடரை ஒளிபரப்பி வந்துள்ளது.

'டான்' தொலைக்காட்சி சட்ட விரோதமாக 'மைதிலி' தொடரை ஒளிப்பரப்புவதாக கூறி கொழும்பு மாவட்ட நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கின் பிரகாரமே இடைக்காலத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதன் மேலதிக விசாரணை எதிர்வரம் 10 ஆம் திகதி நடைபெறும். (சி)

# பல்கலை மாணவர்களின் தூண்டுதலினால் அமைதியின்மையை உண்டாக்க முயற்சி

கொழும்பு,ஜன.31

சில பல்கலைக்கழக மாணவர்களின் தூண்டுதலினால் பல்கலைக்கழகங்களில் அமைதியின்மையை உண்டாக்க சிலர் முயற்சித்து வருவதாக அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் சஞ்சீவ பண்டார தெரிவித்துள்ளார்.

2011 உலகக் கிண்ணத்திற்கு தொண்டராக செயலாற்றிய பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் கடந்த வெள்ளிக்கிழமை தாக்கப்பட்டு கத்திக் குத்துக்கு இலக்காகினர். இவர்களை மாத்தளை வைத்தியசாலைக்கு பார்வையிடச் சென்ற ருகுணு பல்கலைக்கழக மாணவ சங்கத் தலைவரும் தாக்கப்பட்டதாக முகமூடி அணிந்த கும்பலொன்றினால் தாக்கப்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

ருகுணு பல்கலைக்கழக மாணவ சங்கத் தலைவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த வேளையில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார். சட்ட நடவடிக்கையினால் இவர் பின்னர் விடுவிக்கப்பட்டதாக சஞ்சீவ பண்டார குறிப்பிட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பாக நாம் பொலிஸில் முறைப்பாடு செய்தோம். சில பேரை பெயர் குறிப்பிட்டும் கூறியுள்ளோம்.

ஆனால், பொலிஸார் நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லையென சஞ்சீவ பண்டார தெரிவித்துள்ளார். (204)

# இலங்கையில் தமிழர்களின் உரிமைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும்

கொழும்பு,ஜன.31

இலங்கையில் தமிழர்களின் அடிப்படை உரிமைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அதற்காக தமது கட்சி இந்திய நாடாளுமன்றத்திலும், ஐ.நா மனித உரிமைகள் பேரவையிலும் குரல் கொடுக்கும் என்று பாரதீய ஜனதா கட்சியின் தலைவர் நிதின் கட்காரி தெரிவித்துள்ளார். சென்னையில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன் றில் கலந்துகொண்டு பேசும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

ஈழத்தமிழர் பிரச்சினை ஒரு தேசியப் பிரச்சினை. இலங்கையில் அவர்களின் அடிப்படை உரிமைகளை உறுதி செய்யப்பட வேண்டும். இதற்காக நாடாளுமன்றத்தில் பாஜகவின் 165 உறுப்பினர்களும் குரல் கொடுப்பார்கள். அத்துடன் பாதிக்கப்பட்ட ஈழத்தமிழர்களுக்கு நியாயம் கிடைக்க ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்கும் இந்தப் பிரச்சினையை கொண்டு செல்வோம் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (204)

# மட்டு.மாவட்ட மக்களுக்கு உலக வங்கி அவசர உதவி

கிழக்கு மாகாணத்தில் பெய்த கடும் மழையால் மோசமாகப் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்ட மக்களுக்கு உதவ உலக வங்கி முன்வந்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயம், மீன்பிடி, கால்நடை உற்பத்தி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மீளக்கட்டியெழுப்புவதற்கு உலக வங்கி உதவிகளை வழங்க முன்வந்துள்ளது.

இது தொடர்பான மதிப்பீடுகளை மேற்கொள்ளும் பொருட்டு மாவட்டத்திற்கு பயணம் மேற் கொண்ட உலக வங்கியின் இலங்கைக்கான பிரதிநிதிகள் குழு மாவட்ட அரச அதிபரைச் சந்தித்து கலந்துரையாடியது. மாவட்டத்தில் உடனடியாக மேற் கொள்ள வேண்டிய அவசரப் பணிகள் குறித்து மாவட்ட அரச அதிபர் இதன்போது விளக்க மளித்துள்ளார். இந்தச் சந்திப்பில் மாவட்ட மேலதிக அரச அதிபர், திட்டமிடல் பணிப்பாளர், உள்ளிட்ட அரச அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

# போர்க்குற்றங்களை மறைக்கவே கருத்தரங்கு

கொழும்பு,ஜன.31

இலங்கை மீதான போர்க் குற்ற விசாரணைக் கோரிக்கைகளை முறிடியடிக்கும் நோக்கிலேயே அனைத்துலக கருத்தரங்கை இலங்கை இராணுவம் ஒழுங்குசெய்துள்ளதாகத் தெரிய வந்துள்ளது. இறுதிகட்டப் போரில் இலங்கை இராணுவம் இழைத்த போர்க்குற்றங்கள் தொடர்பாக அனைத்துலக விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று கோரிக்கைகள் வலுவடைந்து வருகின்றன.

இந்த நிலையில் இது போன்ற அழுத்தங்களை முறியடிக்கும் நோக்கிலேயே இலங்கை இராணுவம் அனைத்துலக இராணுவக் கருத்தரங்கை நடத்த ஏற்பாடு செய்துள்ளது என்பது உறுதியாகியுள்ளது.

ஐ.நா நிபுணர்குழு போர்க் குற்ற விசாரணைகளை நடத்த முனையும் நிலையில் அனைத்துலக இராணுவக் கருத்தரங்கை இலங்கையில் ஒழுங்கு செய்திருப்பது ஏன் என்று எழுப்பிய கேள்விக்கு இலங்கை இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் ஜகத் ஜெயசூரிய கருத்துத் தெரிவிக்கையில்,

போர் முடிவடைந்தவுடன் இந்தக் கருத்தரங்கை நடத்தியிருக்க வேண்டும். அந்த வாய்ப்பை பயன்படுத்தியிருந்தால், போரில் என்ன நடந்தது என்று உலகத்துக்குத் தெரிந்திருக்கும்.

அனைத்துலக தீவிரவாத முறியடிப்பு நிபுணர்களையும், களத்தில் செயற்பட்ட ஐ.நா அமைப்புகளின் பிரதிநிதிகளையும் இந்தக் கருத்தரங்கில் உண்மை நிலையைக் கூறுவதற்கு அழைத்துள்ளோம்.

இந்தக் கருத்தரங்கிற்கு 54 நாடுகளுக்கு அழைப்பு விடுத்துள்ளோம் என்று அவர் கூறியுள்ளார். (204)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருளின் கதவுகளைத் திறந்தவன்

**15**



'எங்கள் மீது நீங்கள் ஒரு அடி கொடுத்தால் பதிலுக்கு நூறு அடிகள் வாங்கத் தயாரயிருங்கள். நாங்கள் சொன்னதைத்தான் செய்வோம், செய்வதையே சொல்வோம்' என்பதை தேவாலயக் குழுமத்துக்குக் கொடுத்த பதிலடி மூலம் யூலியன் நிரூபித்தான்.

ஏறக்குறைய 60 ஆண்டுகளாக ஆட்டம் போட்ட தேவாலயத்தின் முக்கிய புள்ளிகள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டு, புதிய நிர்வாகத்தின் கீழ் தேவாலயம் சீராக இயங்கத்தொடங்கியது.

சிலநாள்கள் கழித்து விக்கிலீக்ஸ் அலுவலகத்துக்கு அதே தேவாலயக் குழுமத்திடமிருந்து இன்னொரு கடிதம் வந்தது. வாங்கிய அடி போதாதென்று மீண்டும் சீண்டுவதற்காகவே அந்தக் கடிதம் வந்திருக்குமென்று எண்ணியபடி, கடிதத்தைப் பிரித்த யூலியனுக்கு ஒரு இன்ப அதிர்ச்சி காத்திருந்தது. எங்கள் தேவாலயத்தில் நிகழ்ந்த குளறுபடிகளை வெளிக்கொணர்ந்து, மக்கள் முன் குற்றம் செய்தவர்களை அடையாளப்படுத்தப் படுவதற்கு தங்கள் இணையத்தளம் செய்த உதவிக்கு நன்றிகள் என்ற வாக்கியங்களே கடிதத்தில் தொங்கிக் கொண்டிருந்தன. மெலிதான புன்னகையோடு அந்தக்கடிதத்தை யூலியன் பத்திரப்படுத்திக்கொண்டான்.

**யூலியன் அசாஞ்சே பற்றிய ஒரு விறு விறு தொடர்**

உலகெங்கிலும் இருந்து வந்து குவிகின்ற புகழ்மழையில் நனைந்து தலைக்கனம் வருவதற்குப் பதிலாக இன்னமும் தேடல்களில் ஆழமாக இறங்கவேண்டும் என்ற வெறியே யூலியனுக்குள் அதிகரித்தது.இணைய வலையமைப்புக்களை ஊனுறக்கமின்றி இரவு பகலாகப் பின்தொடர்ந்தபடியே அவனது நாள்கள் நகர்ந்தன.

வலையமைப்புகளை பின்தொடர்வதற்கு நிறையப் பொறுமை அவசியம். அது மீன் பிடித்தலைப் போலதான். சிலவேளைகளில் எண்ணற்ற தகவல்கள் சிக்கும், அதேவேளை பலமுறை எந்தவொரு இரகசியமும் சிக்காமல் ஏமாற்றத்தை மட்டுமே சுமந்து கொண்டு திரும்பவேண்டியிருக்கும். ஆனால் யூலியன் தரையிலேயே மீன்பிடிக்கும் கெட்டித்தனம் மிக்கவன் என்பதால் எப்போதுமே நிரம்பி வழியும் இரகசியங்களைக் கைப்பற்றிய பின்னரே அவன் நித்திரைக்குச் செல்வது வழமையாகி விட்டது.

ஒவ்வொரு நாளும் இருளின் புதிய கதவுகள் விக்கிலீக்ஸில் திறக்கப்பட்டன. வழமையாக தணிக்கைக்குள்ளாகி, செம்மையாக்கப்பட்டு, தமது கோணத்துக் கேற்பவே தகவல்களை இணைய ஊடகங்கள் வாசகர்களுக்குத் திணித்துக் கொண்டிருக்கையில், நடந்தவற்றையெல்லாம் அப்படியே ஒரு ஆதாரம் கூட மிஸ் பண்ணாமல், அப்படியே திகட்டத் திகட்ட விருந்து வைக்கும்போது எல்லோரும் விக்கிலீக்ஸ் தளத்தைப் பார்வையிட முண்டியடித்ததில் தவறேது மில்லைதானே?

தேவாலயக் குழுமம் பற்றிய தகவல்களுக்குப் பின்னர் ஐஸ்லாந்து, சுவிட்ஸர்லாந்து நாடுகளைச் சேர்ந்த புகழ்பெற்ற வங்கிகளின் முறைகேடுகள், முறையற்ற நிதிக் கையாடல்கள் என்பன விக்கிலீக்ஸில் வெளியிடப்பட்டன. வங்கிகளின் செயற்பாடு கள் யாவும் கணினிமயப்படுத்தப்பட்டு, அத்தகவல்கள் யாவும் தலைமை அலுவலகத்துக்கு பாதுகாப்பான இணைய வழி மூலம் அனுப்பப்பட்டு, அங்கு சேமித்து வைக்கப்படுவது வழக்கம். தன்னுடைய தகவல் வழங்கி ஒருவரின் மூலம் மிகவும் கஷ்டப்பட்டு, இணையவழிமூலம் தகவல் அனுப்பப்படும் இரகசிய முறையின் சங்கேதச் சொல்லை ஒருநாள் அறிய நேர்ந்தது. அதன் பிறகு யூலியனின் காட்டில் மழைதான். இந்த வங்கிகள் உலகிலேயே மிகவும் நம்பிக்கையான வங்கிகள் எனப்புகழ் பெற்றவை. ஆனால் இவ்வாறு. கிடைத்த நற்பெயரைப்பயன்படுத்தி, மறைமுகமாக அவை ஏராளமான நிதிக் கையாடல்களிலும் ஈடுபட்டுவந்தன. அதிலும் இந்த வங்கிகளில் பணத்தை வைப்பிலிடு பவர்கள் தாம் அதைப்பற்றி தமது மனைவி, பிள்ளை களுக்குக் கூட சொல்வ தில்லை. இவ்வாறானவர்கள் மரணித்தால் அந்தப்பணத்தை அவரின் பின்னுரித் தாளிகளுக்கு தாமாகவே அணுகிக் கொடுக்க வேண்டியது இந்த வங்கிகளின் கட்டாய விதிகளில் ஒன்று. ஆனால் அதற்கு மாறாக இறந்தவரின் பணத்தை நோகாமல், கூசாமல் அவ்வளவு பணத்தையும் தமது பொக்கற்றுக்குள் பதுக்கிவிடும் கைங்கரியத்தையே இந்த வங்கிகள் அநேகதருணங்களில் செய்துவந்தன.

அவற்றையெல்லாம் விக்கிலீக்ஸ் பட்டியலிட்டு,

**ஒளண்யன்**

பந்தி வைத்தது. குய்யோ, முறையோவெனக் கூச்சலிட்டன வங்கிகள். உலகின் முன்னால் அவிழத் தொடங்கிய தங்கள் வேட்டியை இறுக்கிப் பிடித்துக் கொண்டு பேந்தப் பேந்த முழித்தன. தமது இரகசியத் தகவல்களை முறைகேடாக வெளிப்படுத்தி விட்டதாக சுவிஸ் வங்கி அமெரிக்காவிலுள்ள நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்து விக்கிலீக்ஸ் தளத்தின் அமெரிக்க வழங்கிகளைச் செயலிழக்கச் செய்தது.

அவ்வளவுதான்! விக்கிலீக்ஸின் வழங்கிகள் செத்துவிட்டதால் இனி அதன் கதையும் காலிதான்! என விக்கிலீக்ஸின் எதிரிகள் ஆனந்தக் கூத்தாடினார்கள். ஆனால் அவர்கள் ஒன்று நினைக்க யூலியன் வேறொன்றைச்செய்தான். வழமை போலவே விக்கிலீக்ஸ் எவ்வித இடையூறுமின்றி தன் பயணத்தை தொடர்ந்தது. எப்படி இது சாத்தியம் ? என சுவிஸ் வங்கி உள்ளிட்ட விக்கிலீக்ஸ் எதிர்ப்பாளர்கள் மண்டையைப் போட்டு உடைக்கத் தொடங்கினார்கள்.

(திரைகள் இன்னும் விலகும்)

## பாலம் அமைப்பு

வண்ணை, ஜன.31

யாழ். மணிக்கூட்டு வீதியில் சேதமடைந்த பாலத்தின் திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மணிக்கூட்டு கோபுர சுற்று வட்ட வீதியில் பொலிஸ் நிலைய முன்பாக அமைந்துள்ள மேற்படி பாலம் கடந்த சில மாதங்களாகச் சேதமடைந்து இருந்தது.

அதனால் அவ் வீதியால் போக்குவரத்தில் ஈடுபடும் வாகனப் போக்குவரத்துக்கள் வெவ்வேறு பாதைகளால் சுற்றி ஈடுபட வேண்டியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

(ம-160)

**ஆனதய்யா ஆண்டுகள் இரண்டு!**

அமரர்

**பொன்னர் தர்மலிங்கம்**

**(ராசா)**

| உடலெடுத்தது | உயிர்நீத்தது |
|---|---|
| 1940★ 01★ 19 | 2009 ★ 01★ 24 |

(திதி: திரயோதசி ) காட்டடைப்பு வீதி, காங்கேசன்துறை)



தவமின்றி நான் பெற்ற வரமே!
உனையிழந்து ஆனதய்யா ஆண்டுகள் இரண்டு!
நின் அன்பிழந்து நெஞ்சு அநாதையானதய்யா!
துயர் சுமந்துதான் தினம் தூங்குகின்றேன்...
இந்தத் தூக்கமும் இல்லையென்றால் வலிகளுக்கு ஏது விடுதலை?
காற்றுக்குள்ளும் இடைவெளி வரலாம் - நம்
பாசத்துக்குள் இடைவெளி வருமோ?
உருவம் தான் கருகிப் போனதேயொழிய - வாழ்ந்த
நினைவுகளை நெஞ்சம் மறந்திடுமோ...?
நீரின் மேல் எழுத்துப்போன்றதா உம் நினைவு? இல்லை!
கல்லின் மேல் செதுக்கிய சிற்பம் ஐயா! அது கரைந்திடாது!
ஆண்டுகள் இரண்டென்ன? என் ஆயுள் உள்ளவரை
என் நெஞ்சக் கோயில் உமைச் சுமந்து வாழும்....
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



உன் பிரிவால் என்றும் தவித்திடும்
அன்பு மனைவி பராசக்தி,
பிள்ளைகள், பேரர்கள்,
மருமக்கள்.

முதலிகோயில் வீதி,
தாவடி மேற்கு,
கொக்குவில்.

(109811)

**தவறிவிட்டது**

செல்வி யசித்திரா யோகரட்ணம் என்பவருடைய NPJR 4615 மோட்டார் சைக்கிள் புத்தகமும் வாகன வரியும் 24.01.2011 அன்று யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தை அண்டிய பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு: 0779683076

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**



தோற்றம்
20 ✱ 02 ✱ 1925

மறைவு
11 ✱ 02 ✱ 2010

திருமதி
**சன்முகலிங்கம் நேசமணி**



கூடத்தில் கொலுவிருந்த
மாடத்து மணி விளக்கே!
காலத்தின் கட்டளையால் - எமை
கண்ணீரில் மிதக்கவிட்டு நீங்கள்
காற்றாகி ஆண்டொன்று போனதுவே
காலங்கள் விடைபெறலாம் - எம்
கோலங்கள் மாறலாம் - ஆனாலும்
கண்முன்னே நிழலாகும் - உங்கள்
நினைவுகள் மட்டும் நித்தம் எம்முடன் உயிர்வாழும்.

30 (28/1), முதலியார் லேன்,
நல்லூர் தெற்கு, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(109841)

**அதிபர்களே! ஆசிரியர்களே!**

ஒலிம்பியா ஸ்போட்ஸ்

உங்கள் பாடசாலைகளின் மெய்வல்லுனர் நிகழ்வுகள் சிறப்புற

தேவையான
★ ஈட்டி, குண்டு, தட்டு, அளவு நாடாக்கள் உட்பட அனைத்து விளையாட்டு உபகரணங்கள்
★ வெற்றிக்கிண்ணங்கள், வெற்றிக் கேடயங்கள், மெடல்ஸ்,
★ பான்ட் வாத்திய கருவிகள், உதிரிப்பாகங்கள் போன்றவற்றை
நியாய விலையில் பெற்றுக்கொள்ள

**ஒலிம்பியா ஸ்போட்ஸ்**
இல.6, ஜும்மா பள்ளிவாசல் லேன்,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

ஞாயிற்றுக்கிழமைகளில்
01மணிவரை திறக்கப்படும்.

TP: 2223490, 0778010219, 0776060267

Ktv இப்போது
டயலொக் TV இல்
Dialog

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2014இல் 'சொக்லேட்' பற்றாக்குறை ஏற்படும்

ஐவரிகோஸ்ட் நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் சிக்கல்களால், கோகோ பீன்ஸ் விளைச்சல் பாதியாக குறைந்துள்ளது. இதனால் 2014 இல் உலகில் சொக்லேட் பற்றாக்குறை ஏற்படும் என தகவல் வெளியாகியுள்ளது.

பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை சொக்லேட்டை விரும்பாதவர்கள் எவரும் இல்லை. சொக்லேட் தயாரிக்க முக்கியமான பொருள் கொக்கோ. கொக்கோ பீன்ஸில் இருந்து தயாரிக்கப்படும் கொக்கோ தான் சொக்லேட்டின் இன்றியமையாத மூலப்பொருள்.

உலகளவில் விளைவிக்கப்படும் கொக்கோ பீன்ஸில் பாதி ஐவரி கோஸ்ட் நாட்டில் இருந்து தான் பெறப்படுகிறது. தற்பொழுது அந்த நாட்டு அரசியலில் சிக்கல்கள் உள்ளன. இதனால் விவசாயிகள் கொக்கோ பீன்ஸ் தயாரிப்பை பாதியளவாக குறைத்துவிட்டனர்.

பலர் நாட்டை விட்டு வெளிநாடுகளுக்கு சென்றுவிட்டனர். விளைவிக்கப்படும் சிறிதளவு கொக்கோவையும் கானா நாட்டிற்குக் கொண்டு சென்று அதிக விலைக்கு விற்கின்றனர். சர்வதேச நாடுகளுக்கு கொக்கோ பீன்ஸை ஏற்றுமதி செய்ய அந்த நாட்டு அதிபர் அலஸ்சேன் குவட்டாரா தடை விதித்துள்ளார்.

இதன் எதிரொலியாக நடப்பு மாதத்தில் மட்டும் கொக்கோ விலை 10 சதவீதம் அதிகரித்து இருப்பதாக வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். (ம)

# சுற்றுலாப் பயணிகளுக்கு பிரான்ஸ் அரசின் எச்சரிக்கை

பரிஸ், ஜன. 31

எகிப்தை நோக்கிய பலநூற்றுக் கணக்கான ஐரோப்பியர்களின் சுற்றுப்பயணங்கள் அனைத்தும் இந்த வார இறுதியில் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

வெள்ளி இரவே பிரான்ஸின் அனைத்து பிரயாண ஒழுங்கமைப்பாளர்களும், சுற்றுலா நிறுவனங்களும் தமது ஆபிரிக்கா நோக்கிய பயணங்களை முக்கியமாக எகிப்தையும் அதனை அண்டிய நாடுகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அனைத்து பிரயாண ஒழுங்குகளையும் இரத்துச் செய்வதாக அறிவித்துள்ளனர். பிரான்ஸ் அரசின் வெளிவிவகார அமைச்சகம் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சரின் செயலாளரும் எகிப்துக்கான பயணங்களைத் தவிர்க்கு மாறு பிரெஞ்சு மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஏற்கனவே எகிப்திலும் அதை அண்டிய பகுதிகளிலும் இருக்கும் பிரெஞ்சு மக்களை அத்தியாவசியத் தேவைகளின்றி வெளியே செல்லவேண்டாம் எனவும் அறிவித்துள்ளனர்.

அனைத்துப் பிரயாண ஒழுங்கு நிறுவனங்களுக்கும் இந்த அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.

2010ஆம் ஆண்டில் மட்டும் 60 லட்சம் பிரெஞ்சு மக்கள் எகிப்து நோக்கி தமது உல்லாசப் பயணத்தை மேற்கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

துனிசியாவில் ஏற்பட்டது போல் எகிப்திலும் மூன்று தசாப்தங்களாக ஆட்சியிலிருக்கும் ஜனாதிபதி ஹோஸ்னி முபாரக்கை ஆட்சியிலிருந்து விலகும்படி வெடித்திருக்கும் மக்கள் புரட்சியால் சுற்றுலாப் பயணிகளுக்கும் ஆபத்து ஏற்படும் என அஞ்சியே பிரான்ஸ் அரசால் சுற்றுலாப்பயணங்கள் நிறுத்தப்பட்டுள்ளன. (ம)

# அமெரிக்காவில் 'பாம்பு வீடு' விற்பனை

அமெரிக்கா, ஜன. 31

அமெரிக்காவில் உள்ள இடாகோ மாகாணத்தில் ஒரு பாம்பு வீட்டை விற்பனை செய்ய முயற்சி நடந்து வருகிறது.

அமெரிக்காவின் இடாகோ மாகாணத்தில் பாம்பு வீடு ஒன்று உள்ளது.

இந்த வீட்டில் ஆயிரக்கணக்கான பாம்புகள் வசிக்கின்றனவாம். வீட்டுக் கூரை, சுவர் என்று எங்கு பார்த்தாலும் பாம்புகள் ஊர்ந்து கொண்டிருக்கின்றனவாம்.

வங்கியில் கடன் வாங்கி, இந்த வீட்டை வாங்கியவர் ஒழுங்காக கடனை கட்டாததால், வங்கி வீட்டை பிடுங்கிக் கொண்டது. பின்னர், அந்த வீட்டிற்கு வாடகைக்கு குடி வந்தவர்கள், எல்லாரும் பாம்புகளால் விரட்டியடிக்கப்பட்டனர். வெறுத்துப் போன வங்கி நிர்வாகம், அந்த வீட்டை விற்பனை செய்ய முடிவு செய்து, தரகர்களை ஏற்பாடு செய் துள்ளது.

ஐந்து படுக்கையறை கொண்ட அந்த வீட்டின் மதிப்பு 50 லட்சம் ரூபா.

ஆனால், பாம்புகளும் அந்த வீட்டில் குடியிருப்பதால், வெறும் 3 லட்சம் ரூபாய்க்கு விற்க தயாராக உள்ளனர். ஆனால், அதை வாங்கத்தான் ஆளில்லை. டோட் டேவிட் என்ற தரகர், அந்த வீட்டை எப்படியாவது விற்றே தீருவது என்று பகீரத பிரயத்தனம் செய்து வருகிறார்.

இதற்காக, பூச்சி தடுப்பு நிபுணர்களை அழைத்து, அந்த வீட்டில் உள்ள பாம்புகள் குறித்து ஆய்வு செய்தார். அந்த வீட்டில் இருப்பவை விஷமற்ற கார்ட்டர் வகை பாம்புகள் என்று தெரிந்தது. இந்த வகை பாம்புகள் விஷமற்றவை என்றும், அவை மனிதர்களுக்கு எந்தத் தீங்கும் செய்யாது என்றும் தெரிவித்தனர்.

எனினும், என்னதான் சமாதானம் சொன்னாலும், அந்த வீட்டை வாங்கத்தான் ஆளில்லை. ஒருவேளை பாம்புகளை நேசிப்பவர்கள் தான் இந்த வீட்டை வாங்குவார்களாக்கும் என்று, 'பாம்பு நேசர்களை டேவிட் சல்லடை போட்டுத்தேடுகிறார். (ம)

# ஜேர்மனியில் ரயில் விபத்து: 10 பேர் பலி

பொன், ஜன. 31

ஜேர்மனியில் உள்ள மாக்டெபர்க் நகரில் இருந்து ஹால் பெர்ஸ்டேட் நகருக்கு பயணிகள் ரயில் புறப்பட்டுச் சென்றது.

கிழக்கு ஜேர்மனியில் உள்ள சல்சோனிக்கும் அன்ஹால்ட் நகருக்கும் இடையே சென்ற போது இதன் மீது சரக்கு ரெயில் பயங்கரமாக மோதியது. இதை தொடர்ந்து ரயில் பெட்டிகள் தடம் புரண்டுவிபத்துக்குள்ளாகின.

இதில் 10 பேர் உயிரிழந்தனர். பலர் காயம் அடைந்தனர்.

தகவல் அறிந்ததும் தீயணைப்பு படையினரும், பொலிஸாரும் விரைந்து வந்து மீட்பு பணியில் ஈடுபட்டனர். காயம் அடைந்தவர்களை மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சை அளித்தனர்.

இந்த விபத்து காரணமாக அந்தப் பகுதியில் ரயில் போக்குவரத்து தடைபட்டது. (ம)

## மரண அறிவித்தல்



### திருமதி கணேசு நாகம்மா
### (புளியங்கூடல்)

புளியங்கூடல், ஊர்காவற்துறையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தற்போது கனடாவில் வசித்து வந்தவருமாகிய திருமதி கணேசு நாகம்மா கனடாவில் காலமானார்.

அன்னார் பொன்னுச்சாமி கணேசுவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை- நாகமுத்து தம்பதியினரின் அன்புமகளும், காலஞ்சென்றவர்களான பொன்னுச்சாமி- சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகளும், பரலோகநாதன் (கனடா), லலிதா (கனடா), மிதிலா (ஜேர்மனி), மாலினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், இராஜேஸ்வரி (கனடா), திருச்சிற்றம்பலம் (கனடா), ஸ்ரீஸ்கந்தராஜா (ஜேர்மனி), குபேந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புமாமியாரும், அஜந்தன், ஆர்த்தி, அஸ்வதன், சாய்பிரதீஷ், அட்சயா, வாகீஷ்வர், ஜோதீஷ்வர் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், அஸ்மிதா, அமிரன், கரிஷ் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் காலஞ்சென்ற தர்மலிங்கம் மற்றும் நீலாம்பாள், சத்தியபாமா காலஞ்சென்ற திருநாவுக்கரசு (மகாதேவா) ஆகியோரின் அன்புச் சகோதரி யும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

13, Angelucci Drive
Brampton,Ontario
L6P1G7, Canada.
+19059130610

தகவல்:
பரலோகநாதன்
(மகன்)

### நேபாள கிறிஸ்தவர் போராட்டம்

இறந்தவர்களை அடக்கம் செய்ய தனியிடம் கோரி நேபாள கிறிஸ்தவர்கள் போராட்டம் நடத்தினர். இறந்தவர்களை அடக்கம் செய்வது குறித்து இந்துக்கள் - கிறிஸ்தவர்கள் இடையே போராட்டம் நீடித்து வருகின்றது.

இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வலியுறுத்தி நாடாளுமன்றம்முன்பு கிறிஸ்தவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். நேபாளத்தில் பசுபதிநாதர் கோவில் உள்ளது. இந்தக் கோயில் அடர்ந்த வனப்பகுதியை ஒட்டி அமைந்துள்ளது. கோயில் அருகிலேயே கிறிஸ்தவர்களின் கல்லறையும் உள்ளது. பாரம்பரியத்தை பாதுகாக்கும் அமைப்பான யுனெஸ்கோ இக்கோயிலை பாரம்பரியமிக்க சின்னமாக அறிவித்துள்ளது. இந்நிலையில் கோயில் அருகில் கிறிஸ்தவர்களை அடக்கம் செய்யக் கூடாது என்றுஇந்து அமைப்பினர் போராட்டம் நடத்தினர். (ம)

## மரண அறிவித்தல்

### பொன்னையா தியாகராஜா
(இளைப்பாறிய உத்தியோகத்தர் மாவட்ட நீதிமன்றம் )



யாழ்.கலட்டி, சீனியர் லேனைப் பிறப்பிடமாகவும், யாழ். 182, நாவலர் வீதியில் வசித்தவரும், தற்போது கனடாவை வதிவிடமாகக் கொண்டவருமாகிய பொன்னையா தியாகராஜா கடந்த (28.01.2011) வெள்ளிக்கிழமை கனடாவில் சிவபதமடைந்தார்.

அன்னார் கலட்டியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான பொன்னையா- ராசம்மா தம்பதியரின் புதல்வரும், காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை- சிவபாக்கியம் தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற சரஸ்வதியின் (ராசாத்தி) அன்புக்கணவரும், காலஞ்சென்றவர்களான ஜெயலஷ்மி வேலாயுதபிள்ளை, பத்மநாதன் (இராசு), பாக்கியலஷ்மி- பூபால சிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், ஸ்ரீஸ்கந்தராஜா (Swiss), நந்தினி (Canada), குமுதினி (Canada) ஆகியோரின் பிரியமுள்ள தந்தையும், ராகினி, கருணாகரன், சுதர்சன் ஆகியோரின் மாமனாரும், அன்றியா, அர்ஜனா, அஹானா, சிந்துஜா, சாருகன், சனகன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 30.01.2011 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5.00- 9.00pm வரை **3280 Sheppard Avenue East** இல் அமைந்துள்ள **Highland Funeral Home** இல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இன்று (31.01.2011) திங்கட்கிழமை முற்பகல் 11.00- 1.00 pm அதே இடத்தில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, 4750 Yonge Street இல் உள்ள Forest Lawn Crematorium மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு: 001 416- 759- 9480,
001 905-944-1453,
0041 34 461 7175.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கத் தூதரக அதிகாரியை உடனடியாக விடுவிக்க கோரிக்கை

இஸ்லாமாபாத், ஜன. 31

''பாகிஸ்தானில் சட்ட விரோதமாகப் பிடித்து வைக்கப்பட்டுள்ள அமெரிக்க தூதரக அதிகாரியை உடனே விடுவிக்க வேண்டும்'' என ஜனாதிபதி ஒபாமா நிர்வாகம் கோரியுள்ளது.

அதேநேரத்தில், அமெரிக்க தூதரக அதிகாரி தொடர்பான வழக்கை கவனமாகக் கையாளும்படி, பாகிஸ்தான் உள்துறை அமைச்சரை இராணுவத் தளபதி கயானி கேட்டுக் கொண்டுள்ளார். பாகிஸ்தான் லாகூரிலுள்ள அமெரிக்க துணை தூதரகத்தில் பணியாற்றுபவர் ரேமண்ட் டேவிட்.

இவர் சமீபத்தில் தன் வாகனத்தில் தூதரக உயரதிகாரிகள் இருவருடன் லாகூர் அருகே சென்று கொண்டிருந்தார். அப்போது, அவரை வழிமறித்த மூன்று பேர், துப்பாக்கிமுனையில் கொள்ளையடிக்க முயன்றனர்.

டேவிட் தன் கைத்துப்பாக்கியால் அவர்களை நோக்கிச் சரமாரியாக சுட்டார். இதில், இரு கொள்ளையர்கள் சம்பவ இடத்திலேயே இறந்தனர். உடன் டேவிட் சம்பவ இடத்திலிருந்து தப்பி ஓடினார். அதேநேரத்தில், அவருடன் ஏற்கனவே காரில் வந்த தூதரக அதிகாரிகள் இருவர், அவரை காரில் பின் தொடர்ந்தனர்.

அப்போது நிகழ்ந்த சாலை விபத்தில், மற்றொரு பாகிஸ்தானி பலியானார். இதையடுத்து, டேவிட்டை பிடித்து பாகிஸ்தான் பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த நிலையில், பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமா பாத்திலுள்ள அமெரிக்க தூரதகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில், ''சட்டவிரோதமாகப் பிடித்து வைத்துள்ள அமெரிக்க தூதரக அதிகாரியை, பாகிஸ்தான் நிர்வாகத்தினர் விடுவிக்க வேண்டும். தூதரக அதிகாரியை கைது செய்வதும், காவலில் வைப்பதும் சர்வதேச விதிமுறைகள், வியன்னா மாநாட்டுத் தீர்மானம் ஆகியவற்றிற்கு எதிரானவை. கிரிமினல் பின்னணி கொண்ட சிலர், டேவிட்டிடம் கொள்ளையடிக்க முயன்றதால்தான் அவர்கள் சுடப்பட்டுள்ளனர்'' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

# எகிப்தில் அமைச்சரவை கலைப்பு பதவி விலக ஜனாதிபதி மறுப்பு

எகிப்தில் அரசுக்கு எதிராக நடந்த போராட்டங்களால், ஜனாதிபதி ஹோஸ்னி முபாரக் (வயது-82), நேற்று தன் அமைச்சரவையைக் கலைத்தார். அதே நேரத்தில், பதவி விலக மறுத்துவிட்டார்.

எகிப்தில் அதிபர் ஹோஸ்னி முபாரக் பதவி விலகக்கோரி, கடந்த நான்கு நாள்களாக அந்த நாட்டு மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அவர்களுக்கு ஆதரவாக, பிரதான எதிர்க் கட்சியான முஸ்லிம் சகோதரத்துவ கட்சியும், ஐ.நாவின் சர்வதேச அணுசக்தி ஏஜன்சியின் முன்னாள் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான முகமது எல் பரேடியும் களத்தில் குதித்துள்ளனர்.

கடந்த நான்கு நாள்களாக நடந்த கலவரத்தில் இதுவரை 26 பேர் பலியாகியுள்ளனர். 100 இற்கும் மேற்பட்டோர் காயம் அடைந்துள்ளனர்.

இதன் பின் இரவில் நாட்டு மக்களுக்கு அதிபர் முபாரக் உரை நிகழ்த்திய போது, தற்போதைய அரசு முழுமையாகக் கலைக்கப்படுகிறது.

விரைவில் புதிய அரசு அமைக்கப்படும். நாடு தொடர்ந்து ஜனநாயக வழியிலேயே செல்லும். மாற்றங்கள் பேச்சுவார்த்தையால் அன்றி, வன்முறையால் சாத்தியமல்ல.

நாடு வன்முறையில் சிக்கி சீரழிவதை நான் அனுமதிக்க மாட்டேன்.- என்றார். அவரது பேட்டிக்குப் பின்னும், கெய்ரோ உள்ளிட்ட நகரங்களில் மேலும் வன்முறைகள் அதிகரித்தன. (ம)

# கனடாவின் டைனோசரின் எலும்பு எச்சங்கள்

றொரன்டோ, ஜன. 31

64.8 மில்லியன் வயதுடைய டைனோசர் ஒன்றின் எலும்புகளின் எச்சங்கள் கனடாவின் 'அல்பேர்ட்டா' பல் கலைக்கழகத்தினர் நடத்திய ஆய்வு ஒன்றின் மூலம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

இந்த டைனோசர் சுமார் ஏழு லட்சம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்திருக்கின்றது.

டைனோசர்கள் தாவர உண்ணிகள். டைனோசர்கள் கால நிலை மாற்றங்கள் காரணமாக முற்றாக அழிந்து விட்டன என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். (ம)

## தலைவர்களின் சங்கமம்...



அமெரிக்கா தலைநகர் வோஷிங்டனில், அந்நாட்டு இணை அமைச்சர் வில்லியம் பர்ன்ஸை, இந்தியா தூதர் மீரா சங்கர் சந்தித்துப் பேசினார்.

# கடும் வெப்பமான கிரகம் கண்டுபிடிப்பு

லண்டன், ஜன. 31

விண்ணில் சூரிய குடும்பக் கிரகங்கள் மட்டுமின்றி எண்ணிலடங்கா கிரகங்களும், நட்சத்திரங்களும் உள்ளன. இவை குறித்து ஆராய்ச்சி செய்துவரும் விஞ்ஞானிகள் புதுப் புதுக் கிரகங்களை கண்டுபிடித்து வருகின்றனர்.

இந்த நிலையில் தற்போது புதிதாக ஒரு கிரகத்தைக் கண்டுபிடித்துள்ளனர். டபிள்யூ, ஏ.எஸ்.பி.-33 பி என்று இதற்குப் பெயரிட்டுள்ளனர். இதை எச்.டி. 15082 என்றும் அழைக்கின்றனர். இது மிகவும் கடுமையான வெப்பமுடைய கிரகமாகும். 7160 டிகிரி செல்சியஸ் வெப்பத்துடன் இது உள்ளது.

தற்போது இதுதான் மிகுந்த வெப்பமுடைய கிரகம் எனக் கருதப்படுகிறது. ஏனெனில் சூரியனின் வெப்பம் 5,600 டிகிரி செல்சியஸ்தான். இதற்கு முன்பு கண்டுபிடிக்கப்பட்ட கிரகம் 3,200 டிகிரி செல்சியஸ் வெப்பம் கொண்டதாகவிருந்தது.

# பாகிஸ்தானில் முக்கிய சுரங்கப் பாதையை தகர்க்க தீவிரவாதிகள் குண்டுத் தாக்குதல்

பாகிஸ்தானின் வடமேற்கு மாகாணத்திலுள்ள முக்கியமான சுரங்கப்பாதை மீது வெடி குண்டுகள் நிரப்பிய லொறியை மோதி தீவிரவாதிகள் சனிக்கிழமை தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதல் நடந்த அடுத்த நிமிடத்தில் சுரங்கப் பாதைக்கு அருகிலுள்ள பொலிஸ் சோதனைச்சாவடி மீது வெடி குண்டுகள் நிரப்பிய லொறியை மோதி தாக்குதல் நிகழ்த்தினர்.

இவ்விரு சம்பவங்களிலும் 8 பேர் கொல்லப்பட்டனர். 14 பேர் காயமடைந்தனர். இதில் 4 பேர் படுகாயமடைந்தனர். இலேசாக காயமடைந்தவர்கள் அனைவரும் சம்பவம் நடந்த இடத்துக்கருகிலுள்ள வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். படுகாயமடைந்த நால்வரும் பெஷாவரிலுள்ள வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பாகிஸ்தானின் தெற்குப் பிராந்தியத்தையும், பெஷாவர் நகரையும் இணைக்கும் முக்கியமான இந்தச் சுரங்கப்பாதை ஜப்பான் வல்லுநர்களால் கட்டப்பட்டது. இச்சுரங்கப்பாதை வழியாக செல்லும் வாகனங்களுக்கு ஏற்கனவே தீவிரவாதிகள் அச்சுறுத்தல் விடுத்திருந்ததால் அது பல மாதங்களாக மூடிக்கிடந்தது.

சமீபத்தில் பாகிஸ்தானின் தெற்குப் பிராந்தியத்திலிருந்து பெஷாவர் பகுதிக்குச் செல்லும் மாற்றுப்பாதையில் 24 மணி நேரம் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. இதனால் சுரங்கப் பாதை சமீபத்தில் மீண்டும் திறக்கப்பட்டது.

தீவிரவாதிகள் அச்சுறுத்தல் இருந்ததால் சுரங்கப்பாதையில் பகலில் மட்டும் போக்குவரத்துக்கு அனுமதிக்கப்பட்டது. இந்நிலையில் தக்கத் தருணம் பார்த்து காத்திருந்த தீவிரவாதிகள், சுரங்கப்பாதை மீதும், சுரங்கப்பாதைக்கு முன்னாலும், பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த சோதனைச்சாவடி மீதும் தாக்குதல் நிகழ்த்தியுள்ளனர்.

அப்பகுதி முழுவதிலும் பாதுகாப்புப்படை சிப்பாய்கள் குவிக்கப்பட்டுள்ளனர். தீவிரவாதிகளை வலைவீசித் தேடி வருகின்றனர். தாக்குதல் நடந்ததுமே சுரங்கப்பாதையில் போக்குவரத்து நிறுத்தப்பட்டது.

# ரஷ்ய விமான குண்டுவெடிப்பு சந்தேக நபர் கைது

ரஷ்யாவில் உள்ள டொமோடிடோவோ விமான நிலையத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற குண்டு வெடிப்புத் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த விபத்தில் 35 பேர் பலியாயினர் 18 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

செசன்யா பிரிவினை வாதிகள் குண்டு வைத்திருக்கலாமோ என்ற கோணத்தில் விசாரணை நடத்தி வந்தனர்.

இந்த நிலையில் குண்டு வைத்தவன் ரஷ்யாவின் தெற்கு எல்லைப் பகுதியான கவுகாஸசை சேர்ந்தவர் என கண்டறியப்பட்டுள்ளது.

# சூகி கட்சியின் அங்கீகாரம் ரத்து ஆட்சேனை மனு மீண்டும் நிராகரிப்பு

யாங்கூன், ஜன. 31

மியான்மர் விடுதலைப் போராட்ட வீராங்கனையான ஆங் சான் சூகி கட்சியின் அங்கீகாரம் இரத்துச் செய்யப்பட்டதை எதிர்த்து புதிதாகத் தாக்கல் செய்யப் பட்ட மனுவையும், உச்ச நீதி மன்றம் தள்ளுபடி செய்தது.

புதிதாகத் தாக்கல் செய்யப்பட்ட மனு வெள்ளிக்கிழமை விசாரணைக்கு வந்தது. மனுவை விசாரித்த நீதிபதி, அதை தள்ளுபடி செய்து உத்தர விட்டார்.

இருப்பினும் கட்சியின் அங்கீகாரம் ரத்துச் செய்யப்பட்டதை எதிர்த்து உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியிடம் நேரடியாக முறையிட திட்டமிட்டுள்ளார் என ஆங் சான் சூகியின் தேசிய ஜனநாயக லீக் கட்சி சட்டத்தரணி கியாவ் ஹோய் தெரிவித்தார்.

இதுகுறித்து கட்சியின் மூத்த தலைவர்களிடம் ஆலோசித்து முடிவெடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ம)

# 43 ஆண்டுகளாக விடுமுறை எடுக்காமல் பணி புரிந்த முதியவர்

இங்கிலாந்தில் உள்ள எஸ்செஸ் என்ற இடத்தை சேர்ந்தவர் ஜிம்ஓவன் (வயது-66). தற்போது இவர் பாசில் டன் கவுன்சிலில் பணிபுரிகிறார்.

இங்கு அவர் கடந்த 1968 ஆம் ஆண்டில் இருந்து பணியாற்றி வருகிறார். அன்று முதல் இன்றுவரை அதாவது 43 வருடங்கள் ஒருநாள் கூட விடுமுறை எடுக்காமல் பணியாற்றி வருகிறார்.

இந்த தகவலை அந்த நாட்டு பத்திரிகை வெளியிட்டுள்ளது.

தனது பணி குறித்து ஜிம் ஓவன் கூறும்போது, தினமும் அதிகாலையில் எழுகிறேன். தினமும் மகிழ்ச்சியுடன் எனது பணியை தொடங்குகிறேன். இது எனக்கு உற்சாகத்தை அளிக்கிறது.

மேலும் நான் சத்தான உணவுகளைச் சாப்பிடுகிறேன். புகைப்பிடிக்கும் பழக்கம் கிடையாது. வேலை செய்யும் போது சுத்தமான காற்றை சுவாசிக்கிறேன். எனவே நான் ஆரோக்கியமாக வாழ்கிறேன். தற்போது எனக்கு ஓய்வு பெறும் வயதுதான்.

[illegible] ஓய்வு பெற நான் விரும்பவில்லை என்று தெரிவித்துள்ளார். [illegible] 3 பேரக்குழந்தைகளும் உள்ளனர். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

வரணி மகா வித்தியாலயத்தில் கல்வி சார ஊழியராகக்
கடமை புரியும் கிட்டிணபிள்ளை யோகராசா
அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி கிட்டிணபிள்ளை சின்னப்பிள்ளை

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி !!!

(சி/575510)

**பாடசாலைச் சமூகம், வரணி மகா வித்தியாலயம்.**

# ஜாதிக சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் - 95
திகதி - 29.01.2011

ஜாதிக சம்பத Jathika Sampatha — உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து **B** அதிர்ஷ்ட இலக்கம் **07** வெற்றி இலக்கம் **7 5 9 4 5**

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | எழுத்து | அதிர்ஷ்ட இலக்கம் | வெற்றி இலக்கம் | தொகை | பரிசு |
|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | B | 07 | 7 5 9 4 5 | ரூ. 8,551,121.00 | - |
| 1 பரிசு | | 07 | 7 5 9 4 5 | ரூ. 2,000,000.00 | 01 |
| 2 பரிசு | | | 7 5 9 4 5 | ரூ. 100,000.00 | 02 |
| 3 பரிசு | | | 5 9 4 5 | ரூ. 10,000.00 | 23 |
| 4 பரிசு | | | 9 4 5 | ரூ. 1,000.00 | 267 |
| 5 பரிசு | | | 4 5 | ரூ. 50.00 | 2620 |
| 6 பரிசு | | | 5 | ரூ. 20.00 | 25153 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | எழுத்து | அதிர்ஷ்ட இலக்கம் | வெற்றி இலக்கம் | தொகை | பரிசு |
|---|---|---|---|---|---|
| 7 பரிசு | | | 7 5 9 4 | ரூ. 1,000.00 | 26 |
| 8 பரிசு | | | 7 5 9 | ரூ. 100.00 | 260 |
| 9 பரிசு | | | 7 5 | ரூ. 50.00 | 2637 |
| 10 பரிசு | B | | | ரூ. 20.00 | 10422 |
| 11 பரிசு | B | 07 | | ரூ. 100.00 | 1168 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,840,150.00

வெற்றிபெறும் டிக்கட்கள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ரூபா இலட்சம் அல்லது அதற்குக் கூடிய பரிசுத் தொகைகள் அரச வரிக்குக் உட்படும். பரிசைப் பெற்றுக்கொள்வதற்கு, தேசிய அடையாள அட்டையை சமர்ப்பிப்பது கட்டாயமானது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர அழைப்பிற்கு: 2473900, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த புதன் கிழமை சுப்பர் பரிசு
ரூ.8,551,121.00



# மஹஜன சம்பத சீட்டிழுப்பு முடிவுகள்

தேசிய லொத்தர் சபையின் மஹஜன சம்பத 2350ஆம் இலக்க சீட்டிழுப்பில் "B" என்ற ஆங்கில எழுத்தும் 8/0/5/0/4/0 என்ற இலக்கங்களும் அதிர்ஷ்டத்துக்குரியனவாகத் தெரிவாகின. இதன் பிரகாரம் வலமிருந்து இடமான அமைப் பில் B/8/0/5/0/4/0 என்ற இலக்கங்களைக் கொண்ட சுப்பர் பரிசை ஒருவர் வென்றுள்ளார்.

முதலாம் பரிசு வெல்லப்படவில்லை.

0/5/0/4/0 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 11 பேருக்கு இரண்டாம் பரிசாகத் தலா ஒரு இலட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

5/0/4/0 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 139 பேருக்கு மூன்றாம் பரிசாகத் தலா பத்தாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

0/4/0 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,357 பேருக்கு 4 ஆம் பரிசாகத் தலா ஆயிரம் ரூபா கிடைக்கும்.

4/0 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 13,735 பேருக்கு 5ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

0 என்ற இலக்கத்தை மட்டும் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,35,916 பேருக்கு 6 ஆம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கும்.

இடமிருந்து வலமான அமைப்பில் 8/0/5/0/4 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 13 பேருக்கு ஏழாம் பரிசாகத் தலா பத்தாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

8/0/5/0 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 144 பேருக்கு 8 ஆம் பரிசாகத் தலா ஆயிரம் ரூபா கிடைக்கும்.

8/0/5 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,367 பேருக்கு 9 ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

8/0 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 13,556 பேருக்கு பத்தாம் பரிசாகத் தலா ஐம்பது ரூபா கிடைக்கும்.

B என்ற ஆங்கில எழுத்தை மட்டும் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 54,476 பேருக்கு பதினோராம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது. (10)

# மாகாண பொது நிர்வகச் செயலகம் நாளை முதல் நாவலர் வீதியில்

யாழ்ப்பாணம், ஜன.31

வடக்கு மாகாண பொது நிர்வாகச் செயலகம் நாளைமுதல் நாவலர் வீதியில் உள்ள 695 இலக்க இல்லத்தில் இயங்கும்.

மாகாண பொது நிர்வாக பிரதி பிரதம செயலாளரும் கிளிநொச்சி - முல்லைத்தீவு பிராந்திய ஆணையாளருமான தி.இராசநாயகம் அறிவித்துள்ளார்.

கடந்த 19 ஆம் திகதி பால் காய்ச்சி வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது தெரிந்ததே.

(ஐ-302)

# இலவச நூல்

சுழிபுரம்,ஜன.31

அபிராமி அந்தாதி நூறு பாடல்களும் ஏழாவது தடவையாக அச்சிட்டு இலவசமாக பஜனைச் சபையினர் வழங்கிவருகின்றனர். நூறு பாடல்களையும் மனனம்செய்து ஒப்புவிப்பவர்களுக்கு திருக்கோவையார் நூலை வழங்கவும் பஜனைச் சபையினர் [illegible] செய்துள்ளனர்.

(ஒ-28)



# மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்



மாவை கொல்லங்கலட்டி, கேணிக்கரை
திருவருள்மிகு
ஸ்ரீவீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்

05.02.2011 சனிக்கிழமை
06.02.2011 ஞாயிற்றுக்கிழமை
ஆகிய தினங்களில்
எண்ணெய்க்காப்புச் சாத்தலாம்

07.02.2011 திங்கட்கிழமை காலை.9.36 முதல் முற்பகல்10.26 மணிவரை உள்ள மீனலக்கின சுப வேளையில் மஹாகும்பாபிஷேக கிரியைகள் நடைபெறும்.

ஆஸ்திக சைவப் பெருமக்கள் அனைவரும் வருகை தந்து விநாயகரை வழிபட்டு இஷ்ட சித்திகளைப் பெறுவீர்களாக.

குறிப்பு:- உங்கள் வாகனங்களிலே ஆலயத்துக்கு வரலாம். திருப்பணிக்குப் பண உதவிபுரிவோர் இலங்கை வங்கி காங்கேசன்துறை கிளை கணக்கு இலக்கம் 7577127 அனுப்பி வைக்கலாம். நேரடியாக ஆலயக் காரியாலயத்திலும் சமர்ப்பிக்கலாம்.

அறங்காவலர்,
ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமண்ய சிவஷண்முகாநந்தக் குருக்கள்,

# கோழிக்குஞ்சு விநியோகம்

தடுப்பு மருந்து போடப்பட்ட தரமான No.1 பிறீமா புறொயிலர் கோழிக் குஞ்சுகள் நியாயமான விலையில் (100/=) 03.02.2011 காலை விநியோகிக்கப்படும். முன்பதிவு செய்யவும்

| | |
|---|---|
| ★சுட்டிபாம் சென்ரர், வட்டுக்கோட்டை | - 0778996085 |
| ★சன்னதி பாம் சென்ரர், தொண்டமானாறு | - 0776904590 |
| ★நெல்லியடி பல்பொருள் விற்பனை, நெல்லியடி | - 0774656377 |
| ★முகுந்தன், பருத்தித்துறை | - 0771392593 |
| ★துர்க்கா பாம், சுன்னாகம் | - 0779346599 |

நல்லூர் பாம் சென்ரர்,
19, முருகேசர் லேன், நல்லூர்.
தொ.பே. 021 222 6944

(109460)



# மரண அறிவித்தல்கள்

## திருமதி ஞானப்பிரகாசம் சேயம்மா

பாஷையூரைப் பிறப்பிடமாகவும், நைனாமடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஞானப்பிரகாசம் சேயம்மா (29.01.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மூப்பர் ஞானப்பிரகாசத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற திருமதி பொன்றோஸ் அந்தோனிபிள்ளை மற்றும் அருட்சகோதரி றீற்றா லொறின்டா (AC), காலஞ்சென்ற சூசைதாசன் மற்றும் G.M.R யேசுதாசன், மேதகு ஆயர் விக்ரர் ஞானப்பிரகாசம், (O.M.I, ஆயர், குவாட்டார் மறைமாவட்டம், பாகிஸ்தான்), அருட்சகோதரி கெலன்றீசா (AC) ஆகியோரின் அன்புத் தாயாரும், யூலியன், திலகம், ஞானம், காலஞ்சென்ற புறுனோகிறிஸ்ரி மற்றும் றாபன் , வதனா, அயலின், யூடி, வசான்ற், அயான்ற் நீட்றா, நிறுபா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற இளைப்பாறிய ஆசிரியர் M.அந்தோனிப்பிள்ளை (யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி), திருமதி இவோனி யேசுதாசன் ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற மூப்பர் செபஸ்ரியாம்பிள்ளை சேயோனின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நைனாமடத்தில் நடைபெறும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள் மற்றும் யாழ்.அமல மரி தியாகிகள் சபைகுருக்கள், யாழ். திருச்சபை சுதேச குருக்கள், ஏனைய சபைக் குருக்கள், யாழ்.கார்மேல் சபைச் சகோதரிகள், ஏனைய சபைச் சகோதரிகள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.10, 2ஆம் குறுக்குத் தெரு,
பாஷையூர், யாழ்ப்பாணம்.
021 2223179.

தகவல்:
பி.பி.பிறின்ஸ்.

## சுந்தரம்பிள்ளை வெற்றிவேலு

(ஓய்வுபெற்ற தபால் ஊழியர்)



அராலி மத்தியைச் சேர்ந்த சுந்தரம்பிள்ளை வெற்றிவேலு நேற்று (30.01.2011) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரம்பிள்ளை-நாகமுத்து தம்பதியரின் அருமைப் புதல்வனும் செல்வ நாயகத்தின் அன்புக் கணவரும் காலஞ் சென்றவர்களான முத்துகுமார், நடேசு, கந்தையா, வடிவேலு ஆகியோரின் அன்புச் சகோதர னும் சரோஜினிதேவி, பரமதாசன் (கனடா), யோகரஞ்சிதம், செல்வதாசன் (TERRITORY MANAGER, UNILEVER SRI LANKA LTD.) , திரவியதாசன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாலகிருஷ்ணமூர்த்தி, சுபிதா, ஞான குலசேகரம் (ACCOUNTANT, PETTA ESSENCE SUPPLIERS), கௌரியம்மா, ராதிகா ஆகியோரின் அன்பு மாமனும் சுபாதரன், வினோதரன், நிமலதரன், கிருஷ்னி, புருஷோத்த மன், தினோஜ் நிலோஜன், சுவேதா, கீர்த்தனன், நிவேதிகா, தருண், கேசினி, உதயமாலா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆதித்தன், மனோகா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.01.2011) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூனாவோடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அராலி மத்தி, அராலி.

தகவல்:
வெ.செல்வதாசன் (மகன்)



# இத்தால் சகலரும் அறிய வேண்டியது

யாழ்ப்பாணம், கந்தர்மடம், ஆத்திசூடி வீதி, 54/6 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த செல்லர் சின்னராசா ஆகிய நானும் எனது மனைவி சாந்தியும் சேர்ந்து 28.06.2002 ஆம் திகதியன்று பிரசித்த நொத்தாரிஸ் க.கேசவன் முன்பாக 5523, 5524ஆம் இலக்கங்களில் நிறைவேற்றப்பட்ட அற்றோனித் தத்துவத்தின் மூலம் எமது தத்துவக்காரர்களாக எம்மால் முறையே நியமிக்கப்பட்ட யாழ்ப்பாணம், கந்தர்மடம், ஆத்தி சூடி வீதி, 54/6ஆம் இலக்கத்தைச் சேர்ந்த சோமசுந்தரம் பரமேஸ்வரி, சீனியர் குணசேகரம் ஆகியவர்களின் நியமனத்தை இத்தால் இரத்துச் செய்கின்றோம் என்றும் மேற்குறித்த 5523, 5524 ஆம் இலக்க அற்றோனித் தத்துவம் இத்தால் இரத்துச் செய்யப்பட்டுள்ளது என்றும் சகல பொதுமக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றோம்.

செ.சின்னராசா,
சாந்தி சின்னராசா.

# CSC

COMPUTER EDUCATION
AN ISO 9001 : 2000 CERTIFIED INSTITUTION

Quality Education @ affordable cost



O/L மாணவர்களுக்கான விசேட பிரிவுகள் 01 02 03 February

75% நேரடி ஸ்கொலர்சிப் விசேட சிறப்புச் சலுகை

- Office Application
- Web Design & development
- Adv. Digital Pre-Press
- Digital Video Production
- Adv. Java Programming
- Tally Accounting Training
- Hardware & Networking
- Computer Graphic Design


ASIAN COMPUTER EDUCATION

2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P : 021-222 5677
230,1ம் மாடி கண்டி வீதி, சாவகச்சேரி, T.P : 021-2270267
[illegible] வீதி, நெல்லியடி. T.P : 021-2262399



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவளைக் கூத்து



டும் டும் மழை மழை டும் டும்
கும் கும் தவளைகள் கும் கும்

சல்லரி நான்கு மத்தள மேளம்
கவிலும் சேர்ந்தே டும் டும்
மெல்லென வீங்கும் புல்லாங்குழலும்
வீணையும் சேர்ந்தே கும் கும் கும்

குட்டை மிதந்திடும் பள்ளத்திலேபெரு
கூத்து நடக்குது தெய்ய தெய்ய
செடி நெருஞ்சியும் வட்டத் தகரையும்
சீலை விரிக்குது மெய்ய மெய்ய மெய்ய

பச்சைத் தேரை பிடில் வாசிக்க
பனைமரத் தேரை குழலூத
மொட்டைத் தவளை நாட்டியமாட
மோசங்கு கேட்குது ஞொய்ய ஞொய்ய ஞொய்ய

கொட்டும் மழையும் தாளம் போடக்
குளிரும் காற்றும் கவிபாட
பொட்டல் தரையில் தவளைகளை
சேர்ந்தே போடுது கூத்து தெய்ய தெய்ய

ரோ.அபிரெஜன்.

## பருவகால பக்தர்கள்

செவ்வாயில் நீர் இருக்க வாய்ப்பு உள்ளது
என்கிறான் ஒருவன் செவ்வாய்க் குற்றம்
என்று சொல்லி தள்ளியே போகிறது அவனின் திருமணம்

தன்னை மறந்து கை கூப்பி நிற்கிறான்
அர்ச்சனைக்காக அல்ல அரசியலுக்காக

காலில் விழுந்து எழும்புகிறார்கள்
ஆசீர்வாதம் வேண்டி அல்ல வரும்
தேர்தலில் ஒரு வாக்கு வேண்டி

அம்மாவும் அப்பாவும் முதியோர் இல்லத்தில்
மகன் அன்னையர் தின நிகழ்வில் கவிதை
படிக்கிறான் தாய் தந்தையே என்
இரு விழிகள் என்று

ம.அஜித்தன்.

## அறிந்து கொள்ளுங்கள்

* கொசுக்கள் தங்கள் இறக்கையை நொடிக்கு சுமார் 600 தடவைகள் அடிக்கும்.
* வெட்டுக்கிளிக்கு ஐந்து கண்கள் உள்ளன.
* பட்டாம் பூச்சிகளுக்கு வாய் இல்லை.
* அட்டைக்கு வயிறு இல்லை.
* வெட்டுக்கிளியின் காதுகள் அதன் கால்களில் அமைந்துள்ளன.
* குயில்கள் குளிர் காலத்தில் கூவுவதில்லை.
* பென்குயின் பறவை இனத்தை சேர்ந்தவைகளாக இருந்தாலும் அவை பறப்பதில்லை.
* பூச்சிகளும் புழுக்களும் எப்போதுமே தூங்குவதில்லை.
* ஒட்டகம் கோபப்படும் போது அருகில் உள்ளவர் மீது எச்சிலைத் துப்பும்.
* இறால் எப்போதும் பின் பக்கமாகவே நீந்தும்.

இராஜ் தனபால்.

## திறமையின் தோற்றம்...




மாணவர் மகிழ்வு: நெல்லியடி மெதடிஸ்தமிசன் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவின்போது சிறுவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெறுவதைக் காணலாம். (236)

## தவளைக் குட்டிச் சீடன்




(சென்றவார தொடர்ச்சி)

"தவளைதான் என்றாலும் மனிதர்களைப் போலவே பேசுவான்! ஓணான்தான் என்றாலும் தினம் நூறு பொற்காசு சம்பாதித்துக் கொண்டு வந்து கொடுப்பான்!" என்று புளுகினான் மண்டு.

இதைக் கேட்டு, அரசனுக்கும் மந்திரிகளுக்கும் பெரும் சங்கடமாக இருந்தது.சரி... நடந்தது நடந்து விட்டது. இப்போது என்ன சொல்கிறீர்கள்? என்று கேட்டார், அமைச்சர்.

என்ன செய்வதா? இவர்களை வைத்துத்தானே எங்கள் பிழைப்பே நடந்தது. அதனால், மறுபடியும் இதே தவளைக்கும் ஓணானுக்கும் உயிர் கொடுங்கள். இல்லாவிட்டால், தினம் நூறு பொற்காசுகளை நீங்கள் தான் தர வேண்டும், என்றார் பரமார்த்தர்.

வேறு வழி தெரியாத மன்னன், மறுபடியும் உயிர் கொடுக்க முடியாது. அதனால் தினம் நூறு பொற்காசு தந்து விடுகிறேன், என்று ஒப்புக் கொண்டான்.

மடத்துக்கு வந்ததும், செத்துப் போன தவளையையும் ஓணானையும் காட்டி ராஜாவையே ஏமாற்றி விட்டோம்! இனிமேல் தினமும் நூறு பொற்காசு கிடைக்கப் போகிறது, என்று குதித்தார்கள்.

முட்டாளையும் மூடனையும் பார்த்து, நீங்கள் இரண்டு பேரும் செத்து விட்டதாகக் கூறி விட்டோம். ஆகையால் இனிமேல் மடத்தை விட்டு வெளியே போகவே கூடாது. தப்பித் தவறி வெளியே போனீர்களானால் மாட்டிக் கொள்வோம். ஜாக்கிரதை! என்று எச்சரிக்கை செய்தார், குரு. ஒரு வாரம் கழிந்தது. இரவு நேரத்தில் எல்லோரும் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டு இருந்தனர்.

முட்டாளும் மூடனும் மட்டும் விழித்துக் கொண்டனர். சோ! ஊர் சுற்றி ஒரு வாரம் ஆகிறது! யாருக்கும் தெரியாமல் ஒரு சுற்றுச் சுற்றிக் கொண்டு வந்து விடலாம்! என்று ஆசைப்பட்டனர்.

கையில் கொள்ளிக் கட்டையுடன் இருவரும் வெளியே புறப்பட்டனர். இரண்டு தெரு சுற்றுவதற்குள், இரவுக் காவலர்கள் கண்ணில் பட்டு விட்டனர்!

உடனே இருவரையும் துரத்திப் பிடித்தனர். பொழுது விடிந்ததும், மற்ற சீடர்களும் குருவும் கைது செய்யப்பட்டனர்.ஆளை உயிரோடு வைத்துக் கொண்டே செத்து விட்டதாக ஏமாற்றினீர்கள். அதனால், இப்போது உண்மையாகவே இவர்கள் இருவரையும் தேர் ஏற்றிச் சாகடிக்கப் போகிறேன்! என்றான், மன்னன்.

அதைக் கேட்ட குருவும் சீடர்களும், அலறினார்கள். ஐயோ, மன்னா! தெரியாமல் செய்து விட்டோம். உங்களிடம் இருந்து வாங்கிய பணத்தை எல்லாம் திருப்பிக் கொடுத்து விடுகிறோம். மன்னித்து விட்டு விடுங்கள், என்று அரசனின் கால்களில் விழுந்தார்.

சீடர்களும் கீழே விழுந்து வேண்டினார்கள்.

மன்னனும் போனால் போகிறது என்று மன்னித்து அனைவரையும் விடுதலை செய்தான்!

(முற்றும்)

## பிறரை மதித்துநட

அறுகம் புல்லைப் பார்த்து மூங்கில் சொன்னது உன்னை விட நான் தான் உயரமானவன் என் சொல்லுப்படி தான் நீ நடக்க வேண்டும். அப்படி நடக்காவிட்டால் என் கோபத்துக்கு ஆளாக்கப்படுவாய் என்று மிரட்டியது. மூங்கிலின் மிரட்டலைப் பொருட்படுத்தாமல் அறுகம்புல் சொன்னது என்னைவிட மண் மேடுகள் சிறியவை மண் மேடுகளுக்கு நான் பெரியவன் உனக்கு நான் சிறியவன் என்னை விட நீ பெரியவன் அதேபோல் ஆகாயத்துக்கு நீ சின்னவன் உனக்கு ஆகாயம் பெரியவன். இவர்களின் உரையாடலை கேட்டுக் கொண்டிருந்த தொட்டாச் சிணுங்கி செடி சொன்னது யாரும் பெரியவர் அல்ல யாரை விட யாரும் சிறியவரும் அல்ல.

உயரம் வேறு உயர்வு வேறு

ஜிந்தன்.

## படித்தால் மட்டும் போதுமா?

சிறுபிள்ளைகளின் உடல் வளர்ச்சியில் உடற்பயிற்சி என்பது முக்கியமான ஒன்றாகும். அவர்களது சுறுசுறுப்பான செயற்பாடுகளுக்கும் கல்வி முன்னேற்றத்துக்கும் ஊக்க சக்தியாக விளங்குகின்றது.

பிள்ளைகளை எந்த நேரமும் "படிபடி" எனப் பல பெற்றோர் கூறுவதை அவதானித்திருக்கின்றோம். இதனால் பிள்ளைகள் மனத்தாக்கம் அடைந்து கல்வியில் நாட்டம் இல்லாமல் சோர்ந்து விடுகிறார்கள்.

பிள்ளைகள் விளையாட விரும்பும் நேரங்களில் அவர்களது விருப்பம் போல் விட்டுவிட வேண்டும்.

இதனால் அவர்களது உடலும் மனமும் சுறுசுறுப்படையும். பாடசாலைகளில் காலை நேரங்களில் உடற்பயிற்சி வழங்குவதன் நோக்கம் இதுவே.

ஞாபகசக்தி பெருகுவதற்கும் விளையாட்டு உறுதுணையாக இருக்கின்றது. பிள்ளைகளின் எதிர்காலக் கனவுகள் நிறைவடைய வேண்டும் எனின் அவர்களது எண்ணம்போல் நடப்பதற்கு இடமளிக்க வேண்டும்.

கண்டிப்பு இருக்கும் இடத்தில் பிள்ளைகள் தாங்களாகவே தீய பழக்க வழக்கங்களைப் பெற்றோருக்குத் தெரியாமல் செய்வதற்கு ஆரம்பித்து விடுவார்கள்.

நான்கு நண்பர்களுடன் சேர்ந்து விளையாடும்போது தனக்குள் மறைந்திருக்கும் திறமைகளை வெளிப்படுத்த முனைவார்கள்.

உதாரணமாக தங்களுக்குள் ஓட்டப் போட்டி வைத்து யார் முன்னுக்கு வருகின்றார்கள் என்று பார்ப்பார்கள். அதனால் அவனுக்குள்ளே போட்டியுடன் கூடிய விவேகம் ஏற்படும். தான் முன்னுக்கு வரவேண்டும் என்ற எண்ணம் தோன்றும்.

இவ்வாறான சிறு சிறு விளையாட்டுக்கள் பிள்ளைகளுக்கு நல்லதொரு பாடம் கற்றுக் கொடுக்கிறது.

எனவே பெற்றோர்களே பிள்ளைகள் படித்தால் மட்டும் போதும் என்று நினைக்காதீர்கள் அவர்களை விளையாடவும் அனுமதியுங்கள். எதிர்காலத்தில் சிறந்த வீரன் உங்கள் பிள்ளைதான்.

ஜீவன், மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொடர்கிறது ஜப்பானின் ஆதிக்கம்




நேற்று நடந்த பரபரப்பான இறுதிப் போட்டியில் ஆஸ்திரேலியாவை 1-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி ஜப்பான் சம்பியனானது.

கட்டார் தலைநகர் டோகாவில் 15ஆவது ஆசிய கோப்பை கால்பந்து தொடர் நடைபெற்று வந்தது. நேற்று முன்தினம் இரவு நடந்த இறுதிப் போட்டியில் ஜப்பான், ஆஸ்திரேலியா அணிகள் மோதின. இரு அணிகளும் விட்டுக் கொடுக்காமல் போராட, முதல் இரண்டு பாதியிலும் கோல் எதுவும் அடிக்கப்படவில்லை.

இதையடுத்து போட்டி, கூடுதல் நேரத்துக்கு சென்றது. ஆட்டத்தின் 109 ஆவது நிமிடத்தில் ஜப்பானின் யுடோ நகடோமோ, சக வீரர் தடனாரி லீ இருக்கும் திசை நோக்கி பந்தை அனுப்பினார். இதனை அப்படியே பெற்ற லீ, தனது இடது காலால் ஒரு தட்டு தட்டி சூப்பர் கோல் அடித்தார். இதற்கு ஆஸ்திரேலிய அணியால் பதிலடி கொடுக்க முடியவில்லை.

இறுதியில் ஜப்பான் அணி 1-0 என்ற கோல் கணக்கில் திரில் வெற்றி பெற்றது. இதன் மூலம் ஆசிய கோப்பையை நான்காவது முறையாக வென்று, தனது ஆதிக்கத்தை நிலைநாட்டியது. (15)

## மகளிர் ஒற்றையர் பிரிவு கிம் கிளிஸ்டர்ஸ் கையில்



ஆஸ்திரேலியா ஓபன் ரெனிஸ் போட்டி மெல்போர்ன் நகரில் நடைபெற்று வருகின்றது. நேற்று நடந்த மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் பெல்ஜியம் வீராங்கனை கிம் கிளிஸ்டர்ஸ், சீனாவிலிருந்து முதன் முதலாக கிராண்ட்ஸ்லாம் போட்டி இறுதி ஆட்டத்திற்கு தகுதி பெற்றுள்ள லீ நாவை எதிர்கொண்டார்.

முதல் செட்டை லீ நா கிம்கிள்ஸ்சை 6-3 என்ற செட்டில் வென்று அசத்தினார். ஆனால் சுதாகரித்து ஆடிய கிம் கிளிஸ்டர்ஸ் கடுமையான போராட்டத்திற்கு பின்னர் இரண்டாவது செட்டை 6-3 என்று தனதாக்கினார்.

தொடர்ந்து மூன்றாவது செட்டையும் 6-3 என்ற நேர் செட்டில் வீழ்த்தி ஆஸ்திரேலியா ஓபன் ரெனிஸ் சாம்பியன் பட்டத்தை வென்றார். இது இவருக்கு முதலாவது ஆஸ்திரேலிய ஓபன் ரெனிஸ் பட்டமாகும். ஏற்கனவே இவர் நான்கு முறை கிராண்ட்ஸ்லாம் போட்டியில் சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளார்.

இந்த போட்டி இரவில் நடைபெற்றது. பொதுவாக மெல்போர்ன் நகரம் இரவில் குளிராக இருக்கும் ஆனால் வெப்பமாக இருந்தது. முதன் முதலாக இரவு போட்டியில் கலந்து கொண்ட சீன வீராங்கனைக்கு இது சோகமாக அமைந்துள்ளது. (15)



## ஷேவாக் - கம்பீர் இந்தியாவின் தூண்கள் - லக்ஷ்மன்

கிரிக்கெட் வீரர் லக்ஷ்மன் புதுடில்லியில் பள்ளி நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

இந்திய அணி உலகக் கிண்ணத்தை வெல்ல இந்த தடவை மிகவும் வாய்ப்பு உள்ளது. 1983 ஆம் ஆண்டு சூழ்நிலை இப்போதுதான் இந்திய அணிக்கு அமைந்துள்ளது.

அதிலும் சொந்த மண்ணில் விளையாடுவது அணிக்கு கூடுதல் பலமாக இருக்கும்.




அனுபவம் உள்ள மைதானம், ரசிகர்களின் ஆதரவு என அனைத்தும் இந்தியாவுக்கு சாதகமாக இருக்கும்.

அதே நேரத்தில் இந்தியாவின் வெற்றி, தொடக்க வீரர்களான ஷேவாக், கம்பீர் கைகளில்தான் இருக்கிறது. அவர்கள் மட்டும் சிறப்பாக ஆடி நல்ல தொடக்கத்தை கொடுத்து விட்டால் பின்னால் வரும் வீரர்கள் அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்று விடுவார்கள்- என்றார். (15)

## உலகக் கிண்ணத் தொடரில் எச்.ஐ.வி. விழிப்புணர்வு நடவடிக்கை

அவர்கள் ஆடுகளத்தில் எதிர்த்து விளையாடும் போட்டியாளர்களாக இருக்கலாம். ஆனால், இந்திய ஆரம்ப துடுப்பாட்ட வீரர் விரேந்தர் வேவாக், இலங்கை அணியின் தலைவர் குமார் சங்கக்கார ஆகியோர் ஐ.சி.சி உலகக் கிண்ண சுற்றுப்போட்டியில் முன்னெடுக்கப்படும் அறிவுடன் சிந்திப்போம் என்ற பிரசாரத் திட்டத்திற்காக கைகோர்த்துள்ளார்கள்.

இது யு.என்-எயிட்ஸ், யுனிசெப் ஆகிய அமைப்புக்களுடன் ஒன்றுசேர்ந்து ஐசி.சி. முன்னெடுக்கும் அறிவுடன் சிந்திப்போம் என்ற எச்.ஐ.வி தடுப்பு திட்டத்தின் ஒரு பாகமாக, தகவல் அறிந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள் என்ற ரீதியில் இளைய தலைமுறையை ஊக்குவிக்கிறது.

2001ஆம் ஆண்டு முதல் 2009ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் புதிய எச்.ஐ.வி தொற்று 20 சதவீதத்தால் வீழ்ச்சி கண்டபோதிலும், 2009ஆம் ஆண்டில் நாள்தோறும் 7,000 இற்கு மேற்பட்டவர்கள் தொற்றுக்கு இலக்கானார்கள். அவர்களில் மூன்று பேரில் ஒருவர் 15 இற்கும் 24 இற்கும் இடைப்பட்ட வயதைக் கொண்டவர்கள்.

இந்தப் பொதுச்சேவை அறிவித்தலானது இளைய தலைமுறை தகவல்களை அறிந்து தம்மை எச்.ஐ.வியில் இருந்து பாதுகாத்துக் கொள்ள ஊக்கமளிக்கக்கூடும் என்று நான் நம்புகிறேன். இந்த சுற்றுத்தொடரில்



எனது பிரதான நோக்கமாக அமைவது இந்தியா உலகக்கிண்ணத்தை வெல்வதற்கு உதவி செய்வது என்றபோதிலும், இந்த நிகழ்வின் மரபுரிமைப் பேறாக அமைவது கூடுதலான இளைஞர் யுவதிகள் தத்தமது உறவுகள் பற்றி தயக்கமின்றி பேசுவதற்கும், எச்.ஐ.வியில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வது எவ்வாறு என்ற புரிந்துணர்வை ஏற்படுத்துவதாகும்- என்றார் ஷேவாக்.

அறிவுடன் சிந்திப்போம் திட்டத்திற்காக முன்னின்று பாடுபடும் ஷேவாக், சங்கக்கார ஆகியோர், இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட 2003ஆம் ஆண்டு தொடக்கம் அதற்கு ஊக்கத்துடன் ஆதரவு வழங்கி வந்தார்கள்.

அவர்கள் திட்டம் முன்னெடுக்கப்படும் ஐ.சி.சி. நிகழ்வுகளில் பங்கேற்றதுடன் மாத்திரமன்றி, உலகளாவிய எச்.ஐ.வி தடுப்பு மற்றும் மனவடுத் தடுப்பு செய்திகளையும் ஊக்குவித்து வந்தார்கள். இந்தத் திட்டத்தில் கிரேம் ஸ்மித் (தென்னாபிரிக்கா), ஷக்கிப் அல்-ஹசன் (பங்களாதேஷ்), ராம் நரேஷ் சர்வான் (மேற்கிந்தியத் தீவுகள்) ஆகியோரும் உள்ளடங்குகிறார்கள்.

இந்தப் பொதுச்சேவை தகவல் ஊடாக, எச்.ஐ.வி வியாபகத்தைத் தடுத்து நிறுத்தி, இளைய தலைமுறையைச் சேர்ந்தவர்கள் தகவல் அறிந்து, பகிரங்கமாக பேசி, எச்.ஐ.வியில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள உதவ விரும்புகிறேன்-என்றார் குமார் சங்கக்கார.

போட்டிகளை முன்னின்று நடத்தும் மூன்று நாடுகளிலும் யு.என்-எயிட்ஸ், யுனிசெப் ஆகிய அமைப்புக்களின் துணையுடன் வீரர்கள் உள்ளூர் சமூகக் குழுக்களைசந்திப்பார்கள். முக்கியமான போட்டிகளில் பங்கேற்கும் அணிகளின் வீரர்கள் தத்தமது மேலங்கிகளில் செந்நிறப்பட்டி அணிந்திருப்பார்கள். தேசிய கீதம் இசைக்கப்படும் நிகழ்வுகள் அடங்கலாக போட்டிகள் நடைபெறும் சகல மைதானங்களிலும் எச்.ஐ.வி தடுப்பு பற்றிய தகவல்கள் வழங்கப்படும்.

பங்களாதேஷ், இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளில் ஐ.சி.சி உலகக் கிண்ண பாடசாலை மட்ட நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் வளரும் பருவ மாணவ மாணவியர் அறிவுடன் சிந்திப்போம் திட்டத்தின் கீழ் எச்.ஐ.வி பற்றிய கற்றல் அமர்வுகளில் பங்கேற்றுள்ளார்கள். (15)

## திறமையை வெளிப்படுத்தினால் இந்தியா கிண்ணத்தை வெல்ல முடியும் - கபில் தேவ்

பலம் வாய்ந்த துடுப்பாட்ட வரிசையைக் கொண்டுள்ள இந்திய அணி, உலகக் கோப்பையில் முழுத்திறமையையும் வெளிப்படுத்தினால் சாம்பியன் பட்டத்தை வெல்ல முடியும் என்று முன்னாள் அணித் தலைவர் கபில் தேவ் தெரிவித்துள்ளார்.

உலகக் கோப்பை போட்டியின் போது சனல்-2 குழுமத்தைச் சேர்ந்த் கிரிக்கெட் வானொலிக்கு வர்ணனையாளராக கபில் தேவ் செயற்பட உள்ளார்.

அதற்காக டுபாய் சென்றுள்ள அவர், இதுகுறித்து மேலும் கூறியதாவது:

இப்போதுள்ள இந்திய அணி அனுபவம், இளமை என சமபலம் நிறைந்த அணியாகும். உலக அளவில் எந்த அணியும் கொண்டிராத வலுவான துடுப்பாட்ட வரிசையைக் இந்திய அணி கொண்டுள்ளது. பந்து வீச்சு கொஞ்சம் மோசமாக உள்ளது. எனவே இந்திய வீரர்கள் முழுத்திறமையையும் வெளிப்படுத்தினால் நிச்சயமாக கோப்பையை வெல்ல முடியும் என்றார்.

தோனி என்னை விட சிறந்த அணித் தலைவர். அவர் மிகச் சிறந்த, கிரிக்கெட் வீ[illegible] விரும்பும் எதையும் [illegible] சாதிக்க முடியும் என்று நம்புகி



றேன்.

இந்த உலகக் கோப்பையில் [illegible] கூடியவர்களாக எதிர்பார்க்கப்படும் வீரர்கள் குறித்த கேள்விக்கு அவர் பதிலளிக்க மறுத்துவிட்டார். இந்த முறை 3 அல்லது 4 அணிகள் மற்ற அணிகளை பின்னுக்கு தள்ளிவிட்டு முன்னேறும்.

இங்கிலாந்து மிகச் சிறந்த அணியாக உள்ளது. அதேபோல் இலங்கையும் நம்பிக்கைக்குரிய அணியாக உள்ளது. ஆஸ்திரேலிய அணி பழைய நிலையில் இல்லை. தென்னாபிரிக்க பந்து வீச்சாளர்கள் மிகச் சிறப்பாக பந்துவீசி வருகின்றனர். அவர்கள் எந்த அணிக்கு எதிராகவும் சிறப்பாக விளையாடக்கூடியவர்கள். பாகிஸ்தான் எப்படி விளையாடும் என்பதை கணிக்க முடியாது உள்ளது.

இந்திய அணிக்கு பலமும், பலவீனமும் சொந்த நாட்டு ரசிகர்களின் முன்னிலையில் விளையாடுவதுதான் என்றார் கபில்.

1983 ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக் கிண்ணப்போட்டியில் கபில்தேவ் தனது அபார ஆட்டத்தால் கிண்ணத்தை வென்று இந்தியாவுக்கு பெருமை சேர்த்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கிலாந்தின் கிண்ணக் கனவைக் கலைத்து வெற்றியை மீட்டது ஆஸ்திரேலியா



ஆஷஷ் கிண்ணத்தை பறித்தெடுத்த இங்கிலாந்துக்குப் பதிலடி கொடுக்கக் காத்திருந்தது ஆஸி. நிறைவேற்றிக் கொண்டது பிறிஸ்பேனில் நேற்று.

தொடரின் முன்னிலையில் ஆஸ்திரேலியா என்ற நிலையில் நேற்றைய போட்டி தொடங்கியது.

வெல்ல வேண்டும் என்ற முனைப்பு இங்கிலாந்துக்கு. நாணய சுழற்சியிலும் ஆஸி வெற்றி. முடிவு தாமே துடுப்பெடுத்தாடுவதெனபது.

வொட்சன், ஹடின் களத்தில். சிறப்பான ஆரம்பம். நீண்ட நேரம் நிலைப்பது வொட்சனின் பழக்கமல்ல. 48 ஓட்டங்கள் அணியின் நிலை. வொட்சன் விடைபெற்றார் 16 ஓட்டங்களுடன். வோக்கீஸ் விடை கொடுத்து அனுப்பியவர்.



வந்தவர் மார்ஷ். ஹடின் 37 ஓட்டம். பின் பந்தில் அவரது ஆட்டம் முடிவு. களத்துக்கு வ்ந்தார் தலைவர் கிளார்க். தலைமை பொறுப்பெடுக்க, மார்ஷ் கொலிங்வூட் பந்தில் பவிலியனுக்கு அனுப்பப்பட்டார். தலைவர் நிற்க வைட், ஹஷி மறுமுனையால் களம் வந்து சென்றனர். ஆஸிக்கு வோக்கீஸ் பெரும் தலையிடி. வந்தவர்களை உரிய மரியாதை கொடுத்துத் திருப்பி அனுப்பி வைத்தார்.

கிளார்க் கடந்தார் அரைச் சதம். விடவில்லை நீண்ட நேரம் களத்தில் நிற்க. 54 ஓட்டங் களுடன் வோக்கீஸ் முடிவு கட்டி விட்டார். ஸ்மித் மட்டும் நிலைத்துக் கொள்ள மற்றவர் கள் வெளியேறியதால் முடிந்தது ஆஸியின் இன்னிங்ஸ்.

பந்து வீச்சு வோக்கீஸ் மட்டுமே சிறப்பு. 10 ஓவரும் வீசினார். 45 ஓட்டத்தையும் கொடுத்தார். பெற்றது ஆஸியின் ஆறு விக்கெட்டுகள். 249/10 ஐம்பது ஓவரும் முடிவு.

இலக்கு சிறிதுதான். இருப்பினும் தடுமாற்றம். 'செய் அல்லது செத்துமடி' இங்கிலாந்தின் நிலை. அதுவே தடுமாற்றம் தடக்கி விழ வைத்தது இங்கிலாந்தை.

தலைவர் ஸ்ரோஸ் முதல் கலக்கிய ரொரட் வரை யாருமே சோபிக்க வில்லை. வில்லங்கம் இதனால்தான் இங்கிலாந்துக்கு. ஸ்ரோஸ் மூன்றுடன் கணக்கு முடிக்க, பிரியர் 14 ஓட்டங்களை தட்டித் தடவி பெற்றுக் கொடுக்க ரொரட் பூச்சியம். நிலைமை மோசம். நீக்குவார் யாருமில்லை. பீரர் ஸன்-பெல் ஜோடி. நம்பிக்கை கொடுத்தனர் இங்கிலாந்துக்கு. ஆஸிக்கு தலையிடி கொடுக்கத் தொடங்க பிரித்துவிட்டார் ஹாஸ்ரிங். 95/4 அணியின் நிலை. பரவாயில்லை ரகம் பீரர்ஸன் ஆட்டம். ஓட்டங்கள் 40.

வொட்ஸன்,பொலஞ்சர் இங்கிலாந்து பின் வரிசையை பிளந்தெடுத்தனர். பத்தாவது விக்கெட்டுக்காய் பத்தாத ஓட்ட எண்ணிக்கையைக் கலைத்தது அண்டர்ஸன்-பின் ஜோடி. நின்றாடினால் இழப்பு அதிகம். அதனால் அதிரடி தொடக்கம். புது முகம் பின். பின் வரிசை இவரது இடம். இருந்தாலும் அதிரடி இவன் வசம். 24 பந்துகள் அதில் பெற்றது 35 ஓட்டங்கள். 5 பவுண்டரி ஒரு சிக்ஸர் இதில் அடக்கம். முற்றுப் புள்ளி வைத்தது வொட்ஸன் பந்து. முடிவுக்கு வந்தது இங்கிலாந்தின் ஆட்டம். 51 ஓட்டங்களால்,தோல்வி. இதனால் சென்றது தொடர் ஆஷி வசம். ஆட்ட நாயகன் மட்டும் இங்கிலாந்தின் வோக்கீஸ். (15)

# சம்பியனானார் டிஜோகோவிக் !



ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடரின் ஆண்கள் பிரிவு இறுதியாட்டத்தில் வெற்றிபெற்ற நோவாக் டிஜோகோவிக், 2011ஆம் ஆண்டுக்கான ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் கிண்ணத்தையும் தனதாக்கிக் கொண்டார்.

ஆஸ்திரேலியாவில் நடந்து வந்த ஓபன் டென்னிஸ் தொடரின் இறுதிப் போட்டி நேற்று நடைபெற்றது.

தரவரிசையில் மூன்றாவது இடத்திலிருக்கும் செர்பிய வீரர் நோவாக் டிஜோகோவிக், தரவரிசையில் ஐந்தாவது இடத்திலிருக்கும் ஜேர்மன் வீரர் அன்டி முர்ரேயை எதிர்கொண்டார்.

போட்டியின் ஆரம்பம் முதல் அதிரடியாக ஆடிய நோவாக், எதிராளியைக் கடுமையாகத் தாக்கினார்.

முதல் செற்றை 6-4 என்ற கணக்கில் சற்றுப் போராடி வென்ற நோவாக், அடுத்த இரண்டு செற்களையும் 6-2, 6-3 என்ற கணக்கில் இலகுவாக வெற்றிகொண்டார்.

ஆட்டத்தின் இறுதியில் 6-4, 6-2, 6-3 என்ற செற் கணக்கில் போட்டியில் வெற்றிகொண்ட நோவாக், 2011ஆம் ஆண்டுக்கான ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டார்.


# ஈடன் கார்டன்ஸ் மறுபேச்சுக்கே இடமில்லை

**ஐ.சி.சி. காட்டம்**

கொல்கத்தா, ஈடன் கார்டன் மைதானத்தில் நடக்கவிருந்த பெப்ரவரி 27ஆம் திகதி இந்தியா-இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி இரத்து செய்த முடிவை திரும்பப் பெற இயலாது என்று சர்வதேச கிரிக்கெட் வாரியம் திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

குறிப்பிட்ட திகதிக்குள் கட்டுமானப்பணிகளை முடித்து ஐ.சி.சி.யிடம் மைதானத்தை ஒப்படைக்காததால் ஈடன் கார்டன்ஸ் போட்டி இரத்து செய்யப்பட்டது. இதனையடுத்து மேலும் கால அவகாசம் கேட்டு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் ஐ.சி.சி.யிடம் முறையீடு செய்திருந்தது.

இந்த நிலையில் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத் தலைவர் மனோகரிடம், ஐ.சி.சி. தலைமைச் செயலதிகாரி ஹருன் லோர்கட், மைதானத்தை பெப்ரவரி 7ஆம் திகதி ஐ.சி.சி.யிடம் ஒப்படைக்கும் முடிவை ஐ.சி.சி. ஏற்காது என்று மின்னஞ்சல் மூலம்



தெரிவித்ததாகத் தெரிவித்தார்.

மீதமுள்ள 3 போட்டிகளையும் இடம் மாற்றுவதைத் தவிர்க்க தற்போது மைதானத்தின் கட்டுமானப்பணிகளை விரைவில் முடிக்க வேண்டிய நெருக்கடியில் பெங்கால் கிரிக்கெட் சங்கம் உள்ளது.

ஐ.சி.சி.யின் இந்த முடிவால் கொல்கத்தா ரசிகர்கள் இந்தியா விளையாடும் போட்டியை நேரில் காணும் வாய்ப்பை இழந்துள்ளனர். (15)




19 நாள்களே

உதயன் உலகக்கிண்ண
கொண்டாட்டம் உங்களுடன்

உலகக்கிண்ணப் போட்டிகள்.
எதிர்பார்க்கின்றோம் உங்கள் எழுத்துக்களை.
பார்த்த அனுபவங்கள். ரசித்த போட்டிகள்.
எழுந்த எண்ணங்கள். எழுதுங்கள்....
எழுதுங்கள்..... எழுதிக் குவியுங்கள்.
சிறந்ததற்கு உண்டு பரிசு .

"உலகக் கிண்ண வாசகர் கணை"
தபால் உறையின் இடது மேல் மூலைக்குறிப்பு.
உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


# இலங்கை - மேற்கிந்தியத் தீவுகள் கொழும்புக் களத்தில் இன்று மோதல்

இலங்கை - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான ஒருநாள் கிரிக்கெட் தொடரின் முதலாவது மோதல் இன்று கொழும்பில் நடைபெறவுள்ளது.

இலங்கைக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள டெரன் சமி தலைமையிலான மேற்கிந்தியத் தீவுகள் அணி, சங்கக்கார தலைமையிலான இலங்கை அணியுடன் 3 போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடவுள்ளது.

இத்தொடரின் முதலாவது போட்டி, கொழும்பு எஸ்.எஸ்.சி. மைதானத்தில் இன்று காலை 10 மணிக்கு ஆரம்பமாகிறது.

உலகக் கிண்ணத் தொடர் அடுத்தமாதம் ஆரம்பமாகவுள்ள நிலையில், இத்தொடர் இரு அணிகளுக்கும் பயிற்சி ஆட்டமாகவும் அமையும் அதேவேளை, இத் தொடர் மூலம் போட்டியில் இரு அணிகளும் தமது மனோபலத்தை வலுப்படுத்தும் முகமாக வெற்றிக்காகவே போராடும்.

எனவே, இத்தொடரின் இன்றைய ஆட்டம் போராட்டம் நிறைந்த மோதலாகவே காணப்படும் என்பது தெட்டத்தெளிவு.

[illegible] இத்தொடர் மழை காரணமாகப் பிற்போடப்பட்டிருந்தமை [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதய அஞ்சலி



யா/கதிரிப்பாய் சுப்பிரமணிய வித்தியாசாலை அதிபர் த.உதயநாதன் அவர்களின் அன்புத் தந்தை

**நாகமுத்து தம்பிராசா**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர்,
கோப்பாய் கோட்ட அதிபர் சங்கம்.

## மரண அறிவித்தல்

### சரவணமுத்து அண்ணாமலை

**(இளைப்பாறிய கிளைமுகாமையாளர் அச்சுவேலி ப.நோ.கூ.சங்கம்)**



நெல்லியோடை, அச்சுவேலி தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட சரவணமுத்து அண்ணாமலை 29.01.2011 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து- மனோன்மணி தம்பதியரின் புத்திரனும், காலஞ்சென்ற தியாகராசா- இரத்தினவல்லி தம்பதியரின் மருமகனும், புனிதவதியின் அன்புக்கணவரும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, பாலசுப்பிரமணியம், தையல்நாயகி ஆகியோரின் சகோதரனும், கலைமதி(கனடா), கலைச்செல்வன் (கணக்காளர், பிரதேசசெயலகம், வவுனியா), கலைவாணி (ஆசிரியை, அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயம்), கலைச்செல்வி (ஆசிரியை, நீர்கொழும்பு விஜயரத்தினம் மாகாவித்தியாலம்), கலையோதி (ஆசிரியை, முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், வரதராஜன், பிறேமிளா, வைகுந்தநாதன், ஜெயகாந்தன், யோன்சன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஆதித்தியன், ஆரபி, கலைநாதன், அர்ச்சனா, விவர்னிகா, நதுமிதா, சஞ்சய், சுஜித், அபினன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 01.02.2011 செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று ஆவரங்கால் கருதடி இந்து மயானத்தில் பூதவுடல் தகனஞ் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

0783257566, 0771372259 தகவல்: குடும்பத்தினர்.

## போலி விஸாவுடன் இத்தாலி செல்லமுயன்ற இரு யாழ்.இளைஞர் கைது

கொழும்பு, ஜன. 31

போலி வீசாக்களைப் பயன்படுத்தி இத்தாலி செல்ல முயன்ற இரண்டு யாழ்ப்பாண இளைஞர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இத்தாலியிலிருந்து கிடைக்கப் பெற்ற வீசாக்களைப் பயன்படுத்தி பயணம் செய்யவிருந்த இளைஞர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

வீசா ஆவணங்களில் காணப்பட்ட குழப்ப நிலைமையினால் சந்தேகத்தின் பேரில் குறித்த இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்கள் இரகசிய பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதாக குடிவரவு குடியகல்வுத் திணைக்கள சிரேஸ்ட அதிகாரி ஐ.என்.எம். பெரேரா தெரிவித்துள்ளார். (ஐ)


### ஆங்கில ஆசிரியர் தேவை

உடனடியாக

யாழ்ப்பாணம், கே.கே.எஸ் வீதியில் உள்ள கல்விய கத்தில் Spoken English கற்பிப்பதற்கு ஆங்கில ஆசிரியர் தேவை. உடனடி தொடர்பு:-021 222 0555

### மணமகள் தேவை

இந்து சமய கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1975 ஆம் ஆண்டு பரணி நட்சத்திரத்தில் பிறந்த, (மொத்தபாவம் 25) தனியார் நிறுவனம் ஒன்றில் விற்பனை பிரதி நிதியாக உள்ள மணமனுக்கு மணமகள் தேவை.

தொடர்புகளுக்கு: 0726995364

### கார் விற்பனைக்கு

TOYOTO COROLLA VAGON, 15-XXXX A/C உடன் வெள்ளை நிற கார் உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 0770711388, 021 4911529


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில்
17 ★ 09 ★ 1942



ஆண்டவன் அடியில்
01 ★ 01 ★ 2011

### ஜி.தார்சில்டா (ராசாத்தி)

*"இன்றுடன் நீங்கள் பிரிந்து 31 ஆம் நாள் ஆனால் என்ன! உங்கள் உருவம் தான் மறைந்தது ஆனால் உங்கள் அழகான புன்சிரிப்புமுகம் எங்கள் மனங்களில் இருந்து மறையவில்லை"*

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக புனித தோமையார் ஆலயத்தில் இன்று (31.01.2011) திங்கட்கிழமை காலை 6.15 மணிக்கு இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நிரந்தர முகவரி: செம்பியன்பற்று வடக்கு.
தற்காலிக முகவரி: 4 ஆம் குறுக்குத்தெரு, அந்தோனியார் கோயிலடி, பருத்தித்துறை.

குடும்பத்தினர்,
மகள்
அமிர்தநாயகம் பெப்சி.

## மரண அறிவித்தல்

### பரமசாமி தில்லைநாதன்



ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும், சுவிற்சலாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட பரமசாமி தில்லைநாதன் நேற்று (30.01.2011) ஞாயிற்றுக்கிழமை சுவிஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பரமசாமி - கனகம்மா தம்பதியரின் மகனும் இராசமணியின் அன்புக்கணவரும், கோடீஸ்வரி, காலஞ்சென்றவர்களான கோபாலசிங்கம், சரோஜினி, சண்முகலிங்கம், நவரத்தினராசா, நடேசபிள்ளை, கிருஸ்ணராஜா மற்றும் சதானந்தன், அருச்சுனராஜா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

0041 616928925.

ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



திருமதி

### விஜயகுமார் சறோஜினிதேவி

பத்துத் திங்கள் எமைச் சுமந்த தாயே- நீ சென்று
நாள்கள் முப்பத்தொன்று கடந்து போனதுவே
எங்கு நோக்கினும் உன் வதனம்- தாயே
என்று தீருமோ எம் துயரம்
செழிப்போடு சிறப்பாக நாம் வாழ
விழிப்புடனும் களிப்புடனும் இல் காத்த தாயே!

உறவெல்லாம் தேடுதம்மா உன் முகத்தை- எம்
நெஞ்சமதை வாட்டுதம்மா உன் பிரிவு- எம்
ஈரவிழி காயாது எந்நாளும் மறுபடியும்
பிறந்திங்கு நீயும் வா தாயே!



மண்ணில்
1956.05.24

விண்ணில்
2011.01.01

கடந்த 01.01.2011 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவியின் மரணச் செய்தி கேட்டு ஓடோடி வந்து உதவியவர்களுக்கும், ஆறுதல் கூறியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், ஆறுதல் கூறி ஆகாரம் அளித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் வழங்கியவர்களுக்கும், தொலைபேசி, கடிதம், இணையத்தளம் மூலமாக ஆறுதல் கூறியவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு,

இன்று (31.01.2011) திங்கட்கிழமை மு.ப.10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

★ இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

என்றும் நினைவில்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொடரட்டும் கலைப்பணி



அளவெட்டி மத்தியைச் சேர்ந்த

**நடராசா சிறீஸ்கந்தராசா**
(ரில்சிறீ)

அவர்கள் 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற லங்காபெல் (சிறகுகள்) பாடலாக்கப் போட்டியில் (ஒரு தாய் மக்கள்) ப்ங்கு பற்றி தேசிய மட்டத்தில் இரண்டாமிடம் பெற்றுள்ளார். 2009 ஆம் ஆண்டும் தேசிய மட்ட பாடலாக்கப் போட்டியில் 3 ஆம் இடம் பெற்றதும் குறிப்பிடத்தக்கது. அவரின் வெற்றியால் மகிழ்ச்சியடைவதோடு அவரின் கலைப்பணி மேலும் தொடர வாழ்த்தும்,

அவளைபுநர்
நலன் விரும்பிகளுடன்
மகாஜன சபைக் கலைஞர் வட்டம்.

(110049)

## பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் தேவை

எமது இல்லத்திலுள்ள மாணவர்களுக்கு தரம் 8 முதல் 11 வரை தமிழ், ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம், வரலாறு போன்ற பாடங்கள் கற்பிக்கும் ஆசிரியர்கள் உடனடியாகத் தேவை.

அருகிலுள்ளவர்கள் நிர்வாக உத்தியோகத்தருடன் தொடர்புகொள்ளவும்.

வேதனம் பேசித் தீர்மானிக்கப்படும்.

**தர்மகர்த்தா சபையினர்,**
ஸ்ரீ பரமானந்தா சிறுவர் முதியோர் இல்லம்,
வதிரி, கரவெட்டி.
தொ.பே. : 021 226 3520, 021 321 5156

(சி/575519)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சிறிகாந்தராசா பராசக்தி



மண்டைதீவைப் பிறப்பிடமாகவும், ஜீ.பி. எஸ். லேன், கல்வியங்காட்டை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிறிகாந்தராசா பராசக்தி நேற்று (30.01.2011) ஞாயிற்றுக் கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிறிகாந்தராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான திருநாயகம், சபாபதிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும், சங்குவதி, செல்லம்மா, விசுவநாதன் ஆகியோரின் மைத்துனியும், தில்லம்மாவின் சகலியும், சிறிகாந்ததேவி (யாழ்.மாவட்ட கூட்டுறவுச்சங்க அச்சகம்), சிறீபத்மநாதன் (வேலணை, பிரதேச சபை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், இராசேஸ்வரி (உப தபால் அதிபர், ஆனைப்பந்தி) அவர்களின் அன்பு மாமியாரும், சிறிலக்ஷனின் (யா/பொஸ்கோ, 5ஆம் ஆண்டு மாணவன்) அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (31.01.2011) திங்கட் கிழமை மு.ப 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருநெல்வேலி பாற்பண்ணை இந்து மாயனத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஜீ. பி.எஸ் ஒழுங்கை,
கல்வியங்காடு.

தகவல்:
(110179) சிறீபத்மநாதன் (மகன்).

### திருமதி கமலேஸ்வரி இரத்தினசிங்கம் (மணி அன்ரி)



கலட்டி, பிறவுண் வீதியைப் பிறப்பிடமாகவும், அண்ணாமலை வீதி, சுதுமலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலேஸ்வரி இரத்தினசிங்கம் கடந்த (29.01.2011) சனிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ப.சி. சரவணமுத்து - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற இரத்தினசிங்கம் (கிளாக்கர்) அவர்களின் அன்பு மனைவியும் இரத்தினேஸ்வரன் (மோகன்- கனடா), காலஞ்சென்ற மணிவண்ணன் (முன்னாள் ஆசிரியர், யாழ். இந்துக்கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயும் சுயாதா (கனடா), உமையாள் (யா/சுதுமலை சின்மயபாரதி வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஹரிகரன், அனுசியா, சியாமளன், துளசி, ஹரிகரன், பூரணி சியாமளன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சியாமளன், ஆதிரனின் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (30.01.2011) ஞாயிற்றுக்கிழமை பி.ப 3 மணியளவில் தாவடி இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அண்ணாமலை வீதி,
சுதுமலை.

தகவல்:
(110174) உமையாள் மணிவண்ணன்.

## அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், ஜன.31

யாழ். பாண்டியன்தாழ்வு ஸ்ரீ நரசிம்ம ஞான வைரவர் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் எட்டாம் திகதி நிறைவுபெறும். எதிர்வரும் 7ஆம் திகதி திருமஞ்ச திருவிழாவும் மறுநாள் வைரவ சாந்தியும் இடம்பெறும்.

(ற-26)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி புவனேஸ்வரி சச்சிதானந்தம்
(புலோலி)

புலோலி தெற்கு, புற்றளையைச் சேர்ந்த திருமதி புவனேஸ்வரி சச்சிதானந்தம் கடந்த 29.01.2011 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னையா மற்றும் பாறுபதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் சச்சிதானந்தத்தின் அன்பு மனைவியும் மதிவதனன், ஜெகஜீவன் ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான ஈஸ்வரி, கந்தப்பு, பாலச்சந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.01.2011) திங் கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் புலோலி ஆனைவிழுந்தான் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புற்றளை, புலோலி தெற்கு,
புலோலி.
0773556480

தகவல் :
சச்சிதானந்தம்.
(சி/575517) (கணவர்)

### கதிர்காமு விநாயகம்பிள்ளை

பிராமண வீதி, தும்பளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிர்காமு விநாயகம்பிள்ளை நேற்று (30.01.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் லஞ்சென்ற சிவயோகத்தின் அன்புக் கணவரும் செல்வேந்திரம், சுமதி, காலஞ்சென்ற நாகேந்திரம் மற்றும் ஜெகதாம்பாள், ஜெயராணி ஆகியோரின் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.01.2011) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் பிற்பகல் 4.00 மணியளவில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்.
(சி/575521) தொ.பே. : 021 226 4486

### திருமதி மாணிக்கம் தெய்வானைப்பிள்ளை

கொடிகாமம், அல்லாரை வடக்கைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி கந்தசுவாமி கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மாணிக்கம் தெய்வானைப்பிள்ளை நேற்று (30.01.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா மாணிக்கத்தின் அன்பு மனைவியும் பூபாலசிங்கம், பூலோகநாயகி, பூலோகராணி, பூலோகநாதன், பூலோகஇந்துராணி ஆகியோரின் அன்புத் தாயாரும் லட்சுமிதேவி, ஜெயராசா, நற்குணராசா, புனிதவதி, சிவசுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.01.2011) திங்கட்கிழமை பி.ப 2.00 மணிக்கு நீர்வேலி, செம்பாட்டுப் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் உள்ள இளைய மகனின் இல்லத்தில் நடைபெற்றுத் தகனக்கிரியைக்காக பூதவுடல் நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செம்பாட்டுப் பிள்ளையார் கோயிலடி,
நீர்வேலி.

தகவல்:
(சி/575521) குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைப் பிரிவில் கிராமிய சுகாதாரத் தொண்டராக சேவையாற்றும் செல்வி க. புஸ்பலதா அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி கனகலிங்கம் புவனேஸ்வரி**


அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னாரின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும்அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப் பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சுகாதார வைத்திய
அதிகாரி பணிமனை,
சாவகச்சேரி.

(575522) வைத்திய அதிகாரியும் மற்றும் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.

## மரண அறிவித்தல்கள்

### ஆறுமுகம் பாலசுப்பிரமணியம்
(ஓய்வுபெற்ற தபாலதிபர்)



தன்னை, களபூமி, காரைநகரைப் பிறப்பிடமாகவும் 55/7, சபாபதி வீதி, தலையாழி, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் பாலசுப்பிரமணியம் நேற்று (30.01.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி ஆறுமுகம் தம்பதியரின் அன்பு மகனும் பரமேஸ்வரியின் (ஓய்வுபெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும் வசந்தி, (ஓய்வுபெற்ற எழுதுவினைஞர்), பவானி (வைத்தியர்), நந்தினி (பொறியியலாளர்), காலஞ்சென்ற பாலசரஸ்வதி மற்றும் சிவசங்கர் ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.01.2011) திங்கட் கிழமை பிற்பகல் 4 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தலையாழி,
கொக்குவில்.

தகவல் :
(சி/575517) மனைவி, பிள்ளைகள்.

### திருமதி கனகலிங்கம் புவனேஸ்வரி



எழுதுமட்டுவாழைப் பிறப்பிடமாகவும், மடத்தடி வீதி, கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கனகலிங்கம் புவனேஸ்வரி நேற்று (30.01.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகலிங்கத்தின் அன்பு மனைவியும், புஸ்பலதா, காலஞ்சென்ற காஞ்சனாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், இராமர், இலட்சுமணன், யோகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.01.2011) திங்கட்கிழமை பி.ப 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வேவில் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மடத்தடி வீதி, கொடிகாமம்.

தகவல்:
(110176) குடும்பத்தினர்.

### திருமதி ஜேசுதாஸன் சகாயநாயகி (அமுதா)
(பல்கலைக்கழக ஊழியர்)



சொலமன் வீதி, கொய்யாத் தோட்டம் மற்றும் திருநகரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜேசுதாஸன் சகாய நாயகி (அமுதா) நேற்று (30.01.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வின்சன் - பிலோமினா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - திரேசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், ஜேசுதாசனின் அன்பு மனைவியும், வசந்தன், சைலா, கோபி (பிரான்ஸ்), சுபா, தீபா ஆகியோயின் அன்பு தாயும், ஜெனிற்றா, துதி, சுசி, நேசன், உதயா ஆகியோரின் அன்பு மாமியும், அமுதன், ஜோய், ஜெனிவா, எபிஸி, விதுசாவினி, ஷெரின் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

சொலமன் வீதி, கொய்யாத்தோட்டம்

தகவல்:
(110171) குடும்பத்தினர்.

### திருமதி சபாவதி பரமேஸ்வரி



சாவகச்சேரி, தபாற்கந்தோர் வீதி, முதலாம் .ஒழுங்கையைச் சேர்ந்த திருமதி சபாவதி பரமேஸ்வரி நேற்று (30.01.2011) ஞாயிற்றுக்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்ற சபாவதியின் அன்பு மனைவியும் கனகசபாபதி, கண்ணபிரான், தாண்டோண்டீஸ்வரன், முருகதாஸ், லோகேஸ்வரி, கிருஷ்ணபூபதி, மல்லிகா, சுகந்தி ஆகியோரின் பாசமிகு தாயாரும் கனகம்மா, சிவகாமி (தேவி), கௌரி, நீலா, சிதம்பரநாதன், அமரசிங்கம், சிவகுமார், காலஞ்சென்ற அருந்தவராசா ஆகியோரின் அன்பு மாமியும் அ.செல்லையா, அ.இராசையா ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.01.2011) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முதலாம் ஒழுங்கை,
தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.

தகவல் :
(சி/575516) குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீளக்குடியமர்த்த நடவடிக்கை எடுக்குமாறு நிருபமாவுக்கு முறிகண்டி மக்கள் மகஜர்

கொழும்பு, ஜன. 31

வன்னி, முறிகண்டிப் பிரதேசத்தில் இன்னமும் மீள்குடியேற்றப்படாதுள்ள மக்கள், தம்மை தாமதமின்றிமீள்குடியேற்றுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரி இந்திய வெளிவிவகாரச் செயலர் நிருபமாராவுக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

இதுவரை மீள்குடியேற்றம் செய்யப்படாமையால் அங்குள்ள தமது காணிகள் பறிபோய் விடுமோ என்று அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் அச்சம் வெளியிட்டிருக்கின்றார்கள். அந்தப் பகுதிகளில் தம்மை மீள்குடியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் மீண்டும் கோரிக்கை விடுத்திருக்கின்றார்கள்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் மகஜர் அனுப்பியுள்ள இந்தப் பகுதி மக்கள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்.சிவசக்தி ஆனந்தனையும் சந்தித்து தமது மீள்குடியேற்றம் தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரியிருக்கின்றார்கள்.

இந்த மக்களின் கோரிக்கை குறித்து அரசுக்கும் தமிழ்த்தேசிய கூட்டமைப்புக்கும் இடையே வரும் 7 ஆம் திகதி நடைபெறவுள்ள சந்திப்பின்போது பேச்சுக்கள் நடத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்.சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளர்.

இடம்பெயர்ந்த நிலையில் மெனிக்பாம் முகாமிலும் உறவினர் நண்பர்களது வீடுகளிலும் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த இந்த மக்கள் பல்வேறு பற்றாக்குறைகளையும், வசதியீனங்களையும் எதிர்நோக்கி வருகின்றனர் என அந்த மக்கள் கூறுகின்றனர்.

போர் நடைபெற்ற வன்னிப் பிரதேசத்தைச் சேர்ந்த பகுதிகளில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டதும் அந்த இடங்களில் மக்களை அரசு மீள்குடியேற்றம் செய்து வருகின்றது. இடம்பெயர்ந்து மெனிக்பாம் முகாமில் தங்கியுள்ள சுமார் 20 ஆயிரம் பேர் இன்னும் மீள்குடியேற்றம் செய்யப்படவுள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர்.

எனினும், கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ள போதிலும் முறிகண்டிப் பிரதேசத்தில் அரசு தனது தேவைக்காகக் குடியிருப்பு காணிகளை எடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

இதனை அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்களும் அரசியல் கட்சிகளும் ஆட்சேபித்திருந்தன. அத்துடன் கடந்த முறை இலங்கைக்கு விஜயம் செய்திருந்த இந்திய வெளிவிவகாரச் செயலாளரின் கவனத்திற்கும் இந்த விடயம் கொண்டு வரப்பட்டு, உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தமை தெரிந்ததே.

(சி)

அதிபர்களே! ஆசிரியர்களே!
19.... பக்கத்தில் உங்களுக்கு

# 50 நாள்களில் அறுவடை மரக்கறிச் செய்கைத் திட்டம்

50 நாள்களில் அறுவடையைப் பெற்றுக்கொள்ளக் கூடிய விரைவான மரக்கறி செய்கைத் திட்டம் ஒன்றை விவசாய அமைச்சு ஆரம்பித்துள்ளது. கடந்த கால மழை வெள்ளத்தால் மரக்கறிப் பயிர்ச்செய்கைக்குப் பாதிப்பு ஏற்பட்டதன் காரணமாக எதிர்காலத்தில் மரக்கறி வகைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டே இந்தச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

இதன்படி, மாத்தளை, கண்டி, நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் இந்த விரைவான மரக்கறி உற்பத்தி மேற்கொள்ளப்படவுள்ளது என அமைச்சின் செயலாளர் கே.ஈ.கருணாதிலக தெரிவித்தார்.

(சி)


ஜெய் குருதேவ்



ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் குருஜி அவர்களின்

வாழும்கலை பயிற்சி

சுதர்சனகிரியா, மூச்சுப்பயிற்சி, தியானம், யோகா ஆரம்பம்

காலம்:-நாளை (01.02.2011) செவ்வாய்க்கிழமை
இடம்:- இல132, பலாலி வீதி, யாழ்ப்பாணம் (அம்மன் வீதி அருகில்)
நேரம்:- மாலை 4.50 மணி

அனைவரையும் தவறாது சமுகமளிக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

ஜெய் குருதேவ்

(110178) தொடர்பு:- 0770474757, 0777222133, 0779492589


## மரண அறிவித்தல்



### திருமதி இலட்சுமி பாலசிங்கம்

சித்தங்கேணியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி இலட்சுமி பாலசிங்கம் நேற்று (30.01.2011) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.01.2011) திங்கட்கிழமை அவரின் மூத்தமகன் பா. லோகப்பிரகாசத்தின் இல்லத்தில் நடைபெற்று, பி.ப 2 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக வழுக்கையாற்று இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(110184)

ஆலங்குளாய், சண்டிலிப்பாய்.

தகவல்:
மகன் பா. லோகப்பிரகாசம்.

## 49ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 10 ★ 07 ★ 1979 | யேசுராசா ஜெயக்குமார் (ஜெகன்) | 14 ★ 12 ★ 2010 |



கடந்த 2010.12.14 அன்று இறைபதம் அடைந்த யேசுராசா ஜெயக்குமாரின் வீட்டுக்கிருத்தியம் இன்று (31.01.2011) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் இந்நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்.

6ஆம் ஒழுங்கை, முத்தமிழ் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம்.

தகவல் :
குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### திருமதி விஜயகுமார் சறோஜினிதேவி

மண்ணில் 1956.05.24 | விண்ணில் 2011.01.01

அன்பின் அணிகலனாக
பாசத்தின் உறைவிடமாக விளங்கி
எம்மையெல்லாம் வழிநடத்தி
அன்பையும் அரவணைப்பையும்
எமக்கு ஊட்டி வளர்த்து
எமக்கெல்லாம் வழிகாட்டியாக
இருந்த எனது அன்புச் சகோதரியே
இந்நாளில் நினைவு கூருகின்றேன்.

அன்புத் தம்பி
கு.குமாரவதனன்.

பிரான்ஸ்.


## பதவி வெற்றிடம்

(பாதுகாப்பு உத்தியோகத்தர்)

பகல், இரவு நேரத்தில் பாதுகாப்பு உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

* வயதெல்லை கணிக்கப்பட மாட்டாது.
* அனுபவத் தகுதியின் அடிப்படையில் கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
* தகுதித் தராதரச் சான்றிதழ்களுடன் கீழே குறிப்பிட்ட முகவரிக்கு நேரில் 31.01.2011 பி.ப. 2.00 மணிக்கு வரவும்.

392/6, நாவலர் வீதி,
உதயன் விடுதி,
யாழ்ப்பாணம்.

(சி-575502)

## UK-London

மார்ச் - 31 வரை மட்டும் அற்புதமான இறுதிச் சந்தர்ப்பம்

31-மார்ச்சுக்குப் பின் UK செல்லும் மாணவர்களுக்கான சட்டம் கடினமாக்கப்படுகிறது. (உ+ம் : IELTS - 5.5 Must) ஆகவே

ஆங்கிலம் தெரியாத- (O/L) படிக்காத எல்லோரும் UK செல்வதற்கான இறுதியான சந்தர்ப்பம் இது.

2011- January கல்வி ஆண்டுக்கு UK London (VISA) பெற்ற மாணவர்களில் சிலர்,




1) VISA - 3½ Years.
2) 1st degree இலங்கையில் முடித்தவர்கள் குடும்பத்தோடு செல்லும் வாய்ப்பு.
3) மிகக்குறைந்த செலவில் Bank Sponser வசதிகள்
4) Courses :- Certificate - Diploma, Degree, Post Gradute etc...
5) 100% VISA உத்தரவாதம்
6) Course Fees - நேரடியாகக் கல்லூரிகளில் செலுத்தும் வசதி
7) London இல் கல்வி பயிலும் மாணவர்களுடன் தொழில் ரீதியான தொடர்புகள்.
8) VISA பெற்ற மாணவர்களின் பெற்றோர்களுடன் கலந்துரையாடும் வாய்ப்பு.
9) ஆச்சரியப்படும் வகையில் மிகக்குறைந்த செலவில் பயணம்.
10) 3 வாரத்துக்குள் பயணம்

(காலத்தின் அவசியம் கருதி எதிர்வரும் புதன்கிழமை : 02.02.2011 முற்பகல் 10 மணியிலிருந்து K.K.S Road இல் அமைந்துள்ள எமது Jaffna காரியாலயத்தில் விசேட இலவசக் கல்வி கருத்தரங்கு நடைபெறும்).

தொடர்புகளுக்கு :-
Hotline : 0212220555, 0777887181, 0771022984
E-mail : manager@sec.edu.lk, www.sec.edu.lk

SPOT ADMISSION AT JAFFNA OFFICE
கொழும்பு செல்லவேண்டிய அவசியமில்லை

Branch:
SEC (Pvt.) Ltd.,
620, K.K.S. Road,
(நாச்சிமார் கோயிலுக்கு முன்பாக)
T.P : 021-222 0555


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 31.01.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org